త్రిలింగ

సంపుటి 10 సంచికలు 2,3

Oct Nov 1936

3L
O72N,N27 SM
M36.10.2,3
186955

REGD NO. M. 5400.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக.



# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கo. { பலவான்குடி தாது—புரட்டாதி, ஐப்பசி } திங்கள் உ, ௩.

| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 1. | பரம்பரைப் பெருமை .... | 25 |
| 2. | தீண்டாதார் ஆலயப் பிரவேசத்தடை ... | 29 |
| 3. | ஆரோக்கியவழி ... | 37 |
| 4. | தமிழ் தந்த வளம் .... | 40 |
| 5. | கல்யாணப் படித்துறை ... | 45 |
| 6. | பிறை முழுமதியானது ... | 50 |
| 7. | உண்மை அறிவிப்பு ... | 54 |
| 8. | தீண்டாமை ... | 55 |
| 9. | இயற்கை வைத்தியத்தின் மேன்மை ... | 57 |
| 10. | மதிப்புரை மஞ்சரி ... | 61 |
| 11. | அப்பர் படக்காட்சிக்கு ஆதரவு ... | 65 |
| 12. | விநாயக சதுர்த்தியாதிய விரத நிர்ணயம்... | 66 |
| 13. | வையக மதிக்கும் ஐயர் வரவு .... | 67 |
| 14. | விவசாயிகளின் கடன் நிவாரணை ... | 68 |
| 15. | சுலோக பஞ்சக விஷயம் | (61—68) |

ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:-குமாரவிநாயகர் திருக்கோயிலில், புரட்டாதி, ௪௨ விநாயகமகாசதுர்த்தி பூஜையும், ௧௪௨ சதுர்த்தசியில், நடராஜரபிடேகமும், ஐப்பசி அ௨ சரஸ்வதிபூஜையும் செய்யப்பெற்றன. நகரசிவாலயத்தில் புரட்டாதி ௪௨ விநாயகமகாசதுர்த்தியும், ௬௧௨ காப்புக்கட்டி, நவராத்திரிக் கொலுவும், ஐப்பசி ௯௨ விஜயதசமி விழாவும் கொண்டாடப்பெற்றன. ஐப்பசி ௧௨ முதல் துலா புராணம் படிக்கப்பெறுகிறது.

இவ்வூருக்கு ஆவணி ௫௦௨ மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய, கலாநிதி, டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் தமது மாணவர், வித்துவான், பிரமஸ்ரீ கி. வா. ஜெகந்நாதையரவர்களுடன் விஜயமானார்கள். நகரத்தார் அதிப்பிரியமுடன் வரவேற்றுப் பேரவைக்கூட்டிப்பிரசங்கம் புரிவித்தார்கள்.

நன்கொடை:—இவ்வூர் திருவாளர், மெ. வெ. வெ. வேலப்ப செட்டியார் தம் திருவளர் நங்கை அழகம்மைக்கு ஆவணி ௧௫௨ நடைபெற்ற திருமண வைபவத்தில் நம் சிவநேசனுக்கு நன்கொடையாக நாற்பது பணம் உதவினார்கள். மணமக்கள் மனையறமாண்புடன் நன்மக்கட்பேறும் பல்வளமும் மல்கி நல்வாழ்வுறத் திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

திருவாளர், சு. அரு. அருணசலச்செட்டியார் மனைவிமக்களுடன் ஐப்பசி ௧௦௨ லேப்டானுக்குச் சென்றுள்ளார்கள். சுகமே வந்துசேர, சுவாமி துணைபுரிவாராக.

திருத்தென்குடித்திட்டை:— சிவாலயத்தில் புரட்டாதி ௪௨ விநாயகசதுர்த்தி ஆராதனைகருந்திட்டைக்குடி திருவாளர், சிவதக்ஷிணாமூர்த்திபிள்ளையவர்களாலும், ௧௪௨ நடராஜரபிடேகம் துரைசாமி ஐயர் மகள் கமலத்தம்மாளாலும், புரட்டாதி ௬௧௨ முதல் ஐப்பசி அ௨ வரை நவராத்திரிக்கொலுவும் நடந்தேறின.

கோநகர்:-திருவாளர், சு. மு. மஹாதேவமுருகப்பசெட்டியாரவர்களுக்கு ஆவணி ௨௨ நடைபெற்ற அறுபதாண்டு நிறைவு, வைபவத்தைப் பாராட்ட கற்பக விநாயக கலாசாலையில் ஞானசம்பந்த நற்சபை கூட்டப்பெற்றது. சென்னை, மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி, உயர்திரு, டாக்டர், உ. வே. சாமிநாதையரவர்கள் தலைமை வகித்தார்கள். மகாதேவா அவர்களின் மூத்த குமாரர் திருவாளர், பழநியப்ப செட்டியார் வரவேற்புப் பத்திரம் வாசித்து வழங்கினர். தலைவர் மகாதேவ சப்தத்தின் மகிமையைக் கூறினர். திருவாளர்களான: ஆலங்குடி பண்டித அ. கோபாலையர், பலவான்குடி 'சிவநேசன்' இராமசாமி செட்டியார், ஆத்தன்குடி சு. வீர. கதிரேசச் செட்டியார்; அமராவதிபுத்தூர் வயிநாகரம் அ. வேங்கடாசலச் செட்டியார், புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் தமிழ்ப்பண்டிதர் கனகராஜய்யர், கொப்பனபட்டி கலைமகள் கரிலூரித் தமிழ்ப் பண்டிதர் ரெ. இராமமூர்த்தி ஐயர், திருப்பனந்தாளாதீனத்து ஆயிரரூபாப் பரிசு பெற்ற வித்துவான் கி. வா. ஜெகந்நாதையர், சாரண இயக்கத் தலைவர் வேங்கடேசையர் ஆகியவர்கள் பாராட்டிப்பேசினர். திருவாளர்களான; தேவகோட்டை பாலகவி வயிநாகரம் வே. இராமநாதச் செட்டியார், தமது ஜனக பிதாமாதாக்களாகிய மகாதேவா அவர்களையும் மாண்புமிக்கசீதையாச்சியவர்களையும் பாராட்டி இருமுதுகுரவர் காப்பு மாலையை, காரைக்குடி ராம. உ. இராமசாமி செட்டியாரும், வித்துவான் கி. வா. ஜெகந்நாதையரும் வாழ்த்துச் செய்யுட்களை வழங்கினர். பல பெரியார்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்யுட்கள், கடிதங்கள், தந்திகளை கலாசாலை ஆசிரியர், திரு, ப. இராமநாதபிள்ளை படித்தனர். மஹாதேவா மகன் பழநியப்ப செட்டியாரால் அனைவர்க்கும் வந்தனம் கூறப்பெற்றுக்கூட்டம் இனிது நிறைவேறியது.

OFFICE OF THE ... 3 - NOV 1936 ... MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.


# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| ஆண்டு ௰ | தாது—புரட்டாசி, ஐப்பசி.<br>1936—அக்டோபர், நவம்பர். | திங்கள் ௨,௩ |
|---|---|---|


உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## பரம்பரைப் பெருமை.

32 ... 1936

இந் நிலவுலகில் வாழும் மாந்தர் பரம்பரையாக வரும் பெருமையைப் பாராட்டுவ தியல்பாதலின் புகழுக்கணிகலனே போன்று பொலிவுற்று விளங்கும் கனம் செட்டிநாட்டரசரவர்களின் பரம்பரைப் பெருமையை ஈண்டு விளக்கப் புகுந்தேம்.

மன்னர் பின்னராய் வாழ்ந்துவரும் தனவணிகர்களுக்குரிய ஒன்பது நகரச்சிவாலயங்களுள் முதன்மையாக நித்தியகல்யாணி சமேத கைலாசநாதர் திருக்கோயில் கொண்டருளும் இளையாற்றக்குடி பட்டணசாமி பரம்பரை தழைக்க வந்துதித்த பெருந்தகையாரான சாத்தப்ப செட்டியாரின் தவமே தவம். அவர்களின் தவப்பயனைத் தோன்றிய இராமசாமி செட்டியாரவர்களின் பாக்கியமே பாக்கியம். சிற்சபாநாதரின் பொற்சபை புதுக்கிய முத்தப்ப பூபதி முதலானோரைப் புத்திரர்களாகப் பெற்றுவளர்த்த பேற்றினும் அவர் பெறத்தக்க பெரும் பேறு மற்றீதெனை வரைதற்பாற்றோ!

பொலிவுறு புகழுடன் நிலமிசை வாழ்ந்த சிவ புண்ணிய சீலராகிய அண்ணல் முத்தைய செட்டியாரவர்களின் குரு லிங்க சங்கம பக்தியையும் கோடாத நீதிமுறையையும் பரோபகாரப் பண்பினையும் சிறந்த அறச் செயல்களையும் சிவ புண்ணியங்களையும் திருக்கோயில் திருப்பணிகள் செய்த சிறப்புகளையும் எடுத்தியம்புவது பெருவலிமை யுடையார்க்கே ஒருவாறு இயலலாம்.

பேரறிவும் பேராற்றலும் சிறந்து பிறங்கிய அப்பெரியார், தமது அருமைத் துணைவர்களும் சுற்றத்தினரும் மற்றும் தம்மைச் சார்ந்தாரனைவரும் நன்னெறி யொழுகி நல்வாழ்வுடன் திகழ நல்லுரை புகன்று நல்வழிகாட்டி திருநீறுதிய சிவசின்னங்களைத் திடமெனக்கொண்டு பாண்டிநாட்டாசான்பதமலர் பணிந்து ஐந்தெழுத்தோதியருளப் பெற்றனர்; இறைபரசிவத்தோடிரண்டற நிற்கும் மறை முடிவுண்மையை மாண்புற வுணர்த்தும் ஆனகோயிலூர் ஆறுப்பெருமை ஞானதேசிகர் நலனுறு பாடம் நவிலக்கேட்டு தனி சிறப்புற்றனர்; திருக்கார்த்திகைதீபம் திருவண்ணாமலையிலும், திருவாதிரைத் தெரிசனம் திருச்சிற்றம்பலத்திலும் காணும் நியமம் காணியாக் கொண்டனர்; எல்லையில் புகழ்சேர் தில்லையம்பதியில் ஸ்ரீ உமையம்மையார் சமேத திருமூலட்டானேஸ்வரருக்குப் பொற்பணியினும் சிறந்த கருங்கற்பணியைச் சிற்ப நூன்முறையே பொற்புறப் புரிந்தனர்; சிவகாமிநேசனும் சிற்சபேசன் அற்புதத் தனிக்கூத்தாடு பொற்சபையை அழகுறப் புதுக்கிப் புகழ்மிகப் பெற்றனர்; அந்தணராதியோர் வந்தமுதருந்த அறக்கூட்சாலை பெருக்கமாயமைத்தனர்; திருக்கருவூரானிலைத் திவ்ய தலத்தில் கிருபாநாயகி சௌந்தர்ய நாயகி மருவிவாழ் பசுபதீச்சுரர் உறைதரு பெருமைசேர் ஆலயத்திருப்பணி வாலிதா யமைத்தனர்.

இத்தகு சிறப்புகளுடன் நடுநிலையாளராய் நிலவிய உத்தமப் பெரியார், முத்தையப் பெருந்தகையாராகிய பெருந்திருவாளர், ‘பெறுமவற்றுள் யாமறிந்ததில்லை அறிவறிந்த மக்கட் பேறல்லபிற’ என்னும் பொய்யா மொழிக்கு இலக்கியமாக நன்மக்கட் பேறு பெற்றுத் தங்கள் தருமமும் தருமத்தைப் பரிபாலிக்கும் சந்ததியும் தழைத்தோங்கச் செய்தார்கள்.

அவர்களின் புண்ணியப்புதல்வர் நால்வருள் நான்காவதாக, ஞான பானுவாக வந்துதித்தவர் மாநிலமெங்கும் மாகீர்த்திவாணுக மன்னர் மன்னர்கள் மதிக்கச் செட்டிநாட்டர்சராய்த் திகழும் அண்ணாமலையண்ணல். அவர்களின் சீரும், சிறப்பும், பேரறிவும், பேராற்றலும், ஆளுந்திறமையும், தயாளகுணமும், கண்டோர்மனத்தைக்கணத்திற் பிணித்திட்டெண்டிசை மாசை யெழிதிற்பெருக்கித் தன் வயப்படுத்துந்தன்மையும், தொடுத்தவழக்கினிற் றேல்வியுறாது எடுத்த கருமம் இனிது முடித்து வெற்றியேபெற்று விளங்குமேன்மையும் யாவரே எடுத்தியம்ப வல்லார்! இவையாவும் இவர்கட்கே தனிச் சிறப்பமைந்திருத்தலின் இவர்கட்கு இவர்களே யொப்பாவர். ‘தோன்றிற் புகழொடு தோன்றுக’ என்னும் தேவர் திருவாக்குக்கு இவர்களே இலக்கியமாக விளங்குகிறார்கள். மக்கட் குழுவினருள் மிக்க பேராற்றலும் மனவுறுதியும்பெற்று விளங்குபவர்கள் இவர்களேயா மென்பதுமிகையாகாது. இவர்களின் அளப்பரும்ஆற்றலை இவர்கள்பால் பொறாமைகொண்டு புழுங்கு மனத்தினரும் பாராட்டுகின்றன

18695



ரென்றால் நடுநிலையாளர்களும், நல்லன்பர்களும் பாராட்டத்தடையென்னை? யாவரும் பாராட்டுகின்றனர். உலகாளரசினர் இவர்களின் திறனை யறிந்தன்றோ நாளுளும் எற்ற பெற்றிகள் வழங்கினர்; வழங்குகின்றனர்.

பொருளீட்டுந் திறமையினும், ஈட்டிய பொருளைப் போற்றும் முறைமையினும், அப்பொருளைப் பயன்றருசெயல்களில் உதாரமாக வுதவிப் பண்படுத்திக் கொள்வதிலும் இவர்கட்கு இவர்களே நிகராவார்கள். தில்லைக்கூத்தர் திருமுன் குறைபாடாயிருந்த கோவிந்தராஜப்பெருமாள்கோயில் திருப்பணியை நிறைவேற்றினார்கள்; ஆடுவான்கோயிலையும் ஆடல்காண்பான் கோயிலையும் அழகுபடுத்த இவர்கள்மேற்கொண்டமுயற்சிஎளிதல்ல; சைவவைணவர்கள்முரண்பாட்டினால் உயர்நீதி மன்றத்தில் நீண்ட காலமாக வழக்காயிருந்த இக்காரியத்தைச் சமரசப்படுத்தி முடிக்க இவர்களே தகுதியுடையரானார்கள். பர்மாவிலும் இந்தியாவிலும் வாழும் இந்தியர்களின் சார்பாக பர்மாப் பிரிவினையைப் பற்றித் தூது கோஷ்டியின் தலைவராகச் சென்று துரைத்தனத்தாரைக் கண்டு காரிய சித்தி பெற்றுவரவும் இவர்களே தகுதியாளரானார்கள். “கல்வியே மக்கள் தங்கண்” எனக்கொண்டு அண்ணாமலைப்பெயர் அணிமாநகரமும் பல்கலைக் கழகமும் பாங்குடன் நிறுவி, ஆங்கிலத்துடன் தமிழ் மேலோங்கச் செய்தார்கள். இன்னணம் இவர்கள் செய்துள்ள பதிபுண்ணியம், பசுபுண்ணியம், பாசபுண்ணியங்கள் பலவாம். அவைகளைச் சாதிக்க இவர்களின் அபார உழைப்பும் பெரும் பொருட் செலவும் அளவிடற்கரியன.

இவர்களின் அளவில்பேராற்றலைக் கண்ட துரைத்தனத்தார்: ராவ்பஹதூர், ஆனரபிள், சர், ராஜா, டாக்டர், என்பனவாதியசிறப்புப் பெயர்களால் இவர்களின் மேன்மையைப் பாராட்டுவாராயினர். இன்னோரன்னசிறப்புகளிலையைய ‘கல்வியுடைமைபொருளுடைமை யெனாவிரண்டு செல்வமும்’ நிறைந்த ஏற்றமுடைய இவர்களின் பொறை, அடக்கம் ‘காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லனல்லன்’ என்றுகொண்டாடத் தகுந்த மாண்பு, முகமலர்ச்சி, அகமலர்ச்சி, இன்னுரை, ஈகை ஆதிய உயர் குணங்கள் ஏனையோர் நல்லுணர்ச்சி பெறுதற்கு உரியபடிப்பினையாக விருக்கின்றன.

செங்காலத் திருவனைய, ராணியார் சீதையாச்சி, இசைபெற வாழும் இவர்களின் நல்லறமனைவியார்; கற்பினுக்கணியாய் விளங்குபவர்கள்; கணவனுக்கினியவாறு மனையறமாட்சியை மாண்புடன் நடாத்தும் மேன்மை மிக்குடையவர்கள்; ‘ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்சான்றோனெனக் கேட்டதாய்’ எனத்தமிழ் மறை கூறிய பெரும் பயன்பெற்றவர்கள். விருந்து புரந்தரும்பெருந் தண் வாழ்க்கையினராகிய இவர்களின் புண்ணிய பலத்தால் சிறந்த நன்மக்கட்பேறுதிய நல்வளமெல்லாம் நிரம்பப்பெற்றுள்ளார்கள்.

பூம்புகார்நகரில் தனவணிகர்களின் பெருவாழ்வை யுளங்கொண்ட காரணமாகக் குபேரனே வந்துதித்துப் பட்டணசாமியென விளங்கின வரலாறு கொண்டு எல்லா நலனும் இயைந்து விளங்கும் இவர்கள் பரம்பரையானது குபேரபரம்பரையெனக்கூறத் தகும் இயல்பினதாகும்.

மேலான இப்பரம்பரை என்றும் ராஜபரம்பரையாக விளங்கும் பெருமையை நிலைநாட்டிய கண்ணியரான கனம் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களின் புண்ணிய குமாரர்களுள் முதல்வரும் இளவரசரும் - கல்வி, அறிவு, ஒழுக்கம், நற்குண நற்செய்கைகள் யாவும் ஒருங்கே நிரம்பப் பெற்றவரும் 'மகனறிவு தந்தையறிவு' என்ற வாக்கியத்திற்கு அடையாளமாக அறிவாற்றல் மிக்க தந்தையாரின் அரிய பெரிய காரியங்களை யெல்லாம் சிறிதும் தளராது நிர்வகிக்கும் புத்திரரத்னமாயுள்ளவரும் 'மகன்றந்தைக் காற்றுமுதவி இவன்றந்தை என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்' என்ற தமிழ்மறை மொழியைத் தாபிப்பவரும், உத்தமப் பெரியாராகிய முத்தப்ப பூபதியின் பெயரை விளக்கும் பேரரும் ஆகிய மேதகு குமாரராஜா ஆனரபிள் முத்தைய செட்டியாரவர்கள், சென்னை நகராண்மைக் கழகத்திற்குத் தலைவராயிருந்து நன்றாற்றிப் புகழ்பெற்றார்கள்; யாவரும் நன்குமதிக்குந் தகுதி வாய்ந்துள்ளார்கள்; தந்தையார் புகழினும் சதமடங் கதிகமானபுகழுக்குரியராவார்களென்பது அறிவுடைப் பெரியார்களின் ஆழ்ந்த கருத்தின் உண்மை. 'அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்' என்றாங்கு அறிவாற்றலாதிய உயர்நலமெல்லாம் ஒருங்கேபெற்றுச்சிறந்துவிளங்கும் திருவாளர், குமாரராஜா முத்தையசெட்டியாரவர்களை சென்னை மாகாண அரசியலார் மன்னவைக்குரிய மந்திரியாகத் தேர்ந்து இவ்வுயர்பதவியை அவர்கட்கு அளித்துள்ளார்கள். இதுமிகப்பொருத்தமும் போற்றற்பாலதுமாம். இங்ஙனம் மேலாந்தகுதியுடையாரைத் தேர்தலே யாவராலும்ஒப்பத்தகுந்தது. பொதுவாகத்தேசமக்கள்யாவரும், சிறப்பாக தனவணிக நகரத்தார்களும் இச்சிறப்பு தத்தமக்குரியதேபோன்று அளவிலாமகிழ்ச்சியுறுகின்றனர். இவர்கள்மந்திரியாகியமகிழ்ச்சியையடுத்து மன்னர்பெருமானுக்கு முடிசூட்டு வைபவமும் நடைபெறவிருத்தலையுன்னிப்பார்க்கும்போது இவர்கள் மந்திரியானதிலிருந்து நாட்டுமக்கட்கும் நாடாளரசர்க்கும் நன்மையே சிறக்குமென்பது நன்கு விளக்கமாகிறது. இவையாவும் கண்டார்க்கருளும் கனகசபாபதியின் திருவருளே எனக்கொண்டு பரம்பரைச்செல்வர்களாக விளங்கும் கனம் ராஜா சர் அவர்களும் அரசினர்க்குகந்த மதிமந்திரியவர்களும் பரம்பரை யரசர்களாகப்பல்லோர் மதிக்க மனை, மக்கள், சுற்றம், துணையுடன் எல்லாவகையாலும் இனிது வாழவும், பரம்பரைப்பெருமை என்றும் நின்று நிலவவும்பரம்பரனைப்போற்றுவோமாக! மனதாரவாழ்த்துவோமாக!! மனமகிழ்ந்தின்புறுவோமாக!!!

உ

# தீண்டாதார் ஆலயப் பிரவேசத் தடை.

(சர்வமதாதீத சுத்தாத்வைத சத்தியதரிசன சித்தாந்த சைவப் பிரசாரகர் சென்னை, திரு, மா. நீலகண்ட சித்தாந்தியார் அவர்கள்.)

(10-ம் ஆண்டு 16-ம் பக்கத் தொடர்ச்சி)

இருது ஸ்திரீ பாதகம் செய்தவர்கள் இவர்கள் கர்ப்ப கிருஹத்தில் நுழைந்தால் முன் சொன்னபடி ஸம்ப்ரோக்ஷணம் மாத்திரஞ் செய்ய வேண்டியது.

சண்டாளன் முதலானவர்கள் கர்ப்பகிருஹத்தில் நுழைந்தால் சாந்தி ஹோமத்துடன் ஸம்ரோக்ஷணமுஞ் செய்யவேண்டியது. இந்த மாதிரி முறையே பிராயச்சித்தம் மூவகைப்பட்டிருக்கும்.

முற்சொல்ன மூவகைப்பட்டவர்கள் அர்த்த மண்டபத்திலாவது முதல் மண்டபத்திலாவது இரண்டாவது மண்டபத்திலாவது நுழைந்தால் கிரமமாக சாந்தி ஹோமத்தையும் திக்குஹோமத்தையும், ஸம்ப்ரோக்ஷணத்தையுஞ் செய்யவேண்டியது.

ருது ஸ்திரீகள் தொட்டால் அல்லது உள்ளே நுழைந்தால், சண்டாளர்கள் இக்காரியங்களைச் செய்தால் என்ன ப்ராயச்சித்தஞ் சொல்லப்பட்டதோ அதையே செய்யவேண்டியது.

முன் சொன்ன மூவகைப்பட்டவர்களும் பிரதிமா மண்டபத்தில் நுழைந்தால் கிரமமாகச் சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், திக்கு ஹோமம் இவைகளைச் செய்யவேண்டியது.

பிராமணர்களையும் மீற்ற தீக்ஷை பெற்றவர்களையுந் தவிர மற்றவர்கள் தீக்ஷையின்றிப் பரிவார தேவதைகளின் ஆலயத்திற்குள் நுழைந்தாலும் இதே பிரயாச்சித்தஞ் செய்யவேண்டியது.

இந்தப் பரிவார தேவதைகளின் ஆலயத்திற்குள் புறா, காக்கை, பாம்பு முதலிவைகள் நுழைந்தாலுந் தோஷங் கிடையாது.

சண்டாளன் முதலானவர்கள் உள் மண்டலத்திற்குள் நுழைந்தால் மூர்த்தி ஹோமமும் இரண்டாவது மண்டலத்தில் நுழைந்தால் சாந்தி ஹோமமுஞ் செய்யவேண்டும்.

எல்லாப்பிராயச்சித்தங்களிலும் பசுவின்சாணியினால் மெழுகுதல் முதலானவைகள் பொதுவானவை. பரிவார தேவதையின் ஆலயத்திற்குச் சொன்ன பிராயச்சித்தமே சமயலறைக்கும் வைத்துக்கொள்ளவேண்டியது.

இனி விஷ்ணுவும் பாஞ்சராத்திராகமத்திற் கீழ் வருமாறுரைத்தல் காண்க.

ஹே ரிஷியே, சண்டாளன் முதலியவர்களுள் எவனாவது கோயிலில் நுழைந்தால் அங்குள்ள மட் பாண்டங்களை யெல்லாம் எறிந்துவிட்டு மற்றப் பாத்திரங்களை அஸ்திர மந்திரத்தாற் புரோக்ஷித்து ஸ்நானஞ் செய்து அங்கே நின்றுகொண்டு கபில மந்திரத்தை ஆயிரத்திருநூறுமுறை ஜெபித்துக் கோயில் முழுவதுஞ் சுத்தி செய்யவேண்டியது.

முனீச்வரர்களே! தீட்டுள்ளவர்களாவது, மஹா பாதகங்களைச் செய்பவர்களாவது, சண்டாளர்களாவது, பிரசவித்தஸ்திரீகளாவது, மாதவிடாய் பெற்ற ஸ்திரீகளாவது, மிலேச்சர்களாவது, புல்கஸர்களாவது, முதல் மண்டபத்திற்குள்ளேனும் முதல் ஆவரணத்திலேனும் நுழைந்தால் ஆலயத்தை முற் கூறியபடி சுத்தஞ் செய்து, அதமோத்தமப்படி முற்கூறியவாறு புருஷோத்தமனுக்கு அபிஷேகஞ் செய்யவேண்டியது. முற்கூறப்பட்டவர்கள் இரண்டாவது ஆவரண முதல், வீதி ஆவரணம்வரையிலுள்ள இடங்களில் நுழைந்தால் ஆலயத்தைச் சுத்திசெய்து அதமாதமப்படி பகவானுக்குத் திருமஞ்சனஞ் செய்விக்கவேண்டியது.

முற்கூறிய சந்தர்ப்பங்களில் சாந்தி ஹோமஞ் செய்து பிராமணர்கட்குப் போஜனஞ் செய்விக்கவேண்டியது.

ஹே ருஷீஸ்வரர்களே சண்டாளர்களாவது சக்கிலிகளாவது தெரியாமல் விஷ்ணுவாலயத்தில் ஒரு மாதம் வரையில் வசித்து விட்டால் மட்பாத்திரங்களை யெறிந்துவிட்டு ஆலயத்தைச் சுத்தி செய்து பசுவின் சாணத்தால் மெழுகிப் பிறகு முழுவதும் அக்கினியினாற் சுத்தி செய்யவேண்டியது.

பிறகு புண்யாஹவாசனஞ் செய்வித்துப் பஞ்ச கௌவியத்தினால் ஆலய முழுதும் புரோக்ஷித்துப் பிறகு தோஷங்களைப் போக்குவதற்காகப் பசு மந்தையை ஆலயத்தில் இருக்கும்படிசெய்யவேண்டியது. வேதங்களை நன்கு கற்றுணர்ந்த பிராமணர்களால் மஹா சாந்தி மந்திரத்தை ஜெபிக்கச் செய்து, பிராமணர்கட்குப் போஜனஞ் செய்வித்துத் தக்ஷிணை கொடுக்கவேண்டியது.

இம்மாதிரி ஒரு மாதமாவது (௧௫) தினங்களாவது, ஏழு, ஐந்து, அல்லது மூன்று தினங்களாவது செய்யவேண்டியது. பிறகு மறுபடியும் ஆலயத்தைச் சுத்தி செய்து பிம்பத்திற்குப் பசு நெய்யால் அபிஷேகஞ் செய்வித்துக் கிரமப்படி சம்புரோக்ஷணஞ் செய்யவேண்டியது.



சண்டாளன், பிரஸவித்த ஸ்திரீ, ருதுஸ்திரீ இவர்கள் தொட்ட அல்லது பிணம் விழுந்து கெடுக்கப்பட்ட கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட ஜலத்தினால் ஸ்வாமிக்குப் பூஜை செய்யப்பட்டால் உத்தமோத்தமமாக சுவாமிக்கு அபிஷேகம் செய்து வைக்கவேண்டியது.

## காந்தி முதலாயினார் சாஸ்திரங்கட்குக் கட்டுப்பட் டொழுக வேண்டு மெனல்.

ஆகவே இன்னுமா பிரமாணம் வேண்டும்? சிவாகமம் பாஞ்சராத்திராகமம் ஆகிய இரண்டினின்றும் சாதுக்கள் சந்தோஷிக்குமாறு நன்கு பிரகாசப்படுத்தித் தீண்டாதார் ஆலயப்பிரவேசஞ் செய்யக் கூடாதென்று வஜ்ஜிர ஸ்தம்பம்போல் நன்கு நாட்டிவிட்டோமாதலின் வைரிகள் வாக்கு இனி எவ்வாற்றானும் ஈடேறாதென்க. "இதுகாறும் அபௌருஷேயமாகிய ஆகமப் பிரமாணம் யாரும் எடுத்துக் காட்டவில்லையே யென்றேங்கிக் கிடந்தார்க்கீது மூவாமருந்தாயும் பெரு விருந்தாயும் ஏமடியுமென்க. சகலாகமபண்டிதர்போல், சர்வாகமங்களுங்கரைகண்டவர்போல் ஆகமத்திற் சாற்றப்படவேயில்லை யென்று கூறின குமதி வாசகம் குணப்படாதொழிந்தமை கண்டு அவ்வாறு கூறியோர் நாணமுறுவாராக. உண்மையாகக் கடவுளுக்குப் பயந்து அவரது கிருபைக்குப் பாத்திரராக வேண்டுமென்கிற அவா வுடையராயின் அவரது திவ்யாஞ்ஞைக்குக் கட்டுப்பட வேண்டியதவசியகமன்றோ? சிவாலய விதிக்குக் கட்டுப்படாமற் சிவாலயம் புகுதலாற் போந்த பயன் யாதோ? பயன் நரகப் பிராப்தியேயா மென்பது யாமெடுத்துக் கூறவும் வேண்டுமோ? குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளும் புத்திமா னெவனோ? இது, "அரசனைக் கண்டால் கும்பிடுவேன். அவனது அரண்மனையில் நுழையவும் பார்ப்பேன், ஆனால் அவனது சட்டதிட்டங்கட்குப் பயப்படேன்" என்று ஒருவன் அஞ்சாது வீண் தைரியங் கொண்டு கூறுவதுபோலன்றோ முடிகிறது! அவ்வாறு கூறுவோனுக்குச் சிறைத் தண்டனை முதலாயின கிடைத்தற் போல சர்வலோகங்கட்கும் நாயகனாகிய நடராஜப்பெருமான் வாக்கை மீறி நடந்தாற் சிவகோபம், சிவாபராதங்கட்கு எத்தகைய வெகுமானங் கிடைக்குமென்று நடுக்குற்று அடாத காரியஞ் செய்ய அஞ்சுவாராக. சக்கரவர்த்தியின் சட்டத்தை மீறி நடந்ததாலன்றோ காந்தியும் அவருக்குத் துணைபோய சுமார் 24000 ஆண்களும் பெண்களும் சிறைபுக்குக் காசம், க்ஷயம், சந்திவாதம், கபசுரம், கால்வயிறு போஜனம், கால் வீக்கம், உண்ணாவிரதம், உதை, குத்து, பிரம்படி, தடியடி, சாயத்தண்ணீர் வீச்சு, மூர்ச்சை, மரணம், சிறையதிகாரிகளுடன் சச்சரவு முதலாயினவற்றிற்காளாகிக் கடு நரகவேதனையைப் பிரத்தியட்சமாயனுபவிக்கின்றனரென்றால் கடவுளாஞ்

றையை மீறினால் எவ்வளவு தண்டனை கிடைக்குமெனக் காந்தியும் வேதாகம விதிகட்கு இனியேனுங் கட்டுபட்டொழுகுவரா? கடு நரக வேதனைக்குள்ளாவரா? "சத்தியத்தை யாங் கடைப்பிடிப்போம்" எனப் பன்முறையும் பறையறையுமிவர், பஞ்சமா பாதகத்திற்கும் எத்தனையோ மடங்கு கொடியதாகிய அதி பாதகமெனுஞ் சிவாபராதமாகிய சிவாகம தூஷணையானது ஒருவனைப் பல்லூழி காலம் மகா ரௌரவம், கும்பீபாகம் முதலிய நரகப் படுகுழியிற்றள்ளி மேலெழ விடாமற் படாதபாடுபடுத்தும் என்னுஞ் சத்தியத்தைக் கடைப் பிடிப்பரா? நரகப்படுகுழியில் வீழ்ந்தவஸ்தைப்படுங் காலத்து வீண் சுயராஜ்யத்திற்கு நரி ஊளையிடும் அவரினத்தைச் சேர்ந்தவர்களெவரேனும் அவரைக் குழியினின்றும் எடுத்துவிடல் முடியுமா? அவர்களுந்தானே அவ்வாறவஸ்தையுறப் போகின்றனர்! தங்களைத் தாங்களே மீட்டுக்கொள்ள முடியாதவர்கள் தங்கள் தலைவரை எவ்வாறு மீட்கப் போகின்றார்கள்? எம தூதர்களை நீக்க இவரோ வல்லுநர்? ஆகவே அஞ்சுமின்! அஞ்சுமின்! உய்மின்! உய்மின்! ஒருவேளை, காந்தி ஐரோப்பிய விடுதியில் ஏ வகுப்பில் வீற்றிருக்கின்றனராதலின், பீ. வகுப்பு, சீ வகுப்புக் கைதிகளின் கஷ்டம் பத்திரிகையில் வாசிக்கின்றனரே யன்றி நேரயனுபவித்திலர் போலும். அரசியல் கைதிகள் இதர கைதிகளை விடக் கஷ்டமனுபவிக்க அவர்களது எண்ணிறந்த பெண்டு பிள்ளைகளும் ஓலமிட்டழச் செய்வது ஹிம்சையன்றி அஹிம்சையோ? மறியல்காரர்கள் முற்கூறியவாறு உதைகுத்து முதலியவற்றிற்குட்படச்செய்வது ஹிம்சையோ அஹிம்சையோ? செய்கைவகையானன்றிக் கருத்துவகையால் அது அஹிம்சையேயெனக் கூற முந்துவரேல் அப்போது கண்ணன்வாக்காகிய பகவத்கீதையில் யுத்தஞ்செய்து வீர சொர்க்க மடைவதும் அஹிம்சை யென்றன்றோ கொள்ளல் வேண்டும். அந்த இரகசியத்தினை நல்லாசிரியர்பாலாராயாது மனம் போனவாறே அபசித்தாந்தப்படுத்தினால் அவர் கண்ணன் வாக்குக்கே கட்டுப்பட்டவரன்றென்றே நன்கு தொனிக்கிறது. மேலுஞ் சாத்திரத்திற்குக் கட்டுப்பட்ட வைதீகர்களை வம்புக்கிழுத்து அவர்கள் இரவும் பகலும் உறக்கங் கொள்ளாதிருக்க அவர்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளும் மஹாஹிம்சையிலிறங்கி விட்டவர் மகாத்மாவாவரோ? பெருங் கலகக்காரரே கண்டீரிவர்! அவ்வாறே 29—11—32ல் வெளியாகிய சுதேசமித்திரனில் காந்தி, "தீண்டாமையை ஹிந்து மதத்தின் மேல் ஏற்றுவதால் அது குறுகிய திருஷ்டியுடையதாகி விடுமாகையால் நான் கலகஞ் செய்கிறேன். என்னுடைய உயிரைக் கொடுத்து இந்த மாசை அகற்றக் கூடுமானால் என்னுடைய உயிர் அதிக விலையுள்ளதென்று நான் மதிக்க மாட்டேன்" எனக் கூறியதாக வெளியாயிருக்கிறது. மொழிபெயர்ப்புத் தப்பாயிருக்குமோவென்று சந்தேகித்து அதே தேதியில் வெளியாகிய (Hindu)



"இந்து" பத்திரிகையிலு மாராய்ந்தோம். அதிலும் அவ்வாறே "It is because the super-imposition of untouchablity would make Hinduism a narrow creed, that I have rebelled against it. I would count my life to be a cheap price to pay for the removal of that blot", என்றே காணப்பட்டது. இவ்விரண்டு இங்கிலீஷ் வாக்கியங்கட்கும் முன்னர்க் காட்டிய மொழிபெயர்ப்பு முற்றும் பொருத்த முடைத்தென அவ்விரு பாஷா வல்லுநரும் அரசாங்கத்தாரும், அறிந்து கொள்வாராக. ஆகவே இவர் சாதாரண உலக சட்டத்திற்குங் கீழ்ப்படியாமற் சத்தியாக்கிரகஞ் செய்கிறேன் என்று கூறுவதே போன்று அப்பழக்க வாசனையாற் சர்வலோக நாயகனது சட்டமாகிய சாஸ்திரங்கட்குங் கட்டுபடாமற் பெரிய அசத்தியாக்கிரகியாய்ப் பெருங் கலகஞ் செய்து, தான் கெடுவதுமன்றி ஏனையோரையுங் கெடுத்து "வாருங்கள் நாமெல்லோருங் கைகோத்துக்கொண்டு ஆனந்தமாய் நரகலோக யாத்திரை செய்து நரகலோகத்திற் சுயராஜ்யத்தை யனுபவிக்கலாம்" என்று கூறத் துணிவோராய் முடிதல் காண்க. "அவ்வாறு நான் கூறவில்லையே" யென்றால் அப்போது கலகஞ் செய்யாமற் சாஸ்திரங்கட்குக் கட்டுப்பட்டுய்வாராக. மேலும் காந்தி தாம் பண்டிதரல்லவெனப் பன்முறையும் ஒத்துக்கொள்ளுகின்றாரேனும் அவ்விஷயம் 16—11—1932 புதன்கிழமை வெளிப்போந்த சுதேசமித்திரனிற் காட்டப்பட்டிருத்தலின், அதுவும் ஆங்கிலத்திற்கேற்ற மொழிபெயர்ப்பாதலின், சாஸ்திரங்கட்கும் இவர்க்கும் வெகு தூரமென்பது நன்கு அறியக்கிடக்கின்றது. சாஸ்திரபண்டிதரல்லாதவர் சாஸ்திரசம்மதமாய தீண்டாமையையும் ஆலயப்பிரவேச விஷயத்தினையும், இடையே இழுத்து வந்து போட்டுக்கொண்டு வீண் கலகஞ் செய்வானேன்?

## காந்தியைப் பின்னுங் கண்டித்தல்.

முற்கூறிய ஆகம விஷயம் முதலியவற்றைக் கற்றறியாமலே, கற்றோரை யடுத்துக் கேட்டறியாமலே காந்தி முதலாயினோர், தங்கள் வயிற்றுப் பிழைப்பிற்கே சுமார் பதினைந்து பதினாறாண்டு ஆங்கிலங் கற்பதிலேயே காலத்தை வீணாகக் கழித்து ஏதோ வாரிக்கொள்ளலாமென்று இங்கிலாந்தேகி ஆங்கிலேயரை யடுத்துச் சட்ட விஷய முதலாயினவற்றைக் கற்றுத் தென்னாப்பிரிக்காசென்று ஆங்கிலேயரது அடித்தல், உதைத்தல் முதலிய உபத்திரவத்தைப் பொறுக்கலாற்றாது இந்துக்களுக்காகப் பரிந்து பேசி இவ்வாறான விஷயங்களிலும் அரசியல் விஷயங்களிலுமே காலத்தைக் கடத்திப் பலவகைப் பத்திரிகைகளைப் படிப்பதிலேயே பகல் இரவு முழுதும் போக்கி அளவற்ற சாஸ்திர சமுத்திரத்தைப் பார்க்கவும்

புண்ணியமற்றதோ டமையாமல், சாஸ்திரங்களைக் கற்றறியாக் குறையாலேயே, "கோயில்கள் விபசார விடுதிகள்" என்றும், அதற்கு நேர்விரோதமாக "ஹிந்து பால்யர்கள் விதவா விவாகஞ் செய்யலாம்" என முன்பின் முரண்பட உரைத்தும், உருதிமதி விவாகமே சீரியது கன்னிகா விவாகம் கல்வியைக் கெடுக்குங் கசடுள்ளது" என்னுஞ் சாரதா சட்டத்திற் கனுமதி யளித்தும், "தீண்டாதார் விடப்படா ஆலயத்திற் கடவுளிரார்" எனக் கழன்றும், விசுவாமித்திரர் திரிசங்குவைத் தூக்கி மேலெறிந்து தேவர்களுக்கும் வசிஷ்டருக்கும் விரோதமாகத் திரிசங்கு சொர்க்கம் ஏற்படுத்தியதுபோல், அத்தீண்டாதார் பொருட்டு உண்ணாவிரத மிருந்து நோக அவர்களைச் சொர்க்கம் புகுவிப்பவர்போல் "ஆலயத்துள் நுழையுங்கள்" என உஞற்றி அவர்களை நரகப்படுகுழியிற் றள்ளியும், சாஸ்திர வல்லுநர் ஏதேது சமாதானங்களை எத்தனையோ முறை இடித்திடித் துரைத்தும் செவிடன் காதிற்சங்கூதியது போற்சனங்களொன்றுசொன்னாற் செவிடன் மற்றொன்று சொல்லல் போல் செவிடு செவிடு என்றாற் குருடு குருடு என்னல்போல் பத்திரிகைகளில் ஏதாவதொன்றைப் பதில் கூறாதிருந்தாற் குறைவென்றெண்ணிப் பொருத்தமற்ற விஷயங்களை க, உ, ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௯ என்றிலக்கமிட்டு வீணறிக்கைகளை வெளியிட்டு வீண்பிடிவாதஞ் செய்தும், "பகவத்கீதை யொன்றே அங்கீகரிப்போம், வேறு சாஸ்திரம் வேண்டியதில்லை, அதெல்லாம் பொருத்தமற்ற புத்தகம்' என்று அர்த்தவாதம், விதிவாதம், துதிவாதம், வர்ணனை, செம்பொருள், குறிப்புப் பொருள், முக்கியப் பொருள், கவுணப்பொருள், இலட்சணை, நவரசாலங்கார முதலிய காவிய லட்சணமாகியவற்றை ஈதென்றுணராமலே அவரது ௮-ம் அறிக்கையிற் சாஸ்திரம் பொருத்தமற்றதெனச் சாஸ்திரார்த்த முரைக்கும் பண்டிதராய் நடித்தும் பகவத்கீதைக்கே தாமே ஏதேதோ தப்பபிப்பிராயங் கொண்டு கண்ணபிரான் கூற்றுக்கே கட்டுப்படாமலும், நான்கு ஜாதிக்கு மேலில்லை யென்று கூறி அக்கூற்றைக் கண்டித்த பலபுவர் போதனைக்குச் சற்றுஞ்செவிசாய்க்காமலும், பரசிவத்தின் திருவுள்ளக் கிடை இன்னதென்றறியாமலே பந்துக்களை எவ்வாறு மாய்ப்பது என்று வீண் அஹிம்சாதர்மங்கொண்ட பார்த்தனது மயக்கம் போக்கும்பொருட்டு பகவத்கீதையைக்கண்ணன் உபதேசித்து "ஒவ்வொருவரும் அவனவன் கர்மாவையே செய்தல்வேண்டும், க்ஷத்திரியன் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்தல் வேண்டு" மென்று போதித்து விசுவரூபங்காட்டி அவ்விசுவரூபத்தில் எல்லா எதிரிகளும் வந்து வீழ்ந்து மாய்வதையுங் காட்டி அருச்சுனனது வீண் பிரமையைப் போக்கி முடிவிற் பதினெட்டு அக்குரோணி சைனியத்தை மாள்வித்து, யுத்த காலத்தில் அஞ்சா நெஞ்சம் படைத்து



ஆண்மையோடு போராடி மாய்வோர் வீர சொர்க்கஞ் சேர்தல் சத்தியமென்பதையும் நிதரிசனப்படுத்தியதையுங் கூர்ந்து பாராமலே ஏதோ மனம் போனவாறு அஹிம்சா தருமங் கற்பித்துப் பாமரரை வஞ்சித்தும், அதனாலநேகம்பேர்முற்கூறிய பலவிதஹிம்சைக்குட்படச்செய்தும், இன்னோரன்ன பிறவற்றையுஞ் செய்வித்தும் செய்தும் முறையே ஆலயதூஷணை, ஆலய புனித நிக்கிரகம், அந்தியச நரகப்பிரவேசம், சத்தியப் பிரவசன நிராகரணம், சாது ஹிம்சை, வேதாகமதூஷணை, வர்ணாஸ்ரம தூஷணை, பகவத்கீதா தூஷணை, இன்னும் மேற் காட்டப்பட்ட பல வகை ஹிம்சைகளை இழைக்கும் போலி அஹிம்சா தருமம் முதலியவற்றை மேற் கொண்டொழுகுதலின், விசால புத்தியும் நுண்மாணுழைபுல முடையாரும் அக்காந்தி முதலாயினருடைய துற்புத்தி மதியைப் பொருட்படுத்தாரென்க. "யாரா ரெனக்கென்ன போதித்து மென்னவென் னறிவினை மயக்க வசமோ" என்னும் தாயுமானாரது சுபோதத்தையே பின்பற்றுவ ரென்க.

நிற்க, டால்ஸ்டாய் என்பாரையே காந்தி குருவாய்க் கொண்டதேயன்றி, மதகுரு இவருக்கு ஒருவரும் வாய்த்திலராதலின் சாஸ்திர நுட்பங்களறியாதவராயினர். யாரென்செய்வது? பூர்வீக புண்ணியத்திற்கேற்றவாறு தானே குருவாய்ப்பர்! சநாதன தர்மிகளது கட்சியைப் பரிசீலனை செய்யத் தனக்கேற்றவாறு தாளம் போடும் பண்டிதர்களைக் கேட்டுவிட்டிருக்கிறாராம்; ஆயினும் இவர் மனதிற் கேற்றவாறு அவர்களபிப்பிராயப்பட்டால் தான் ஒத்துக்கொள்வார். இல்லாவிடிற் கலப்புச் சாஸ்திரமென்றே கதறுவார். ஆகம விஷயத்தைப் பிரசித்திப்படுத்திவிட்டோமாதலின் இனி ஓர் ஆசங்கைக்கு மிடமின்று. பண்டிதர்களைக் கேட்க வேண்டிய ஆவசியகமுமின்று. "உலகத்தாருண் டென்பதில்லென்பான் வையத்தலகையா வைக்கப்படும்" என்னும் பொய்யா மொழியார் வாக்கும் ஈண்டுப் பொன்னே போற் போற்றத்தக்கது. ஈண்டு உலகத்தா ரென்பது உயர்ந்தார் மேற்று, கற்று வல்ல முதியோராவராதலின்: அதுவன்றிச்சாமானியர்களாகிய உலகில் நிறைந்துள்ள சாஸ்திரக் கல்வியற்ற சழக்கர்களைக் குறித்ததன்று, விதிவிலக்கவ றறியாராதலின்: அதுபற்றியே "தீவினையாரஞ்சார் விழுமியாரஞ்சுவர் தீவினையென்னுஞ் செருக்கு" என்றபடி பழிபாவங்கட்கு அவர்களஞ்சாராதலின் ஆலயப் பிரவேச விஷயத்தில் அவர்களுடைய வாக்கெடுத்தலுஞ் செல்லாது. அது குடியர்கள் குழுமிய கூட்டத்திற் குடியாமையைக் குறித்து வாக்கெடுத்தலையே மானும். மேலும் மறியல் செய்யும் பொருட்டுக் காங்கிரஸின் கூட்டத்தார் சம்பளமின்றி வேலை செய்பவர்கள் (Volunteers) என்று சொல்லி அநேகங் கூலிக்காரர்களை

யமைத்து அளவற்றமுறை அடி உதை குத்து வாங்கிக்கொள்ளும் பெரிய ஹிம்சைக்குட்படுத்துவதுபோல், ஆலயப் பிரவேச விஷயத்திலுஞ் செய்த அநேகரைத் தூண்டுதல் செய்யப் பின்வாங்காராதலின் பொதுஜன வாக்குஞ் சற்றும் அங்கீகரிக்கற்பாலதன்றென் றறிவாராக. ஆகவே யாண்டும் (majority majority) பெருந்தொகை பெருந்தொகை என ஓயாது ஒப்பாரி பாடுதல் ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. ஆயினுந் தீண்டாதார் ஆலயப் பிரவேசம் செய்யக் கூடாதெனப் பெரும்பாலார் வாக்களித்துவிடின் அது சம்மதிக்கத்தக்கதே,சாஸ்திரத்திற்கும் சம்பிரதாயத்திற்கும்ஒத்திருத்தலின். ஆனால் அப்போது கூடக் காந்தியும் அவர் சீடர்களும் விடார் போலும். நெடுங்காலமாய் அனாதி தொட்டு வழங்கிவருஞ் சம்பிரதாயத்தினை, "இது என் இவ்வாறு வழங்கி வருதல்வேண்டும்" எனத் தாமுங் கூர்ந்தாலோசியாதும், அடிப்பட்ட சான்றோர்பால் ஆய்ந்தோய்ந்து பாராதும் தன்னொன்றைக் கருதிக்கொண்டு தான்றோன்றித் தம்பிரானாய் அவசரப்பட்டுக்கொண்டு ஆத்திரத்துடன் செய்யுங் காரியமெல்லாம் அனர்த்தத்திலேயே வந்து முடியுமென்பது சத்தியம். ஒருவன் புதிய வீடு கட்டப்புகுந்து அதற்காகச் சுவரெழுப்புங்கால் அண்டை வீட்டுக்காரன் ஜன்னல்களடைபட்டுக் காற்றின்றிக் காலன் கையில் அகப்படவேண்டி வருமென்று அவ்வண்டை வீட்டுக்காரன் புதுவீட்டுக்காரனைத் தடைசெய்து "என் வீடு கட்டிப் பன்னிரண்டு வருஷத்திற்கு மேலாய் விட்டது. இப்போது புதிதாய் சுவரெழுப்பி எங்கள் ஜன்னலை யடைக்கக் கூடா" தெனக் கூறியும் அதற்கு மேலுந் தடைக்கஞ்சாது சுவரெழுப்புவனேல் நஷ்ட ஈடு கொடுப்பதுடன் கட்டின சுவரையும் இடிக்கவேண்டி வந்து 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று பாண்டியன் மகளார் கூறியதுபோல், சிருஷ்டிகாலமுதல் ஆலயப்பிரவேசஞ் செய்யாதார் இப்போது செய்வாராயின் செய்வோரும் தூண்டினோரும் உதவியோரும் அபராதங் கொடுக்கவேண்டி வருவதோடு ஒவ்வொரு சம்ப்ரோட்சணைக்குங் குறைந்தது ஐந்நூறு ரூபாய் பிடிக்குமாதலின் அதையும் ஆலயத்தாருக்குக் கட்டும்படி அரசாங்கத்தார் ஆக்ஞை செய்வார்களென நம்புகிறோம். ஆனால்முதல் முறை தெரியாமற்செய்து விட்டாலே பிராயச்சித்தாதிகள் செய்யவேண்டியிருத்தலின் ஒரு முறைகூட உள் நுழையாதபடி பாதுகாப்பது அரசாங்கத்தார் கடனேயாம். ஆனால் உள் நுழைய இப்போது மூவர் மசோதா கொண்டுவந்து சட்டமாக்கப் பார்க்கின்றாராதலின் அது பழிபாவத்திற் கஞ்சாது சுவரையெழுப்பி அண்டைவீட்டுக்காரன் ஜன்னல்களையடைத்து அவனை மூச்சுத் திணற வைத்துச்சாகச்செய்வதேபோல் முடிதலின் வைதீகர்களுக்கும் சாஸ்திரங்கட்கு மொவ்வாத அத்தகைய அடாதவிஷயத்தினைச் சட்டமாக்கக் கவர்னரும் இராஜப்பிரதிநிதியும் அநுமதியளிக்க மாட்டாரெனப் பெரிதும் நம்புகிறோம். (தொடரும்)

உ

# ஆரோக்கிய வழி.

(கிணற்றுக்கடவு, சிவஸ்ரீ K. P. சுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்கள்.)

ஆரோக்கிய வழி யென்பது எம்மதத்தினரும் சம்மதமாய்க் கைக்கொள்ளக் கூடியதோர் முக்கிய வழியே. அவற்றைக் கலாசாலைகள் பலவற்றிலும் மாணாக்கர்களுக்குச் சுகாதார மெனப் போதித்து வருகின்றனர். வைத்திய நிபுணர்களும் ஆரோக்கியத்திற்காக முதலில் விரேசனம் செய்வித்துப்பின்னர் ஔஷதம்கொடுக்கின்றனர். ஏனெனில் மனிதர்க்குச்சரீரம் வியாதியற்றிருப்பின் சுகமுண்டாகும். சுகமுண்டாகவே மனத்தின்கண் ஊக்கம் அதிகரிக்கும். ஊக்கம் அதிகரிக்கவே அறிவு விளங்கும். அறிவு விளங்கவே சாஸ்திர ஆராய்ச்சியுண்டாகும். ஆராய்ச்சி உண்டாகவே சமய நெறி கைவரப்பெறும். இங்ஙனம் கைவந்த மக்கட்கு, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை வழிபாடும் சித்திக்கும். சித்திக்கவே அவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னுமின்னான்கு பொருளையும் அடைவர். ஆகையால் இவை யாவற்றிற்கும் 'ஆரோக்கிய வழி' இன்றியமையாதது. ஆகையால் இதனை வேத சிவாகமங்கள் ஆகிய மெய் நூல்கள் நன்கு விளக்கி நித்திய கர்மானுஷ்டத்துடன் சேர்த்துக்கூறுகின்றன. இவ்வழி யொழுகுவோர் முதலில் அனுஷ்டிக்க வேண்டுவன:—

(1) அதிகாலையி லெழுந்திருத்தல் இதனை 'சிவநேசன்' 9-ம் ஆண்டு ஆனித்திங்கள் 270ம்பக்கத்தில்வந்துள்ள 'வைகறைத்துயிலெழு' என்னும் வியாசத்திற் காண்க.

(2) மலஜலவிசர்ஜனம் செய்தல்.

விதிப்படி மலஜலம் கழித்தல்வேண்டும். இவற்றை எழுதுவானேன் உபாதியுரிஸ்தாமேகழிக்கின்றனர் எனச்சிலர் வினவலாம். முறைதவறின் பலவித வியாதிகள் உண்டாகும். அதற்காகவே 'திண்ணமிரண்டுள்ளே சிக்கவடக்காமல்' என 'நோயில்லா வாழ்வு' என்னும் வைத்திய நூலும், 'நோய்க்கிடங் கொடேல்' என நீதிநூலும் முறையிடுவதாயின. ஆதலால் இதன் முறையைத் தெரிவித்தலும் தெரிந்து கொள்ளலும் பொருத்தமேயாமென்க.

மனிதர் அதிகாலையில் எழுந்து இறைவனைத் துதித்துப் பின்னர் தங்கம், வெள்ளி, தாம்பரம் முதலாய உலோகதண்டமேனும், சந்தனம், தேவதாரு, மூங்கில், பிரம்பு இவைகளால் செய்யப்பட்டதும் நாபிக்குமேல் நாலங்குல உயரமுள்ளதுமான தண்டமேனும் கையில் கொண்டு ஈசான திக்கை நீக்கி மற்றைத்திக்குகளில் திருக்கோவிலுக்குநூறு அல்லதுஐம்பது அல்லது இருபத்தைந்து தண்டத்துக்கப்பால் சென்று ஜனசஞ்சாரமில்லாத இடத்திலும் நீர்நிலை சமீபித்த இடத்திலும் விஸர்ஜனம் செய்தல் வேண்டும்.

மலஜல விசர்ஜனம் செய்யத்தகாத இடங்கள் 29.

மூத்திரம், முள்ளு, புழு, பூச்சி, எலும்பு, சாம்பல், வழி, மலம், புல், ஆறு, பள்ளம், ஜலம், பசுவின் சாணம், மயானம், பூந்தோட்டம், அருகு

நிறைந்தபூமி, மாநிழல், நாற்சந்தி, முச்சந்தி, உழுதநிலம், களர்நிலம், கடற்கரை, நதிக்கரை, பசுக்கள் கூடுமிடம், இடிவிழுந்தஇடம், சுழல்காற்றிடம், புற்று, அருவி பாயுமிடம், மலை ஆகிய 29 இடங்களில் மோசனம் செய்தல் கூடாது.

## செய்தால் வரும் தீமைகள்.

முள்ளு, புழு, எலும்பு, மலம், மூத்திரம், இவைகளால் சூழப்பட்ட இடங்களில் விஸர்ஜனம் செய்தால் அபானத்தின் வழியே கெட்ட காற்று உட்சென்று பிணியை உண்டாக்கும்.

வழி, புல், ஆறு, ஜலம், பள்ளம், பசுவின் சாணம், சாம்பல், இவைகள் சூழப்பட்ட இடங்களில் மோசனம் செய்தால் இடதுகால் பெருவிரல் முதல் சுஷும்னை வழியாய் வலக்கை பரியந்தமும் வலது கால்பெருவிரல் முதல் ஸுஷும்னை வழியாய் இடக்கை பரியந்தமும் கத்தரிக்கோல்போலுள்ள நாடி நரம்பின் வழியாய் குளிர்ச்சி உட்சென்று மோசனத்தைத் தடுத்துப் பிணியை உண்டாக்கும்.

மயானத்தில் செய்தால், அங்குள்ள கெட்ட காற்று நவத்துவாரத்திலும் விரைவில் செல்லும் திறமுடையது; உடனே வாயுக்களை ஸ்தம்பிக்கச் செய்து நீரைக் கட்டுப்படுத்திப் பிணியை யுண்டு செய்யும்.

பூந்தோட்டம், அறுகு நிறைந்த பூமி, மர நிழல் இவைகளால் சூழப்பட்ட இடங்களில் யோசனம் செய்தால் குளிர்ந்த காற்று நாசியுட் சென்று அஜீர்ணத்தை யுண்டாக்கும்.

நாற்சந்தி, முச்சந்தி, உழுதநிலம், களர் நிலம், கடற்கரை இவ்விடங்களில் மோசனம் செய்தால் இவ்விடங்களில் உஷ்ணமான காற்று அதிகமுண்டு;பித்தாசயப்பைக்குள் செல்லுந்திறமுள்ளது; ரத்தத்தை கெடுத்துக் கபரோகத்தை உண்டாங்கும்.

நதிக்கரை பசுக்கள் கூடுமிடம் இவைகளில் செய்தால் அநேக வியாதிகள் உண்டாகின்றன. இடிவிழுந்த இடம், சுழல்காற்றடித்தஇடம், புற்று இவ்விடங்களில் மோசனம் செய்தால் அங்கு விஷக்காற்றுவீசும்; அபானத்தின் வழியே செல்லுந் திறமுள்ளது; ரத்தத்தை முறித்து ஜுரத்தை யுண்டாக்கும்.

அருவி பாயுமிடம், மலை முதலிய இடங்களில் மோசனம் செய்தால் அவ்விடம் குளிர்ந்த காற்று அதிகமுடையது; ஜலாசயப் பைக்குட்சென்று ரோகத்தை உண்டாக்கும்.

## மோசன காலத்தில் பார்க்கத் தகாதன 8.

ஸ்திரீகள், பசுக்கள், ஆதிசைவர்கள், மகாசைவர்கள், சிவச்சின்னதாரிகள், மலம், குறி, பிராணிகள் என்னும்எண்வகைகள் பார்க்கத்தகாதன.

## பார்ப்பதால் வரும் பங்கம்.

மலஜல விஸர்ஜனம் செய்யுங் காலத்தில் ஸ்திரீகள், பசுக்கள், ஆதிசைவர்கள், மகாசைவர்கள், சூரியன், சந்திரன், அக்நி, ஸந்யாசி, தேவாலயம், சிவச்சின்னதாரிகள், விஷ்டை, குறி இவைகளைப் பார்த்தால் புத்திவிகாரத்தை யடைந்து வாயுக்கள் தன் நிலைமை கெட்டு மோசனத்தைத் தடுக்கும்.



## நியமம்.

பகலில் வடக்கு முகமாயும் இரவில் தெற்கு முகமாயும் வலது காதில் பூணூலைமூன்று சுற்றுச் சுற்றி உத்தரீயத்தால் தலை, காதுகளை மூடி இறுகக் கட்டிச் சரீரத்தை அரையளவு போர்த்துப் புல்முதலியவற்றால் மறைக்கப்பட்ட பூமியில் அவ்விடத்துள்ள தேவர் முனிவர் கணதேவதைகளைப் போகும்படி சொல்லி அவர்கள் போகும் பொருட்டுக் கையை மூன்றுதரம் தட்டி யாகத்துக்காகாத புல்லை பூமியின் மேல் மூடி வாய் திறவாது புதருகளில் மறைந்து மூக்கு நுனியைப் பார்த்தவண்ணமாய் மலஜல மோசனம் செய்தல் வேண்டும். சாதாரண பூமியில் விஸர்ஜனம் செய்தால் பூமியிலுள்ள வெப்பம் உட்சென்று மலஜலக் கட்டை உண்டாக்கும்.

இது பற்றி எழுந்த செய்யுள்:—

நீணகரின் புறத்தகன்றுநானூறு விற்கடைபோய் நிருதிதிக்கில்
வானிலவு கதிரொழுகு முப்புரிநூல்வலச் செவியின் வயங்கவேற்றித்
தோண்மிசை யுத்தரியமுயர் சென்னிசுற்றிக் கையிலொரு துரும்புசேர்த்துக்
காணவருநற் பகல்வடக்குக் கங்குலிடைத் தென்றிசையுங் கருதிநோக்கி.

## திக்கு நோக்குங் காரணம்.

பகற் காலத்தில் காற்றுவாடை வடக்கு நின்று தெற்கு நோக்கி வீசுவதாலும், பிங்கலை நாடி வலப்பக்கமாய் இருப்பதாலும்,சூரியகலையாய் இருப்பதாலும் சூரியனது வெப்பம் நேரே பிங்கலையில் தாக்கும்படி வடக்கு நோக்கியும் இராக் காலத்தில் தெற்கிலிருந்து வடக்கு முகமாய்க் காற்று வீசுவதால் இடைகலை நாடியாகிய சந்திரகலை நாடி இடது பக்கமாய் இருப்பதால் சந்திரகிரண ஸ்பரிசம் இடது பக்கத்தில்படும்படி தெற்கு நோக்கியும் உட்கார்ந்து விஸர்ஜனம் செய்தல் வேண்டும்.

## தலைக் கட்டு.

மலஜல விஸர்ஜனம் செய்யும்போது வாயுக்கள் கபாலபரியந்தம் மேல் நோக்கி ஏறுவதால் தலையில் உத்தரீயத்தால் இறுகக் கட்டிக் காதுகளை மூடி விஸர்ஜனம் செய்தால் கபாலத்திலுள்ள ரோமத் துவாரத்தின் வழியாலும், காதுகளின் வழியாலும் வாயுக்களை வெளியிற் செல்லாது தடுத்து மேல்நோக்கிய வாயுக்கள் அபானத்தின்வழியாலும், நீர்த் துவாரத்தின் வழியாலும் அசுத்தங்களைத் தள்ளி ரத்த ஓட்டத்தை உண்டு செய்து, ஸ்வாசாசயத்தையும் தாதுக்களையும் சுத்திசெய்து, சரீர புஷ்டியை அடைவித்து ஆரோக்கியம்தரும்.

## குத சுத்தி.

இதில் சொல்லியபடி விஸர்ஜனம் செய்த பின் துரும்பு ஓட்டுப்பாளம் மண்ணுங்கட்டி இவைகளால் துடைத்து விதிப்படி சௌசம் செய்தல் வேண்டும்.

இனி சௌசத்தாலும் ஆசமனீயத்தாலும் சுத்த ஜலத்தாலும் நாடி நரம்புகள் சுத்தியடையும் வழியைத் தெரிவிப்பாம்.

உ

# தமிழ் தந்த வளம்.

(மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதிவெளியிட்ட "நான் கண்டதும் கேட்டதும்" என்ற புத்தகத்திலிருந்து அனுவதித்தது.)

தமிழ் நாட்டிலுள்ள சைவ மடங்கள் பல. அவை பண்டைக் காலந்தொட்டே மேன்மேலும் விருத்தியாகிக் கொண்டுவந்தன. பல இடங்களில் நிலங்களையும் கிளை மடங்களையும் பெற்ற ஸ்தாபனங்கள் பல உண்டு. அவ்வக்காலத்தே மடங்களில் தலைமை வகித்தவர்களுடைய பேராற்றலாலும் அவர்கள்பால் உபதேசம் முதலியன பெற்றுக்கொண்ட துறவிகளின் நன்முயற்சியாலும் மடங்களுக்கு நிலங்களும் பலவகைப் பொருள் வருவாய்களும் சேர்ந்தன.

தங்கள் தங்கள் ஞானாசிரியரிடத்தில் உள்ள பக்தி மேலீட்டால் தமிழ் நாட்டிலும் பிறவிடங்களிலும் உள்ளவர்களைத் தம்முடைய கல்வியாற்றல் முதலியவற்றால் வசப்படுத்திப் பொருள் பெற்றுத் தம் ஆசிரியர்களுடைய திருவடியில் அர்ப்பணஞ் செய்த தம் நலங்கருதாத தம்பிரான்கள் பலருடைய முயற்சிகளால் அம்மடங்கள் வளம் பெற்ற வரலாறுகள் பல உண்டு.

திருவாவடுதுறை யாதீனத்தைத் தமிழுலகம் நன்கறியும். அவ்வாதீனத்திற்கு அடியார்களாக இருந்த தம்பிரான்கள் பலர் மேற்சொன்ன முறையில் நிலங்கள் முதலியன பெற்று அவற்றை ஆதீனத்துக்கு அர்ப்பணம் செய்துள்ளார்கள். ஸ்ரீ சிவஞானயோகிகளும் ஸ்ரீ கச்சியப்பஸ்வாமிகளும் சென்னை, காஞ்சீபுரம் முதலிய இடங்களில் தாம் பெற்றபொருள்களை இங்ஙனம் ஆசிரியர்களுக்கே உரியனவாகக் கொடுத்துவந்தார்கள்.

சற்றேறக்குறைய இருநூறு வருஷங்களுக்கு முன்பு அவ் ஆதீனத்தில் இத்தகைய தம்பிரான் ஒருவர் இருந்தார். அவருடைய பெயரேனும் அவர் காலத்திலிருந்த ஆதீனத் தலைவருடைய பெயரேனும் இப்பொழுது தெரியவில்லை.

அத்தம்பிரான் தமிழ்க்கல்வியில் மிகவும் தேர்ந்தவர்; இனிய செய்யுட்களை அழகிய கற்பனைகளோடு பாடும் வன்மையுடையவர்;



வடமொழியறிவும் இசைப் பயிற்சியும் உள்ளவர்; ஞானாசிரியர்பால் அளவிறந்த பக்தியும் திருவாவடுதுறை யாதீனத்தின் அபிவிருத்திக்கு உரியவற்றைச் செய்வதில் ஊக்கமும் நிரம்பியவர்; சிவபூஜா துரந்தரர்; தோற்றப்பொலிவும் துறவொழுக்கந்தவறாத தூய்மையும் அவருடைய சிறப்பை அலங்கரித்து விளங்கின.

ஆதீனத்தின் பாலுள்ள அபிமான மிகுதியினால் அங்கே நடைபெறும் சிவபூஜை மகேசுவரபூஜை முதலியன சிறப்பாக நடைபெற வேண்டுமென்னும் எண்ணங்கொண்டு அவர் பல இடங்களுக்குச் சென்று தம்முடைய பலவகை ஆற்றல்களினால் அங்கங்கே உள்ள ஜமீன்தார்களையும் செல்வர்களையும் நட்பினராக்கிக்கொண்டு அவர்கள் மனங்கனிந்து கொடுப்பனவற்றை ஏற்று ஆதீனத்திற் சேர்த்து வந்தார். சென்ற இடங்களில் அவருடைய கல்வியாற்றலும் கவி வன்மையும் யாவரையும் தம் வசமாக்கின. அவரது தோற்றப் பொலிவு கல்லாரையும் அவர்பால் ஈடுபடச் செய்தது. திருவாவடுதுறை யாதீனம் சைவப் பயிர் தழைக்கும் இடமென்று அவர் வாயிலாக அறிந்த மக்களுக்கு அவ்வாதீனத்திற்பக்திபெருகுவதாயிற்று. 'இந்தத் தவமுனிவரே சிவ கணத்துள் ஒருவரைப் போலத் தோற்றும்போது இவரைப்போன்ற பலரும் அவர்களுக்கெல்லாம் ஆசிரியராக ஒரு ஞானதேசிகரும் இருந்து விளங்கும் திருவாவடுதுறை இந்த உலகத்தில் வந்த கைலாஸம் போலத்தான் இருக்கவேண்டும்' என்று ஜனங்கள் எண்ணினார்கள். பலர் திருவாவடுதுறை சென்று ஞானாசிரியரைத் தரிசித்து அங்குள்ள காட்சிகளைக் கண்டு களித்து மீண்டு வந்து தம்முடைய விம்மிதத்தைப் பிறருக்கும் தெரிவிக்கலானார்கள். இங்ஙனம் அத்தம்பிரானுடைய முயற்சி பல்கி நலம் பயப்பதாயிற்று.

திருவனந்தபுரத்தில் அக்காலத்தில் இருந்த அரசர் கல்வியாளர்களிடத்தில் பேரன்பு பூண்டு அவர்களுக்கு வரையாது வழங்கும் வள்ளலென்று அத்தம்பிரான் கேள்வியுற்றார். அவ்வரசர்பாற் சென்று பழகி வரவேண்டுமென்றெண்ணி அவர் திருவனந்தபுரம் போய்ச் சேர்ந்தார். அவருடைய வரவை யறிந்து அங்கே இருந்த சைவச் செல்வர்கள் சிலர் அவரை வணங்கி உபசரித்தார்கள். அந்த ஸம்ஸ்தானாதிபதி வடமொழியிலும் இசையிலுமே விருப்பமுடையவரென்றும் தமிழ் வித்துவான்களை அவர் பார்த்தலரிதென்றும் தம்

பிரான் அவர்கள் மூலமாக அறிந்தார். ஆயினும் சிவகிருபையினால் எவ்வாறேனும் அவ்வரசரைப் பார்த்துவிட்டுத்தான் செல்லவேண்டுமென்ற உறுதி பூண்டார். எவ்விதமாகப் பார்க்கலாமென்று யோசிக்கலானார். அங்குள்ளவர்கள் அது நிறைவேறுவதரிதென்று சொல்லிவிட்டார்கள்.

இங்ஙனம் சிலகாலம் அவர் திருவனந்தபுரத்திலேயே காத்துக்கொண்டிருந்தார். சைவர்கள் அவரை மிக்க பயபக்தியோடு ஆதரித்து வந்தனர். ஒருநாள் அரசர் தம்முடைய குலதெய்வமாகிய ஸ்ரீ பத்மநாபஸ்வாமியைத் தரிசிக்கும் பொருட்டுப் புறப்பட்டார். அவருடைய வரவை முன்னரே அறிந்த தம்பிரான் அன்று எவ்வாறேனும் மன்னரைக் காணவேண்டுமென்ற துணிவுகொண்டு அவர் வரும் வழியில் தக்க கையுறைகளுடன் நின்றனர். அரசர் அவ்வழியே வரும்போது அவருக்கு முன்வரும் சேவகர்கள் தம்பிரானைக் கண்டார்கள்; அவருடைய நெற்றியிலும் மேனியிலும் உள்ள திருநீறும் காதிலிருந்த ஆறுகட்டி சுந்தரவேடமும் மார்பில் விளங்கிய கௌரீசங்கரத்தோடு கூடிய ருத்ராட்சமாலையும் ஜடாபாரமும் நீண்ட தாடியும் மீசையும் கடுங்காவி உடையும் அவர்களை அஞ்சச் செய்தன. வழக்கமாக வழியிலுள்ளவர்களை விலக்குவது போல அவரை விலக்க அவர்கள் பயந்தார்கள்.

அரசர் தம்பிரானைக் கண்டார்; தம்பிரானது தோற்றப் பொலிவில் ஈடுபட்டு நின்றார்; இதுதான் சமயமென்றெண்ணிய தம்பிரான் கையுறைகளை மன்னரிடம் அளித்தார்; எதிர்பாராத அவருடைய செயலுக்கு அரசர் வியந்து அருகிலுள்ளவர்களைக்கொண்டு அவரை யாரென்று விசாரிக்கச் செய்தார். அப்பொழுது அவர் இசையோடு பின்னுள்ள பாடலைச் சொன்னார்:

(எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

“மாறிடத் துலவு வேற்படை வஞ்சி
மன்னவ செந்தமிழ் மயில்யாம்
கூறுமூ வேந்தர் திருமுடி துளக்கக்
குலவினோம் நின்குலத் தொருவன்
ஆறுசேர் சடை யானவைமுன நம்மை
அணிசெய்தா னாரியப் பொதுப்பெண்



சீறுமென் றுணர்ந்தாய் நீயிவண் மதியாய்
திருமுனி மலயமே குதுமே.”

இதன்பொருள்:— போரில் பகைவர்கள் கூட்டத்திடையே உலாவுகின்ற வேலாயுதத்தையுடைய வஞ்சிமாநகரத்துக்கு அரசே! நாம் செந்தமிழாகிய பெண்; முன்பு நாம் சேரசோழபாண்டியர்களாகிய மூவரும் தம் தலைவணங்க மகிழ்ந்திருந்தோம்; அவர்களுள் உன்னுடைய குலத்தில் ஒருவராகிய சேரமான் பெருமாள் நாயனார் கங்கை சேர்ந்த சடைமுடியுடைய சிவபெருமானது திருமுன்னர் அழைத்துச் சென்று நம்மை அழகுபெறச் செய்தார். இத்தகைய பெருமையும் உன் குலத்துக்கு உரிமையும் உடைய எம்மை, ஆரியமாகிய பொதுமகள் கோபிப்பாளென்று எண்ணி இங்கே எம்மை மதியாமலிருக்கின்றாய்; ஆதலின் இனி எம்மை வளர்த்த அகத்திய முனிவருக்குரிய பொதியின் மலைக்குப் போய்விடுகிறோம்.

[திருமுடி துளக்க—சிரக்கம்பம் செய்யவென்றும் பொருள் கொள்ளலாம். அணிசெய்தா னென்றது கைலைமலையில் சேரமான் பெருமாணாயனார் திருக்கைலாய ஞானவுலாவை அரங்கேற்றியதைக் குறிப்பித்தவாறு.]

தனக்குரியவளாகிய மங்கை ஒருத்தியைப் புறக்கணித்துப் பொதுமகளோடு நட்புப் பூண்ட ஒரு கணவனை நீங்கி அவள் தன் பிறந்த வீடு சென்றுவிடும் வழக்கத்தை நினைவிற்கொண்டு இச்செய்யுள் செய்யப்பட்டது. ஆரியத்தைப் பொதுமகளென்றது, பரதகண்டத்திலுள்ள நாடுகள் எல்லாவற்றிற்கும் அது பொதுவாகி வழங்கிவருதல்பற்றி. சொல்லமைதியால் இழிவுடையது போலத் தோற்றினும் பொருளமைதியால் மிக்கவியாபகத்தை யுடைமையை அது புலப்படுத்தி நின்றது.

தம்பிரான் தாம் பல நாளாகக் காத்திருப்பதைக் கூறிவிட்டு இச்செய்யுளின் பொருளை விரித்துரைத்தார்; அரசருக்குப் புலப்படும் வண்ணம் வடமொழித் தொடர்களாலும் விஷயங்களை விளக்கினார். செய்யுளின் பொருளை உணர்ந்த அரசர் தம்பிரானுடைய சாதுர்யத்தை அறிந்து மகிழ்ந்தார். தமிழைப் புறக்கணித்தது தவறென்பது அவர் மனத்துக்குப் புலப்பட்டது.

அரசர் அவருக்கு வேண்டியவற்றை அளித்து உபசரிக்கும்படி அருகில் நின்ற உத்தியோகஸ்தர்களிடம் கட்டளை யிட்டுவிட்டு

ஸ்வாமி தரிசனம் செய்யச் சென்றார். தரிசனம் செய்த பிறகு அரண்மனைக்கு வந்து கவனிக்கவேண்டியவற்றை முடித்துக் கொண்டு தம்பிரானை அழைத்துவரச் செய்தார்.

தம்பிரான் அரசரைக் கண்டார்; அவருடைய ஸல்லாபத்தால் தமிழ்மொழியின் வளப்பத்தை அரசர் அறிந்ததோடன்றிச் சேரர்கள் தமிழை வளர்த்த வரலாற்றையும் நன்றாகக் கேட்டுத் தெளிந்தனர். பின்பு தம்பிரான் திருவாவடுதுறையின் பெருமையைப் பலபடியாக எடுத்துரைத்தார்; அவருடைய அறிவின் திறத்தையும் தூய்மையையும் அரசர் உணர்ந்ததன்றி அவ்வாதீனத்தின்பால் அவருக்கு நன்மதிப்பும் உண்டாயிற்று. அவ்வாதீனத்திற்குச் செய்யப்படும் உதவிகளெல்லாம் சிவபூஜை மகேசுவர பூஜைகளிலும் பல அறச்செயல்களிலும் பயன்படுகின்றனவென்றும் அம்மடத்தினது விருத்தியானது ஊருணி நீர் நிறைந்ததற்கொப்ப உலகுக்குப் பயன்தருமென்றும்தம்பிரானுடைய வார்த்தைகளால் அரசர் அறிந்தார். தம்பிரான் சிலகாலம் அரசருடைய ஆதரவில் அங்கேயே இருந்து தமிழ் நயத்தை இயன்றவரையில் எடுத்துக் காட்டினர்.

பிறகு தம்பிரான் திருவாவடுதுறைசெல்ல எண்ணி அரசர்பால் விடை பெறுதற்கு விருப்பங் கொண்டார். அதுகாறும் அத்தகையவர்களோடு பழகியறியாத அரசர் அவருடைய தூய்மையில் ஈடுபட்டமையால் அவரைப் பிரிவதில் சிறிது மனம் வருந்தினர். அப்பால் பலவகையான பொருள்களை உதவினர். பட்டுக்களும், பீதாம்பரங்களும் பூஜைக்கு வேண்டிய வெள்ளிப்பாத்திரங்களும், பிறவும் வழங்கினர்; அவருக்கு ஒரு பல்லக்கு அளித்து அதனைச் சுமப்பவர்களுக்குரிய அடித்தூண் சம்பளத்துக்கு வேண்டும் பொருளையும் ஈந்தார்; "நீங்கள் அடிக்கடி இங்கே வந்து போக வேண்டும்" என்று கூறி விடையளித்தார்.

தாம் பெற்ற பொருள்களோடு தம்பிரான் திருவாவடுதுறை வந்து யாவற்றையும் ஞானாசிரியர் திருமுன் காணிக்கையாக வைத்துப்பணிந்தார்; "இவை தமிழ் தந்த வளம்" என்று சொல்லித் திருவனந்தபுரத்தில் நிகழ்ந்தவற்றை விரிவாகச் சொன்னார்.

அந்தத் தம்பிரானும் திருவனந்தபுரம் அரசரும் பூதவுடம்பை நீத்தனராயினும் தமிழ் தந்த வளங்கள் இன்றும் திருவாவடுதுறை ஆதீனத்துக்கு உரியனவாக விளங்குகின்றன.

[இவ்வரலாற்றை முதலில் எனக்குச் சொன்னவர் திரிசிரபுரம் ஸ்ரீ சி. தியாகராச செட்டியாரவர்கள்.]

உ

# கல்யாணப் படித்துறை.

(மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதிவெளியிட்ட "புதியதும் பழையதும்" என்ற புத்தகத்திலிருந்து அனுவதித்தது.)

சற்றேறக்குறைய 60-வருஷங்களுக்கு முன்பு திருவாவடுதுறையில் சுப்பராயக் குருக்கள் என்று ஓர் ஆதிசைவர் இருந்தார். அவருடைய மனைவி விவாகமான சில வருஷங்களுக்குப் பின் இறந்து விட்டாள். அது முதல் சுப்பராயக் குருக்கள் தனியாகவே இருந்துவந்தார். அவர் திருவாவடுதுறை ஸ்ரீ கோமுத்தீசுவரர் திருக்கோயிற் பூஜகர்.

திருவாவடுதுறை ஆதீனத்துத் தலைவர்கள் வந்து சுவாமி தரிசனம் செய்யும் பொழுதெல்லாம் ஸ்வர்ணபுஷ்பமாக அரைக்கால் ரூபாய்முதல் ஒரு ரூபாய் வரையில் சமயத்திற்கு ஏற்றபடி அளிப்பது வழக்கம். திருவிழாக்காலங்களில் அவருக்கு அதிகமான வரும்படியும் கிடைக்கும். இப்படியே அவ்வப்போது கிடைத்து வந்த பணத்தைச் சுப்பராயக் குருக்கள் சேர்த்துவைத்தார். கோயிற் பிரசாதத்தை எடுத்துக்கொண்டு வந்து தாமே ஏதாவது வியஞ்சனம் செய்தாவது பிறர் வீட்டில் வாங்கியாவது உண்டு சுகமா வாழ்ந்து வந்தார்; ஆதலின் அவருக்குப் பணச் செலவே இல்லை. அவரிடத்திலிருந்த பணம் ஒன்று பத்தாகவும் பத்து நூறாகவும் வளர்ந்தது. எல்லாரும், "சுப்பராயக் குருக்களுடைய பணம் குட்டி போட்டுக்கொண்டிருக்கிறது" என்று சொல்லிக்கொள்வார்கள்.

கோயிலிலே பூஜை செய்வதும் பிரசாதத்தை உண்பதும் ஒழிந்த நேரங்களில் சீட்டாடுவதுமே அவருடைய பொழுதுபோக்காக இருந்தன. இப்படியே பல வருஷங்கள் இன்பமாகக் கழிந்தன. ஆயிர ரூபாய்க்குமேல் அவரிடம் பொருள் சேர்ந்தது.

அவருக்கு 58 பிராயம் ஆயிற்று. நெடுங்காலமாக உழைத்தவராதலின் உடலில் தளர்ச்சி உண்டாயிற்று. அடிவயிற்றில் வீக்கம், காலில் வீக்கம் முதலியனவும் இருந்தன. அக்காலத்தில் அவருடைய உறவினர்களிற் சில முதிய கிழவிகள் அவரைக்கண்டு, "இப்படியே இருந்து நீ செத்துப் போனால் உன் பேரைச் சொல்ல யார் இருக்கிறார்கள்? பெண்டாட்டியா? பிள்ளையா? உனக்கு ஒருவரும் இல்லையே! பொன் காத்த பூதமாக இருக்கிறாயே. நாளைக்கு எவனாவது கொள்ளி வைத்துவிட்டு எவ்வனவோ சிரமப்பட்டு நீ சேர்த்த பணத்தைக் கொள்ளை கொண்டு போகப்போகிறான்! இப்படி வீணாக நீ பணம் சேர்ப்பதில் என்ன பிரயோசனம்?" என்றார்கள். வேறு சிலர், உன்னைப் போலப் பைத்தியக்காரனை நாங்கள் பார்த்ததே இல்லை. கைந்நிறையப் பணம் வைத்துக்கொண்டு தனிமரம்போல நிற்கிறாயே. வீடுநிறையப் பெண்டு பிள்ளைகளோடு இருக்கவேண்டாமா?

பிள்ளைகள் இல்லாவிட்டால் பாதகமில்லை. ஒரு பெண்டாட்டியாவது இருக்கக் கூடாதா? எவ்வளவோ பெண்கள் கிடைப்பார்களே. பேசாமல் ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கொள். எத்தனை நாளுக்கு இந்தக் கோயிற்சோற்றைத் தின்பாய்? வாய்க்கு ருசியாக ஒரு குழம்பு, கறி இவைகளோடு பெண்டாட்டி ஒருத்தி சமைத்துப் போட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? உனக்கென்ன, பணம் இல்லையா? வீடு இல்லையா?" என்றார்கள்.

அதுவரையில் கல்யாணத்தைப் பற்றிக் கனவிலும் நினைத்தறியாத குருக்களுக்கு அவர்களுடைய உபதேசத்தால் சிறிது சபலம் உண்டாயிற்று. "எனக்கு யார் பெண் கொடுப்பார்கள்?" என்று கேட்டார் அவர்; "நன்றாயிருக்கிறது! உனக்கா பெண் அகப்படமாட்டாள்! அன்றாடங்காய்ச்சிகளெல்லாம் பெண்டாட்டியோடு வாழ்கிறார்களே! உனக்கென்ன குறைச்சல்! இந்த நிமிஷத்திலே நூறு பெண்கள் உன் காலில் வந்து விழுவார்கள். நீதான் சம்மதிக்கவேண்டும்" என்று சொன்னார்கள் அவர்கள்.

"இவ்வளவு வயசுக்குமேல் எனக்குக் கல்யாணம் எதற்கு?"

"எதற்கா? நீ கீழேபடுத்துக்கொண்டால் உனக்குயார் கஞ்சி வைத்துக் கொடுப்பார்கள்? கையும் காலும் திடமாக இருக்கிறவரையில் மாமா, சிற்றப்பா, பெரியப்பா என்று எல்லோரும் வருவார்கள்; பணம் கொடுத்தால் வாங்கிக் கொள்வார்கள். கொஞ்சம் தலையிலே பற்றுப் போட்டால் வெந்நீர் கூட ஒருவரும் வைத்துக் கொடுக்க மாட்டார்களே. தெரியாமலா தாய்க்குப் பின் தாரம் என்று சொல்லுகிறார்கள்? ஒரு பெண்கட்டையிருந்தால் சமைத்துப் போடவும், கால் பிடிக்கவும் வீட்டைப் பார்த்துக்கொள்ளவும் எவ்வளவு அனுகூலமாக இருக்கும்? வீட்டிற்குலக்ஷ்மீகரம் உண்டாக்குகிறவள் பெண்டாட்டியல்லாமல் வேறு யார்?"

"நான் இப்போது கல்யாணம் பண்ணிக்கொண்டால் பணம் அதிகமாகக் கேட்பார்களே?"

"அதனால் என்ன? பணத்தை யாருக்காக நீ சேர்த்து வைக்கிறாய்? நாளைக்கு யாரேனும் ஒருவன் கொண்டு போவதைவிட ஒரு பெண்ணை உத்தேசித்து நீயாக ஒருவனுக்குக் கொடுப்பது குறைவா?"

இப்படியே பலர் பலவிதமாகப் பேசிக் குருக்களுக்குக் கல்யாண ஆசையை மூட்டிவிட்டார்கள். அவருக்கு அந்த ஆசை யிருப்பதை அறிந்த சில ஆதிசைவர்கள் தங்கள் தங்கள் பெண்களை அவருக்குக் கொடுக்க முன் வந்தார்கள்; ஒருவரை யொருவர் முந்திக்கொண்டனர். அவர்களுள் ஒருவர் ஒரு பெருந்தொகையைக் குறிப்பிட்டு அதனைக்கொடுத்தால் தம்பெண்ணைக் கல்யாணம் செய்து தருவதாக உறுதி கூறினார். குருக்களும் இசைந்தார். நிச்சய தாம்பூலத்தைத் தம்முடைய வீட்டில் சிறப்பாக நடத்த வேண்டுமென்பது குருக்களுடைய எண்ணம்; கல்யாணத்தையும் தம் வீட்டிலேயே நடத்த வேண்டுமென்று சொல்லிப் பெண் வீட்டாரது உடம்பாட்டைப் பெற்றார்.



ஒருநாள் விடியற்காலத்தில் நிச்சயதாம்பூல முகூர்த்தமும், பிறகு கல்யாண முகூர்த்தமும் நடத்த ஏற்பாடாயிற்று. அன்று கோயில் வாத்தியக்காரர்கள் குருக்களின் விருப்பப்படி வந்துவாசித்தார்கள். சில உறவினர்கள் வந்திருந்தனர். கஞ்சனூரிலிருந்து புரோகிதரும் வந்திருந்தார். குருக்கள் தம் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்தபடியே வருவோரை முகமலர்ச்சியுடன் வரவேற்று உபசரித்து உள்ளே போகும்படி சொல்லிக்கொண்டிருந்தார். நின்றும் நடந்தும் உபசரிக்கும் சக்தி அவரிடம் இல்லை; உடல் அவ்வளவு தளர்ந்திருந்தது. காலில் சிறிது வீக்கம் இருந்தது; கடைவாய் வெந்திருந்தது; தலைமயிர் நரைத்து அவருடைய முதுமையைப் பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தது.

அப்பொழுது கோட்டூர்ச் சுப்பிரமணிய ஐயரென்ற ஒரு கனவான் அவர் வீட்டு வழியே மடத்திற்குச் சென்று கொண்டிருந்தார். அவர் திருவாவடுதுறை மடத்திற் பழக்கமுடைய செல்வர்; திருவாவடுதுறையிலுள்ளார் யாவராலும் நன்கு மதிக்கப்படுபவர். அவர் வீதிவழியே செல்லும்போது சுப்பராயக் குருக்கள் வீட்டில் ஒரு நாளும் இல்லாத வாத்திய கோஷமும் ஜனக்கூட்டமும் இருப்பதைக் கவனித்தார்; 'இவர் வீட்டில் என்ன விசேஷம் நடக்கிறது?' என்று எண்ணிக்கொண்டே அவ்வீட்டில் நுழைந்தார். அவர் வருவதைக் கண்ட குருக்கள் இருந்தபடியே, "வரவேண்டும்; வரவேண்டும்; உள்ளேபோய் சந்தன தாம்பூலம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொல்லி உபசரித்தார்.

சுப்பிர:—இங்கே என்ன விசேஷம்?

குருக்கள்:— இன்றைக்கு நிச்சயதாம்பூல முகூர்த்தம். தாங்கள் இருந்து போகவேண்டும்; கல்யாணத்தையும் நடத்திவைக்கவேண்டும்.

சுப்பிர:— யாருக்குக் கல்யாணம்?

குருக்கள்:— எனக்குத்தான்; தாங்கள் நடத்திவைக்கவேண்டும்.

சுப்பிரமணிய ஐயர் குருக்கள் கூறியதை நம்பத்துணியாமல், "உமக்கா"? என்று கேட்டார்.

"ஆமாம்" என்றார் குருக்கள்.

சுப்பிரமணிய ஐயருக்கு முதலில் மிக்க ஆச்சரியம் உண்டாயிற்று; அடுத்த நிமிஷத்தில் அது பெருங் கோபமாக மாறியது; அவரை அறியாமலே அவர் கை சுப்பராயக்குருக்கள் கன்னத்தில் அறைந்தது; "சீ! கிழட்டுப் பிணமே! உனக்குக் கல்யாணம் வேண்டியிருக்கிறதா? எழுந்திருந்து நடக்கக் கூடச் சக்தியில்லையே! நீ கல்யாணம் செய்துகொண்டு என்ன செய்யப் போகிறாய்? அநியாயமாக ஒரு பெண்ணைக் கெடுக்கத் துணிந்தாயே! எந்தப் பைத்தியக்காரன் உனக்குப் பெண்ணைக் கொடுக்கத் துணிந்தான்? அந்தப் பேராசைக்காரனுக்கு பணம் பெரிதாகப் போய்விட்டது போலிருக்கிறது. உனக்குக் கொடுப்பதைவிட எங்கேயாவது ஒரு பாழுங் கிணற்றில் அந்தப் பெண்ணைத் தள்ளிவிடலாமே. கல்யாணம் பண்ணிக்கொள்கிறேனென்று சொல்ல உனக்கு வெட்கமாக இல்லையா? இனிமேல் உனக்குப்பெண்டாட்டி எதற்கு?" என்று மேலும் மேலும் கோபத்தோடு பேசினார். குருக்கள் நடுங்கிப்போய்விட்டார். சுப்பிரமணிய ஐயர் உள்ளே நுழைந்து, "யார் இவனுக்குப் பெண்ணைக் கொடுக்கவந்தான்? இந்த அக்கிரமம் தெய்வத்துக்கு அடுக்குமா? அவன் இன்றைக்கே இங்கிருந்து ஓடிப்போகவேண்டும். இல்லையானால் தக்கபடி தண்டனை கிடைக்கும்" என்று கர்ஜித்தார். புரோகிதரைப் பார்த்து, "இதுதான் வேதாத்தியயனத்தின் பலனோ? இங்கே இருந்தால் இனிமேல் உம்மை யாரும் எதற்கும் கூப்பிடாதபடி செய்துவிடுவேன்; ஜாக்கிரதை; ஊருக்குப் போய்விடும்" என்று அதட்டினார்; வாத்தியக்காரர்களை நோக்கி, "இப்போதே ஓடிவிடுங்கள்; ஒரு நிமிஷமாவது இங்கே தாமதித்தால் பண்டாரசந்நிதிகளிடம் தெரிவித்து உங்கள் வாயில் மண்ணைப்போட்டுவிடுவேன்" என்று வைது துரத்தினார். அதோடுமில்லாமல் வெளியில் வந்து நடுவீதியில் நின்றுகொண்டு, "கூகூ! அக்ரமம்! அக்ரமம்! பழி! பழி!" என்று கைகளைத் தூக்கிக்கொண்டும் மேலாடையை எடுத்தெறிந்துகொண்டும் குதித்துக் குதித்துக் கூவினார். அவருடைய சப்தத்தைக் கேட்டுப் பலர் அங்கே வந்து கூடிவிட்டனர்; "என்ன? என்ன? யாராவது கிணற்றில் விழுந்து விட்டார்களா? தீப்பிடித்துக்கொண்டதா?" என்று ஆளுக்கொரு கேள்வியாகக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

"சுப்பராயக் குருக்கள் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறாராம். அநியாயமாக ஒரு பெண்ணினுடைய வாழ்க்கை பாழாகப் போகிறது. அக்கிரமம்! அக்கிரமம்!" என்று சுப்பிரமணிய ஐயர் பெருங் கூப்பாடு போட்டார்.

இந்தக் கலவரத்தில் நிச்சய தாம்பூல முகூர்த்தத்திற்கு வந்த உறவினர்களும், பெண்ணைக் கொடுக்க வந்தவரும், பிறரும், "பெற்றோம் பிழைத்தோம்" என்று தங்கள் தங்கள் ஊருக்குப் போய்விட்டார்கள். குருக்கள் கல்யாணமும் நின்றது; ஓர் இளம்பெண்ணுக்கு நேரவிருந்த விபத்தும் நீங்கியது.



இந்த நிகழ்ச்சிக்குப் பின் சில காலம் வரையில் குருக்களுக்கு மனவருத்தம் சிறிது இருந்தது. பிறகு யோசிக்க யோசிக்கத் தாம் கல்யாணம் செய்துகொள்ளாமல் இருந்ததே நன்மையென்பதை அவர் உணர்ந்தார். அயலிடங்களில் முதிர்ந்த பிராயத்தினர் கல்யாணம் செய்துகொண்டு படும் பாடுகளும், தம்முடைய இளையமனைவிக்கு அடிமையாகித் தமக்கு யாதோர் உரிமையுமின்றிச் சிறைபட்டு இருக்கும் பல கணவர்களுடைய துன்பங்களும் அவருடைய நினைவுக்கு வந்து அவர் துசபலத்தை அடியோடு மாற்றிவிட்டன. அப்பால் ஒருமுறை நான் அவரைக் கண்ட காலத்தில் தெளிவடைந்த அறிவோடு அவர் என்னை நோக்கி, "சுப்பிரமணிய ஐயர் கல்யாணத்தைத் தடுத்தது மிகவும் நன்மையாயிற்று; அதுவரவரத்தான் எனக்குத் தெரிகிறது" என்று சொன்னார். தாம் எவ்வளவோ நாட்கள் சிந்தித்து முடிவு கண்ட அந்த உண்மையை அவர் அப்பொழுது வெளியிட்டார். அவருடைய வார்த்தைகள், பிறர் மதியீனத்தால் அகாலத்தில் மணஞ் செய்துகொண்டு படும் துன்பங்களை அறிந்ததனால் எழுந்தவை யென்றே நான் உணர்ந்தேன்.

பிறகு சுப்பராயக் குருக்கள் தம்மிடமிருந்த பொருளைச் சில அன்பர்களுடைய அறிவுரையின்படி திருவாவடுதுறையில் காவிரிநதியில் ஸ்நானம் செய்யும் கட்டத்தில் ஒரு படித்துறை கட்டுவதற்கு உதவினார். வேறு சிலரிடம் பெற்ற தொகையையும் கொண்டு அப்படித்துறை அக்கிராகாரத்தாரால் கட்டப்பட்டது. படித்துறையைச் சார்ந்து ஒரு மண்டபமும் உள்ளது. படித்துறை கட்டப்பட்ட பிறகு குருக்களுக்கு இருந்த மகிழ்ச்சி மிக அதிகம். தம்முடைய வாழ்வில் ஒரு நல்ல காரியத்தைச் செய்தோமென்ற திருப்தியுண்டாகி அவருக்கு இல்லற இன்பத்தைக் காட்டிலும் அது பெரிய மகிழ்ச்சியை விளைவித்தது.

முற்கூறிய நிகழ்ச்சிக்குப் பின்பு நான்கு வருஷங்களே சுப்பராயக் குருக்கள் வாழ்ந்திருந்தார். இச்செய்தியை அறிந்தவர்கள் அப்படித்துறையைப் பற்றிப் பேசும்போது 'கல்யாணப் படித்துறை' என்று குறிப்பது வழக்கம். சுப்பராயக் குருக்களுடைய பொருளுதவியால் கட்டப்பட்ட படித்துறை இன்றும் அவருடைய பெயரை நினைவுறுத்திக்கொண்டு பயனளித்து வருகின்றது.

---

உ

# பிறை முழுமதியானது.

(மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதிவெளியிட்ட "புதியதும் பழையதும்" என்ற புத்தகத்திலிருந்து அனுவதித்தது.)

பாண்டி நாட்டில் * சூரைமா நகரமென்னும் சிவஸ்தலத்தில் ஒரு † சிற்றரசன் வாழ்ந்து வந்தான். அவன் சிவபெருமானிடத்தில் இடையறாத அன்பும், தமிழ்ப்பயிற்சியும், புலவர்களிடத்துப் பெருவிருப்பமும் உடையவன். இனிய கவிகளை இயற்றும் ஆற்றல் பெற்றவன். தமிழ்ப் புலவர்கள் இருக்கும் இடந்தேடிச் சென்று போற்றி அளவளாவி வரும் இயல்பினன்.

ஒரு சமயம் தமிழ் நாட்டிலிருந்த சில புலவர்கள் சேர்ந்து சிவஸ்தல யாத்திரை செய்துகொண்டு வந்தனர். அங்கங்கே உள்ளவர்கள் அவர்களை வரவேற்று உபசரித்து அவர்களுக்கு ஆவன புரிந்துவந்தார்கள். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்றபடி அவர்கள் சென்ற இடங்களெல்லாம் அவர்களுடைய சொந்த ஊரைப் போன்றிருந்தன; அவர்களோடு பழகியவர்கள் யாவரும் உறவினரைப் போலவே பேரன்பு வைத்து ஆதரித்தார்கள். தமிழ்ப் புலமையோடு, கற்றதனாலாய பயனாகிய தெய்வ பக்தியும் அவர்கள்பால் சிறந்திருந்தமையின் தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்கு அவர்களிடத்திற் பெரு மதிப்பு உண்டாயிற்று.

சிவஸ்தலங்களுக்குச் செல்வதும், அந்த அந்த ஸ்தல விசேஷங்களைக் கேட்டு ஆராய்ந்து அறிவதும், சிவதரிசனம் செய்து மனமொழி மெய்களால் வணங்கி இன்புறுவதும், அங்கங்கேயுள்ள பிரபுக்களிடத்தும் வித்துவான்களிடத்தும் பழகுவதும் ஆகிய செயல்கள் அப்புலவர்களுடைய யாத்திரையின் பயனாக இருந்தன. ஆதலின் அவர்கள் மிக்க உவப்போடு யாத்திரைசெய்து வந்தார்கள்.

இங்ஙனம் வருபவர்கள் பாண்டிநாட்டிலுள்ளதும் தேவாரம் பெற்றதுமாகிய திருப்புத்தூர் என்னும் திருப்பதியை அடைந்தார்கள். அங்கே எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநாமம் ஸ்ரீ தளீசுவரரென்பது. அது திருத்தளியானென்று வழங்குவதும் உண்டு. அத்தலத்திலே சிவபெருமான் ஒரு சமயத்தில் நடனம் புரிந்தருளினரென்பது புராண வரலாறு. அது சூரைமா நகருக்கு அருகில் உள்ளது.

---

* இது சூரைக்குடியென வழங்கும். † இவன் பெயர் விசயாலயனென்று சூரைமாநகர்ப் புராணம் கூறும்.



புலவர்கள் சிவதரிசனத்தின் பொருட்டுச் சிவஸ்தல யாத்திரை செய்துவருவதைச் சூரைமா நகரில் இருந்த அரசன் அறிந்தான். அவர்களைக் கண்டுபேசி மகிழ வேண்டுமென்ற ஆவல் அவனுக்கு உண்டாயிற்று. அவர்கள் திருப்புத்தூருக்கு வந்திருப்பதை யறிந்து எங்ஙனமேனும் அவர்களை அழைத்து உபசரிக்கவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு எழுந்தது. சிவஸ்தல யாத்திரையாக வந்தவர்கள் தன்னைப் பார்ப்பதொன்றையே கருதி வாராரென்பதை அவன் உணர்ந்தான். சூரைமா நகரும் ஒரு பழைய * சிவஸ்தலம். ஆதலின் அவர்கள் சிவதரிசனம் செய்யும்பொருட்டு வரக்கூடுமென்று முதலில் எண்ணினான். பிறகு, ஒருகால் தேவாரம்பெற்ற சிவஸ்தலங்களுக்கேசெல்லும்நோக்கம் உடையவர்களாகஇருப்பின் என் செய்வதென்ற ஐயம் உண்டாயிற்று; 'அப்படியாயின் அவர்கள் சூரைமாநகருக்கு வரமாட்டார்களே. என்ன செய்யலாம்!' என்று யோசித்தான்; அவனுக்கு வேறு வழியொன்றும் தோற்றவில்லை.

பிறகு, தான் தமிழில் விருப்பமுடையவனென்பதை ஒருவகையாகப் புலப்படுத்தினால் அவர்கள் வரக்கூடுமென்று நினைத்தான். ஆதலின் திருப்புத்தூர்ச் சிவபெருமான் நடனம் செய்த வரலாற்றைப் பற்றி ஒரு வெண்பாவை இயற்றி அதனைத் தன் அமைச்சருள் ஒருவனிடம் கொடுத்து, "திருப்புத்தூருக்குச் சென்று அங்கே வந்துள்ள புலவர்களிடம் கொடுத்துவிட்டு அவர்கள் சொல்வதைக் கேட்டு வருக" என்று விடுத்தான். அமைச்சன் அங்ஙனமே சென்று புலவர்களைக் கண்டு வணங்கி அரசன் கொடுத்த கவியை அவர்களிடம் அளித்தான். அளித்து, "இந்தச் செய்யுள் எங்கள் அரசர் இயற்றியது. உங்களைக் கண்டு அளவளாவ வேண்டுமென்ற பெரு விருப்பத்தோடு அவர் இருக்கிறார். எங்கள் நகரம் அருகில் இருக்கிறது. அதுவும் ஒரு பழைய சிவஸ்தலம்" என்றான்.

அவன் அளித்த செய்யுள் வருமாறு:—

186955

(வெண்பா)

"பிறந்த பிறப்பாற் பெறும்பேறு பெற்றேம்
மறந்து மினிப்பிறக்க வாரேம்—சிறந்தமதி
சேர்த்தானைப் புத்தூர்த் திருத்தளியா னைப்புவனம்
காத்தானைக் கூத்தாடக் கண்டு"

இதன் பொருள்: சிறந்த மதியைத் தன் (திருச் சடையிலே) அணிந்தவனை, திருப்புத்தூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ தளீசுவரனை,

---

* இது தேவாரம் பெற்ற ஸ்தலமன்று.

உலகத்தைப் பாதுகாப்பவனைத் திருநடனம் இயற்றியருளிய காலத்தில் தரிசித்து, யாம் பிறந்த (இம்மனிதப்) பிறவியாற் பெறும் பயனை அடைந்தோம்; இனிமறந்தும் பிறப்பை அடையேம். எ-று.]

புலவர்கள் செய்யுளைப் பார்த்தார்கள்; "இந்தப் பாட்டில் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்துள்ளன. ஆயினும் ஒரு குற்றம் இருக்கிறது: இறைவன் திருச்சடையிலுள்ள பிறையைச் சிறந்த மதியென்று சொன்னது சரியன்று. சிறந்த மதியென்பது முழுமதியைக் குறிக்கும். இறைவன் அணிந்திருப்பது முழு மதி அன்று; பிறையே" என்று சொன்னார்கள்.

அவர்கள் கூற்றைக் கேட்ட அமைச்சன் துயருற்றவனாகித் தன் அரசன்பால் ஏகிப் புலவர்கள் கூறியதை உரைத்தான். அமைச்சன் எதிர் பார்த்தபடி அரசன் துயரப்படவில்லை; அதற்கு மாறாக அவனது முகத்தில் மகிழ்ச்சிக் குறிப்பும் மலர்ச்சியும் உண்டாயின. 'நம்முடைய அறிவின் திறனைக்காட்டுவதற்கு ஏற்ற சமயம் வந்தது' என்று அவன் உள்ளுக்குள்ளே மகிழ்ந்தான்.

உடனே அரசன் மந்திரியை நோக்கி, "நீ மீண்டும் திருப்புத்தூருக்கு இன்று மாலையிற் செல்வாயாக. சென்று சங்கப் புலவர்கள் சிவதரிசனம் செய்யச் செல்லும் காலத்தை அறிந்து அவர்களுக்கு முன் செல்க. அப்பொழுது அவருக்கு முன் தீபத்தைக் கைக்கொண்டு வழிகாட்டிச் செல்லும் வேலையாள் கோயில் வந்தவுடன் அத் தீபத்தைக் கீழே வைப்பான். அதனை உடனே நீ எடுத்துக் கொள்ளி வட்டத்தைப்போலச் சுழற்றிவிட்டுக் கீழே வைத்து அவர்கள் சொல்வதை அறிந்து இங்கே வா" என்றுகூறிவிடுத்தான்.

அமைச்சன் திருப்புத்தூர் சென்றான். மாலை நேரத்தில் புலவர்கள் தரிசனம் செய்யப்போகும் சமயமறிந்து உடன் போனான். அரசன் கூறியபடியே அவர்களுக்குமுன் தீவட்டியை எடுத்துக்கொண்டு ஒரு வேலையாள் வழிகாட்டி ஏகினான்; ஆலயம் வந்தவுடன் அவன் அத்தீவட்டியைக் கீழே வைத்தான். உடனே அமைச்சன் தன் அரசனது கட்டளையின்படி அதனை எடுத்துச் சுழற்றிவிட்டுக் கீழே வைத்து நின்றான்.

அங்கே இருந்த பிறர் யாவரும் அமைச்சனுடைய செயலைக் கண்டு வியந்தார்கள்; அமைச்சனை அறிந்த சிலர், "இங்கே வந்து இப்படி இவர் செய்வதற்கு யாது காரணம்? இவருக்கு ஏதாவது சித்தப் பிரமை உண்டாய் விட்டதோ!" என்று இரங்கினர். இந்த நிலையிற் புலவர்கள் அமைச்சன் செயலைப் பார்த்தனர். நுண்ணறிவாளர்களாகிய அவர்களுக்குச் சூரைமாநகர் அரசனது தந்திரம் புலப்பட்டது. அவர்களுக்கு அளவில்லாத வியப்பு உண்டாயிற்று;



"ஆஹா! என்ன நுண்ணறிவு! இறைவன் சுழன்று நடனம் புரிகையில் அந்த வேகத்தினால் அவன் சடாபாரத்திலுள்ள பிறையானது வட்டமாகிய முழுமதியாகத் தோற்றுமென்ற பொருளை, இந்தத் தீவட்டியைச் சுழற்றி வட்டமாகத் தோற்றும்படி செய்து புலப்படுத்தின இவ்வமைச்சன் செயலை வியப்பேமா! நாம் கூறிய குறையை இக்குறிப்புச்செயலால்நீக்குவித்த அரசரின் நுண்மதியை வியப்பேமா! இத்தகைய அரசர் பெருமானை முன்பே நாம் பாராதது பெரும்பிழை" என்று கூறித்தம்முள் மகிழ்ந்தார்கள்; அப்பால் அமைச்சனை நோக்கி,

* "கற்றவர்கள் புகழ்விசயா லயத்தேவன் பாடிவிடு
கவியுள் யாதும்
குற்றமிலை குற்றமிலை குற்றமிலை கருத்துணராக்
கூற்று குற்றப்
பெற்றிநினை யற்கநினை யற்கநினை யற்கவெனப்
பேசு நீபோய்
மற்றவனைக் காணும்விருப் புடையம்நாம் என்பதுவும்
வகுத்தி" என்றார்

[இதன் பொருள்: கற்ற புலவர்கள் புகழ்கின்ற விசயாலயர் பாடி விடுத்த கவியிலே சிறிதேனும் குற்றமில்லை; இது முக்காலும் உண்மை. நாங்கள் முன்பு கூறிய கூற்று உண்மைக் கருத்தை உணராத குறையினாலெழுந்தது. அங்ஙனம் கூறிய எம் குற்றத்தை நினைக்கவேண்டாம், நினைக்க வேண்டாம், நினைக்க வேண்டாமென்று நீ போய் அவரிடம் சொல்க. அன்றியும் நாங்கள் அவரைக் காணும் விருப்பம் உடையோமென்பதையும் கூறுக.]

அமைச்சன் மகிழ்ச்சி தாங்காமல் விரைந்து போய்ப் புலவர் கூறியவற்றை அரசனிடம் தெரிவித்தான். அரசன் பள்ளங்கண்ட நீரைப் போலத் தன் பரிவாரங்களுடன் புலவர்களை அழைக்கப் புறப்பட்டான். புலவர்களும் அரசனைக் காணப் புறப்பட்டார்கள். இருசாராரும் இடைவழியிலே சந்தித்து மகிழ்ந்தனர்.

பிறகு அரசன் புலவர்களைச் சூரைமாநகர்க்கு அழைத்துச் சென்று சில காலம் உபசரித்து வைத்திருந்து சல்லாபம் செய்து இன்புற்றான்.

[இவ்வரலாறு சூரைமாநகர்ப் புராணத்திலுள்ள செய்திகளையும் நான் கேட்டிருந்த சில செய்திகளையும் கொண்டு எழுதப்பட்டது.]

---

* சூரைமாநகர்ப் புராணம், சங்கப்புலவர் பூசித்தபடலம், 35. இப் புராணம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றியது.

உ

# உண்மை அறிவிப்பு.

கோநகரில் 19—10—36-ல் ஒரு புதிய சரஸ்வதி மத்திய கலாசாலைத் திறப்புவிழா நடைபெற்றது. புதுக்கோட்டை சமஸ்தானம் உதவி அட்மினிஸ்ட்ரேட்டர் அவர்கள் திறந்தார்கள். அவர்கட்கு அளிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்தில் "இந்நகரத்தின்கண்ணே.........எங்கள் இளஞ்சிறாரின் கல்வி யபிவிருத்திக்கேற்ற நனிசிறந்த சாதனங்கள் கிடைக்கப் பெறாது அன்னாரின் கல்வித்திறம் வளம் பெறாது குன்றியிருந்தது, ஒரு மாபெருங் குறையே. நவீன சாஸ்திரீய முறைப்படிக்கும், தற்காலத்திய திருத்தி யமைக்கப்பட்டபாங்கிற் கேற்பவும் சீரிய மாண்புடன் சிறுவரின் அறிவு வளர்ச்சியையே இலட்சியமாகக்கொண்டு கல்வித் தொண்டாற்ற வல்ல நாமகள் நிலையங்கள் நிறுவப்பெறாமையின், எங்கள் இளைஞர்கள் சிறு பிராயத்திலேயே தம்மில்லந் துறந்து, வேற்றூர் சென்று கல்வி பயில வேண்டி வந்தது. அதன் பயனாக தனவிரயமும், காலவிரயமும், மிகுந்ததே யன்றி உற்ற பயன் மிகச் சிறிதே. அத்தகையதோர் பெருங் குறையை அகற்ற வெண்ணி எங்கள் சிறுவரின் கலை வளர்ச்சியையும் கல்வி நலத்தையும் ஓம்பி, பன்னாள் முயன்று இந்த ஸ்தாபனத்தை நிறுவியுள்ளோம்" எனக் கண்டிருப்பவை முற்றும் உண்மைக்கு மாறான வெற்றுரைகளே.

ஈசுர பக்தி ஒழுக்கம் முதலிய பல நலங்களில் மேன்மையுள்ளாராய் மாணவ மாணவிகள் திகழச் சிறந்த நற்பயன் தரும் 'கற்பக விநாயக கலாசாலை', 'ஞானசம்பந்த நற்சபை', 'வாணீ மந்திர புத்தகசாலை' என்னுமிவைகள் இருபத்தைந்து ஆண்டுகளாகப் பொற்புடன் மிளிர ஈங்குக் கற்றவர்கள் பலர் மதுரைத் தமிழ்ச்சங்க கலாசாலை முதலிய பல கல்லூரிகட்குச் சென்று பண்டித பரீக்ஷை முதலியவைகளில் தேறிப் பல கலா நிலையங்களில் போதகாசிரியர்களாக இருந்து கல்வி பயிற்றி வருகின்றார்களென்பதையும், ஈங்கு படித்து, பரீக்ஷையில் தேறாதார்கூட இப்புதிய சரஸ்வதி மத்தியகலாசாலையிலும் இன்னும் பல கல்வி நிலையங்களிலும் ஆசிரியராக அமர்ந்துள்ளாரென்பதையும், உள்ளூர் வெளியூர்களிலுள்ள தனவணிகராதிய மக்களுட் பலர் இக்கற்பகவிநாயக கலாசாலையில் பயின்று அறிவாற்றல் மிக்காராய் உயர்ந்த கட்டுரைகள் எழுதும் வன்மையும், அரிய பெரிய விரிவுரைகளாற்றுந் தன்மையும், செய்யுள் செய்யுந்திறனும் நூல்கள் யாக்கும் நுண்மாணுழைபுலனும் பெற்று விளங்குகிறார்கள் என்பதையும், இக்கலாசாலை ஆசிரியர்களின் கல்விப் பெருக்கும் போதனா சக்தியும் போதிக்கும் முறைமையும் ஒவ்வோராண்டுகளிலும் பரீட்சாதிகாரிகளாக வந்த வித்வமணிகள் முதலிய பெரியோர்களாலும் ஞானசம்பந்த நற்சபை கூடுந்தோறும் வந்த அதிமேதாவிகளாலும் மிக மிகப் புகழ்ந்து பாராட்டப்



பெற்றதென்பதையும் கண்கூடாகக் கண்டும் இந்நலன்களை ஒரு சிறிதும் எண்ணிப்பாராது, இந்நகரின்கண் இளஞ்சிறாரின் கல்வி யபிவிருத்திக் கேற்றவசதி இன்மைபோலவும் அக்குறையை யகற்றி இந்நகரை உய்விக்கப் பன்னாள் முயன்று இத்தாபனத்தை நிறுவியது போலவும் சொல்லிக் கொள்வது மிகத் தவறு.

இந்நகரின்கண் தொன்மையாகவுள்ள திண்ணைப்பள்ளிக்கூடங்களும், கற்பகவிநாயக கலாசாலையாதியனவும், பின்னர்த் தோன்றிய பள்ளிக்கூடங்களும், கலைமகள் கழகம், காந்தி வாசகசாலை, உண்மைநெறி விளக்கசபை முதலியவைகளும் இருந்து இளஞ்சிறார்களுக்குக் கல்வி புகட்டி அறிவை வளர்த்துவரும் நிலைமையில் உண்மைக்கு மாறானவைகளை வற்வேற்புத் தாளில் நுழைத்து உயர்தர அதிகாரி அவர்கள் முன்பாகக் கூறியது தவறு என்பதை ஓர்ந்து, ஒரு குறைவுமின்றிப்பெரு நிறைவாகவுள்ள கோநகரைக் குறை கூறாதிருப்பார்களாக.

ஒரு மாணவன்.

# தீண்டாமை.

(அடிகளுக்கு ஓர் விண்ணப்பம்.)

மகா மாண்புற்ற மகாத்மா காந்தியடிகளே!

அடியேன் தங்கள் திருமுன் கூறும் இச்சிறு விண்ணப்பத்திற்குச் சற்றே செவிசாய்த்தருள்வீர்களாக.

1. எவர்கள் எப்படித் தங்களைக் கூறினபோதிலும், தாங்கள் உலகத்திற்கு உதவியிருக்கும் அரும் பெரும் விஷயங்களிலிருந்தும், பிரசித்தி பெற்ற "தாதா" வென்பதில் எனக்கு ஆக்ஷேபனையில்லை. அறியாதவர் அவதூறு சொல்வது, தேவகுமாரனை இயேசு நாதரை அக்காலத்தவரிற் சிலர் குறை கூறிய முறையேயாகும்.

2. பண்டிதர் முதல் பாமரர்வரை தங்களைப் போற்றும் மகிமைக்குக் காரணம், தங்களிடமிருக்கும் ஒருமையே. அம்மை அருளா லடைந்து அருமையாகவுள்ளது; அனுபவத்தில் மேன்மையானது; யுக்திக்குப் பான்மையானது; வாய்மையால் தூய்மையானது; நேர்மையால் செம்மையானது; ஆமையால் ஊமையானது; தனிமையால் இனிமையானது; ஆண்மைக்கு உரிமையானது; வன்மைக்குத்திண்மையானது; தன்மைக்குக் கடமையானது; இம்மை மறுமைக்கு நன்மையானது. பழமையான

டைமையாகும்; வறுமையைப் பாராமையும், வெறுமையை நோராமையும், சிறுமையைச்சேராமையும்,தொன்மையை அணிமையாகவுமுடைய பெருமைக்குரிமை யெம்மை யென்று நம்மைக்கேட்டால், அது "பொறுமையே" யென உம்மைக் காட்டுவேன்.

3. ஆனாலும், மும்மைக்கும் மூலமான இக்கருமையில், இருமையில்லை. ஒன்று தீண்டாமை; மற்றொன்று அடிமை. இவ்விரு வேண்டாமையும் புதுமையா? பழமையா? பழமையான நூல்முறைமையாதலாற்றான், தாங்களும் நூல்—நூல்—நூல் நூற்க என்று சுற்றிச் சுற்றி நூற்கிறீர்கள். என்ன நூற்றாலும் வழிநூலான நன்னூலாக இல்லாமல், முதல்நூலான தொல்காப்பியமாகவே யிருக்கிறது.

ஒன்றான தீண்டாமை,—இம்மையில் எப்படித் தீண்டுவது? ஒரு சமயம் தீண்டினாலும், எல்லாவற்றிற்கும் ஆதாரமான அடியிலுள்ள, மை,—அடி—மை, எப்படி அகற்றப்படும்? மேலாக இருந்தாலும் தள்ளலாம்; தள்ளாமையான அடிமை அகற்ற யாவராலாகும்? "என்று நீ, அன்று நான், உன்னடிமையல்லவோ" என்ற தாயுமானவர் திருவாக்குப் பொய்த்துப் போமோ?

4. பிரபவஹு முதல் அக்ஷய வரையில் ஏறுதலான 60 வருஷ ஆரோகண முறை கழிந்து அக்ஷய முதல் பிரபவஹுவரை இறங்குதலான அவரோகண முறையில் தாங்களிருந்தும், தங்கள் மகிமை மாத்திரம், இறங்காமல் ஏறிக்கொண்டே யிருப்பதின் காரணம், தாதாவான தங்களுடைய பொறுமையே யென்று ஊகிக்கிறேன். தாழ்மையான ஏழ்மையேன், அப்பெருமையான பொறுமையில், தா(த்)தா, கொஞ்சம் "தாதா" என்று ஏற்கிறேன். ஏற்பது இகழ்ச்சியானாலும் எங்கள் குலதர்மம்அதுவாகஇருக்கிறது.

இப்படிக்கு,
ஸர்வஜீவ சுகஸ்தாபன நோக்கத்தில்
அவாவுள்ள, அடிமை
பிரக்ஞானந்தன்.

குறிப்பு:— பாவக் கருத்தில் தோற்றும் சங்கை ஊகத்தகும். இக்கடித பாவமொழி பெயர்ப்பு மஹாத்மா எனப்படுவார் பார்க்க நேர்ந்தால் நலமாகும்.

---

உ

# இயற்கை வைத்தியத்தின் மேன்மை.

## சிவில் ஸர்ஜனின் பூரண ஆதரவு.

(புதுக்கோட்டை, இயற்கை வைத்தியர்
திரு, கி. லக்ஷ்மண சர்மா B. A., B. L., N. D. அவர்கள்.)

ராய்பகதூர் டாக்டர் எல். என். செளதுரி என்பார் லக்நௌ நகரில் பேசியதின் சுருக்கம்:—

[சென்ற ஏப்ரல் மாதம் லக்நௌ மகா நகரத்தில் நடந்த இயற்கை வைத்திய மகாநாட்டில், ஆங்கில வைத்தியப் பட்டம் பெற்று சிவில் ஸர்ஜன் உத்தியோகத்திலிருந்து, பின்பு அனுபவத்தெளிவினால் இயற்கை வழிக்குத் திரும்பி, அதன் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் மேற்படியார் தலைமை வகித்துப் பேசியதின் முக்கியமான அம்சங்கள் அடியில் தமிழில் தரப்படுகின்றன; அவை வாசகருக்குப் பயன்தருமென்று எதிர்பார்க்கப் படுகிறது.]

1917-ம் ஆண்டில் எனது பாரியை நோய்வாய்பட்டார்; எல்லாவிதமான உயர்தர மருந்துகளும் கொடுக்கப்பட்டன; மிகப் பிரபல டாக்டர்களும் பார்த்தனர்; பயன்படவில்லை; அவர் இறந்தார். உடனே எனக்குக் கண்கள் திறந்தன. எங்கள் வைத்திய முறையிலும், வைத்திய அறிவிலும் ஏதோ தவறு இருக்கிறதென்று உணர்ந்தேன். பிறகு இயற்கை வைத்தியத்தார் எழுதிய நூல்களைப் படித்தேன்.

இந்தியாவில் மிகப் பழமையான வைத்தியர் டாக்டர் ஜோஸயா ஓல்ட்பீல்ட் என்பவர். அவர் இயற்கை முறையில் திடநம்பிக்கையுள்ளவர்; அவ்வாறே இன்றும் இருந்து வருகிறார். அவரது நூல்களையும் படித்தேன். பிறகு இங்கிலாந்து, ஜர்மனி, ஆஸ்திரியா, ஸ்வித்ஸர்லந்து முதலிய நாடுகளிற் போய்க் கற்றேன்; அங்கு இயற்கை வைத்தியத்தில் அதிக ஊக்கம் செலுத்தி வருகிறார்கள்.

டாக்டர் ஓல்ட்பீல்ட் என்பவர் இந்தியாவுக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்வந்தார். அவர் உடம்பு நிலையைச் சோதித்த டாக்டர்கள் அவருக்கு ஆறுமாதத் தவணையில் சாவுநேருமென்று தீர்ப்புக் கூறினார்கள்; லீவின் பேரில் அவர் சுதேசம் சென்று, நாட்டுநிலமான கெண்ட் பகுதியில் ஒரு ஊரில், அவ்வூர் வாசிகளைப்போல் வாழ்வு நடத்தினார்; அதாவது நகரங்களில் மலியும் உயர்போகங்களை விட்டிருந்தார். ஜீவாதாரமான உணவு—அதாவது ரொட்டி, வெண்ணெய், காய்கறிகள்—மட்டும்தான் உண்டார். இதனால் உடம்பு புத்துயிர் பெற்றதைக் கண்டு வியந்தார். அதன்பின் ஆறுமாதம், ஆறு ஆண்டுகள், இப்போதுவரை இருபத்தைந்து ஆண்டுகள் சென்று, தொண்ணூற்றிரண்டு வயதாய், இன்னும் சொஸ்தமாயும் வலுவுடனும் இருக்கிறார். இன்று இரண்டாண்டுகளுக்கு முன் அவரைக் கண்டேன்.

அவர் அந்த இலக்கில், அதே காட்டு நிலத்தில் ஒரு சிகிச்சை நிலையம் ஏற்படுத்தியிருக்கிறார்; அதற்கு வெளியிலிருந்து நோயாளிகள் வருகிறார்கள். பெரிய வருமானமுள்ள மருத்துவர் இதில் அஸூயை கொண்டனர்; தம் பிழைப்பு இதனால் பாதிக்கப்படும் என்று பயந்தார்கள்; அவர்களுக்கு சலுகை காட்டும் சர்க்கார் அவர்கள் பக்கமாயிருந்து, இந்த இயக்கத்துக்கு உதவி மறுத்தனர்; இருந்தாலும் இயற்கை முறை வெற்றிபெற்றது. இதைக்கண்டு, "வைத்தியக் கல்வியில்லாத ஸாமானிய மனிதர்,—தம்மைத் தாமே அனுபவ பலத்தால் வைத்தியராக்கிக் கொண்டவர்—இவ்வாறு வெற்றி பெற்றால், அக்கல்வியில் உயர்வுபெற்ற மெடிகல் அஸோஸியேஷன் அங்கத்தினர் ஏன் அம்முறைகளைக் கையாண்டு பயன் பெறக் கூடாது" என்று எண்ணி அவர்கள் தம் ஆதரவில் உபவாஸ வைத்தியசாலை ஸ்தாபித்தார்கள். நானும் அச்சங்கத்தில் சேர்ந்ததால் அவர்கள் செய்திருப்பது சரியான மார்க்கத்தில் செல்வதாகுமென்று அவர்களுக்குத் தெளிவாய் எடுத்துச் சொன்னேன்.

இங்கிலாந்தில் ஏழைகளுக்கென்று மிக மலிவான மருத்துவ உதவிக்கான ஏற்பாடு இருக்கிறது; ஆனாலும் மனிதர் இயற்கை வைத்தியரிடமே செல்லுகின்றனர்; சர்க்கார் உதவியில்லாததால் அவர்களுக்கு அதனால் செலவு அதிகமானாலும் அது குணமுள்ளதென்று அதை நாடுகிறார்கள்.

இயற்கைக்கு நாம் செய்யவேண்டிய உதவி ஒன்றுமில்லை; அதை அறிந்து கொள்வதே போதும். இதை நம் பெண்மக்கள் கற்றுக்கொண்டால் போதும்; ஆண்மக்களிடம் நான் அதிகம் எதிர்பார்க்கவில்லை.

ஜர்மனியின் ஆறரைக்கோடி ஜனங்களில் சுமார் இரண்டே கால் கோடியினர் இவ்வழியில் நிற்கின்றனர்.

செயற்கை வைத்தியத்தில் கலவரம் ஏற்பட்டிருக்கிறது. சஸ்திர வைத்திய நிபுணரில் முதன்மையான ஸர் அர்புத்நட்லேன் என்பார் மெடிகல் அஸோஸியேஷனிலிருந்து விலகிவிட்டார். அவர் இயற்கைக்குத் திரும்பி தனிக் கூட்டம் ஏற்படுத்தியிருக்கிறார். அதனால் செயற்கை வைத்தியத்துக்குக் காலம் குறுகிவிட்டதென்னலாம்.

மருந்துகளெல்லாம் தீமையே. பழய மருந்துகளையே புதியபெயர்கள் வைத்து விளம்பரம் செய்கிறார்கள்; பெயரை மாற்றி ஏமாற்றவே விளம்பரத்துக்காக கோடி கோடி பணச்செலவு; லாபம் அதற்குமேல்; கெடுதி செய்யுமென்று தெரிந்தே பின்னும் பின்னும் டாக்டர்கள் அவற்றையே தருகிறார்கள்.

மாமிச ரஸாயனங்கள் கெடுதி என்று தெரியும்; கொல்லும்போது பிராணி பயந்து நடுங்கி, அதன் உடம்பு நஞ்சாகிறது; அந்நஞ்சுகளே இந்த ரஸாயனங்கள்——சூப்புகள்—என்றால், அவை உயிருக்கு நலனா?



உணவைத் திருத்தி அமைத்துக்கொண்டால் நாம் நோய்கள் தீர்ந்து சுகமாயிருக்கலாம். இவ்வழியில் யாரும் பிறனிடம் கீழ்ப்படவேண்டாம்; அவனவன் தன் உடம்பைத் தானே சீராய் வைத்துக்கொள்ளக்கூடும்; தனக்குத் தானே டாக்டராயிருக்கலாம்.

ஆனால் இந்தியா, இங்கிலாந்துகளில்உள்ள வைத்தியக் கல்வி நிலையங்களில் உணவைப் பற்றிய கல்வியே கிடையாது; உணவைப் பற்றி இளம் சிசுவுக்குக் கூட அதிகம் தெரியும்; பெரியோருக்கு அவ்வளவு தெரியாது. குறைத்துண்ணுதல் அபாயமற்றது; அதனால் உயிரின் பலம் மீதப்படும்; அதனால் உடம்பு கெட்டிப்படும், சுத்தமாயிருக்கும்; பலம் குறைந்தால் நோயும் வரும்; இவ்வகையாய்த்தான் சிசுக்களும் பாலரும் ஏராளமாக மரிக்க நேருகிறது.

குற்றமெல்லாம் 'ஜெர்ம்' என்னும் அணுப்புழுவின் மேல் சுமத்தப்படுகிறது. இப்புழுக்களைக் கண்டு பிடிப்பதற்காக கோடிப்பணம் செலவு. இவற்றின் மேல் பழிசுமத்துவது மூடத்தனம். இவை உள்ளே புகுந்து தமக்கு உரிய ஆகாரமான அசுத்தச் சரக்குகள் இருக்குமானால், அவற்றை உண்ணும்; அவ்வித உணவு கிடைக்காவிடில் சாகும்; இரத்தத்திலுள்ள மலங்களே அவற்றின் உணவு. எப்படி ஈக்கள் அசுத்தத்தையே நாடுமோ, அப்படி இச்சிறு புழுக்களும். இவற்றினின்றும் உடம்பைக் காக்கப் போதிய பாதுகாப்புகள் இயற்கையில் உண்டு. 'டான்ஸில்' முதலான கோளங்கள் இப்பாதுகாப்பு வேலைக்கு உரியன. இவற்றை வெட்டியெடுத்துவிடுவது மிகத் தவறு.

இயற்கைமுறை மிக எளிது; ஆனால் அது அதிகப்பயன் தருவதாகும்.

ஒரு ஊரில் டெபுடி கமிஷனர் மகனுக்குக் காய்ச்சல்; முதலில் மலேரியா என்றுமருந்துகொடுத்தார்கள்; பின்பு டைபாய்டுஎன்று தீர்மானித்து, அதற்காக வைத்தியம் ஆரம்பித்தது; முதலில் ஒரு ஸிவில் ஸர்ஜன் வைத்தியம் செய்து வந்தார். பிறகு தாய் என்னிடம் அவனை ஒப்புவித்தான்; நான் வைத்தியம் துவக்கின நாலாம் நாள் வியர்வை அதிகமாய் வெளிப்பட்டு, குணம் ஏற்பட்டது. ஸர்ஜன் கொடுத்த ஆஸ்பிரின் முதலியவை செய்ய முடியாததை இயற்கை செய்து முடித்தது. மருந்து கிடையாது; தினம் ஒரு தடவைவீதம் மூன்று நாள் எனிமா மாத்திரம்தான் செய்தது. இப்படி மலேரியா நியூமோனியா, டைபாய்டு, இவற்றிலும் அவ்வளவுதான் வேண்டும்; எல்லா உடம்பும் தன்னைத்தானே சுத்தம் செய்து, நோய் தணித்துக்கொள்ளும் சக்தியுடன் அமைந்திருக்கின்றது. எந்த உடம்பானாலும், தொண்ணூற்றொன்பதரை டிக்கிரி உஷ்ணத்தோடிருக்கிறதல்லவா? இது உயிரின் வல்லமைக்கு அறிகுறி.

பருத்தவன், மெலிந்தவன், இருவருக்கும் பொதுவாக ஒரே சிகிச்சைதான்; அதனால் பருத்தவன் கனம் குறைதலும் மெலிந்தவன் கனம் பெறுவதும் ஆம். உடம்பின் கசடுகளைவெளியேற்றுவதற்கு முயலும் இயற்கையை எதிர்க்காமலிருப்பதேபோதும்; இயற்கை தனக்கு வேண்டாததை விலக்கி, வேண்டியதை எடுத்துக்கொள்ளும்.

பசித்துச் சாப்பிடு; பசியில்லாமல் உண்ணாதே. பூர்ண சத்துள்ள உணவுகளையே உண். ஸத்தில்லாத உணவுகளால் இரத்தத்தில் புளிப்புத் திரவம் ஏற்படுகிறது. புளிப்புக்கு மாறான உணவுகளால் அதைத் தடுக்கவும் மாற்றவும் வேண்டும்; இவை நான்கு பங்கும், புளிப்புத் தரும் உணவு ஒரு பங்குமாக இருக்கவேண்டும்.

காப்பி, டீ, வெள்ளைச் சர்க்கரை, மைதாமா, இவை இரத்தத்தைப் புளிப்பாக்கும் உணவுகள்; பழுப்பு நிறமுள்ள கோதுமை †முழுமா, காய் கறிகள், இவை புளிப்பை மாற்றும் உணவு. தேங்காய், பால் இவையும் நன்மை.

சமையலும் கவனிக்கவேண்டியதாகும்; ஸத்தை வடித்து விடாமல் சமைக்கவேண்டும்.

வைட்டமின் என்னும் ஸத்து மிக முக்கியம். ஆனால் அது இயற்கையாய் அமைந்திருக்கும் உணவே வேண்டும்; விளம்பரம் செய்யப்படுவதை வாங்கி ஏமாறக்கூடாது. மேற்சொன்ன உணவுகளில் போதிய வைட்டமின்கள் உண்டு; அவை பாழாகாதபடி சமையல் முறையைச் சீர்படுத்த வேண்டும்.

தவிடுபோன கோதுமையும், அரிசியும் மிகக்கேடுசெய்யும். ஆகையால் கோதுமை மாவைச் சலிக்கக் கூடாது. அரிசியைத் தீட்டி வெளுக்கக் கூடாது; (கழிநீருடன், கஞ்சிவடிக்காமல் சமைக்க வேண்டும்.)

[இப்படிக்குச் செயற்கை வைத்திய நிபுணரான ஜாம்பவான் ஒருவர் இயற்கையின் மகிமையை வர்ணித்திருக்கிறார். அவர் பணத்தாசையற்றவர். ஆகையால் இவ்வாறு செய்தார். மற்ற செயற்கை வைத்தியருக்குச் சொந்த அக்கரை குறுக்கிடுகிறது. அவருக்கு உண்மையைக் காணும் மனத்தெளிவு இருந்தாலும் அதைச் சொல்ல மனம் வராது. செயற்கை வைத்தியக் கல்வியும் அனுபவமும் இல்லாத நாங்கள் சொல்வது அவநம்பிக்கைக்கு இடமாகிறதென்று, 'வஸிஷ்டர் வாக்கினால் பிரம்மரிஷி' என்ற வசனத்தின்படி, வைத்தியப் புலமையில்தேர்ந்த இவர் உரையை மொழி பெயர்த்துத் தரப்பட்டிருக்கிறது.]

---

† முழுமா என்றால், கோதுமையை மாவாக்கிய பின் அதைச் சல்லடையினால் சலித்துத் தவிட்டைப் பிரித்து எடுக்காமல் இருக்கிற மா என்று பொருள்.



# மதிப்புரை மஞ்சரி.

ஐயா அவர்களின் சரித்திரம்:— காரைக்குடி அறுபத்துமூவர் திருமடத்தில் பெருமிதத்துடன்பிறங்கிய. சைவசித்தாந்தச்செல்வர், சொக்கலிங்க ஐயா அவர்கள் சரிதத்தைப் புனைந்துரையன்றி உள்ளபடியே சுருக்கி விளக்கி, அவர்களின் முதன்மாணாக்கராகிய காரைக்குடி திருவாளர், ராம. உ. இராமசாமிச் செட்டியாரவர்கள் வசனநடையாக எழுதி சிதம்பரம் மெய்கண்ட சித்தாந்த வித்தியா சாலைத் தருமபரிபாலகர்களால் அச்சியற்றி வெளியிடப் பெற்றது. பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சார்ந்த தனவணிகமரபில் வந்துதித்து ஆறுமுகநாவலர், வன்றொண்டச் செட்டியார், மெய்யப்பசுவாமிகள் ஆகிய உத்தமப் பெரியார்களை முறையே ஆசிரியர்களாகக்கொண்டு சைவ நூல் வல்லராய்ச் சைவ சமயமே சமயம் என்று கைதூக்கி மெய்ந்நுலுக்கி மேலோங்கிப் பிரசங்கித்துச் சைவநெறி தழைக்கச் செய்த சைவப்பழமாகிய ஐயா அவர்களின் சிவவேடப் பொலிவுடன் கூடிய திருவுருவச் சித்திரம் திகழ்கின்றது. தக்கார் பலரின் சிறப்புப்பாயிரங்களைப்பெற்றுளது. உற்பத்திமுதல் நிரதிசயானந்தப்பேறுவரை பன்னிரு அதிகாரங்களை யுடையது. காப்பு, நாட்டுவளம், நகர்வளர், சிவாஷ்டோத்திரம்போன்று சிவமணங்கமழ ஐயாஅவர்கள் இயற்றிய 108 நூல்களின் அட்டவணை ஆகியவைகளுடனும் ஐயா அவர்களைப் பாராட்டிய அனுபந்தத் தொகுதியுடனும், உள்ள இந்நூல் திக்கானகாகிதம் கிரௌன் 1-க்கு 16 நூற்றிருபது பக்கங்கொண்டது. இது ஐயா அவர்களின் சைவத் தொண்டையும் குருபக்தியையும் போற்றும் ஒவ்வொரு மெய்யன்பர்களுக்கும், இலவசமாக வழங்கப்பெறுவது. இந்நூலாசிரியர் அன்பு கூர்ந்து எமக்கு ஒரு பிரதி உதவினர். முற்றும் படித்தேம். ஐயா அவர்களின் சைவப் பற்றினையும் ஆக்கியோரின் குருபக்தியையும் பண்டேபோல என்றும் போற்றுவோம்.

மான் விடுதூது:—இந்நூல் மிதிலைப்பட்டிக்குழந்தைக்கவிராயர் இயற்றியது. சென்னை, மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி உயர்திரு, டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் குறிப்புரையுடன் பதிப்பித்து வெளியிட்டது. ராயல் கிரௌன் 1-க்கு 16 முகவுரை, குழந்தைக்கவிராயர், நூலாராய்ச்சி, தாண்டவராயபிள்ளை, என்னும் விஷயங்களுடன் மான்விடு தூது மூலமும் குறிப்புரையும் ஐம்பதுபக்கங்கொண்டது. சிவகெங்கைசமஸ்தானத்தலைவராயிருந்த ராசபுலி வடுகநாதத்துரையின் மந்திரியாயிருந்து திருப்புத்தூர், கொடுங்குன்றம், குன்றக்குடி முதலாம் திருத்தலங்களினும் பல வேறு இடங்களிலும் பல திருப்பணிகளும் அறச் செயல்களும் ஆற்றி புலவர் பாடும் புகழுடையோராய் நாவலர்தாரு கன்னவுதாரவுபகாரியாய் விளங்கிய தாண்டவராய பிள்ளையவர்களைப் பாராட்டிக் கூறியது. சொன்னயம், பொருணயம் நிறைந்த இதன்விலை அணா 6.

## ஐயரவர்கள் எழுதிய வசன நூல்கள்.

சென்னை திருவல்லிக்கேணி, திருவேட்டீசுவரன்பேட்டை, பிள்ளையார் கோயில் தெரு, தியாகராஜ விலாசம் மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதிப்பதித்து வெளியிட்டு அன்புடன் உதவிய வசன நூல்களுள் திருவாவடுதுறை யாதீனத்து மகா வித்துவான் திரிசிரபுரம் "ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்" "நான் கண்டதும் கேட்டதும்" என்பவைகளைப்பற்றி முன்னமே நம்சிவநேசனில் மதிப்புரை வெளியிட்டிருக்கின்றேம். "நான் கண்டதும் கேட்டதும்" என்னும் வசன நூலில் காணும் வரலாறுகளில் முதலாவதாயுள்ள 'தமிழ் தந்த வளம்' என்னும் வரலாற்றை அனுவதித்து இச்சிவநேசனில் 40-ம் பக்கம் தொடங்கிவெளியிட்டிருக்கிறோம்.

புதியதும் பழையதும்:— என்னும் ஒரு நூல் வெளியிட்டுள்ளார்கள். அதில், இருபது வரலாறுகள் இனிது விளக்கப்பெற்றுள்ளன. அவைகளுள் 6-வது 'கல்யாணப் படித்துறை' 18-வது 'பிறை முழுமதியானது' என்னும் இரு வரலாறுகளை மாதிரிக்காக அனுவதித்து இச்சிவநேசனில் 45-ஆம் பக்கம்தொடங்கி வெளியிட்டுள்ளோம். இவ்வாறே ஏனைய வரலாறுகளும் அருமையும் இனிமையும் வாய்ந்த பல சிறப்புகளை விளக்கி மிளிர்கின்றன. இக்காலத்தில் கட்டுக்கதையாக, பயனற்றதாக, படிப்போர்க்குத் தீமை பயப்பித்துப் படுகுழிக்கு வழிகாட்டுவதாகவுள்ள நாவல்களைப் படித்துக் காலத்தை வீணிற் போக்காமல் உள்ளது உள்ளபடி நடந்த வரலாறுகளைப் பலரும் படித்துப்பயனுறும் வண்ணம் பளபளப்பும் உறுதியுமுள்ள நல்ல காகிதத்தில் பெரிய எழுத்துகளாற் பதிப்பித்துள்ளார்கள். ஒரு சிறிதேனும் வெற்றுரை யென்பதின்றி, அறிவுரைகளும், அறவுரைகளும் மலிந்து காணப்பெறுகின்றன. ஆண் பெண் இருபாலாரிலும்பண்டிதர், பாமரர், இளையோர், முதியோர்யாவரும் படித்து அறிவைத்திடப்படுத்திக்கொள்ளவும், நல்லின்பந் துய்க்கவும் ஹேதுவானது. முகவுரை முதலியவற்றுடன் கிரௌன் 1-க்கு 16, நூற்றறுபதுபக்கம்கொண்டது. விலை அணா 9. இதன் முகப்பில்வையக மதிக்கும்நமது ஐயரவர்களின் திருவுருவச் சித்திரம் திகழ்கின்றது.

கனம் கிருஷ்ணையர்:— இவர் நமது ஐயரவர்களின் அருமைத் தந்தையாரைப்பெற்றதாயாரின் அம்மானவர் என்பதுமுகவுரையால் விளக்கமாகிறது. சங்கீதசாஹித்தியங்களில்தேர்ந்த இவரதுசரித்திரமும், இவர் இயற்றிய கீர்த்தனங்களுள் பலவும், கீர்த்தன உருப்படிகளின் அகராதியும்சேர்த்து உயர்திரு, தியாகையரவர்கள் திருவுருவமும், உடையார்பாளையம் கோயிலும், காண்டீப தீர்த்தமும், நமது ஐயரவர்களைப் பெற்ற பெரும் பெற்றியினராகிய உத்தமதானபுரம் உயர்திரு, வேங்கடசுப்பையரவர்கள் திருவுருவமும் நிழலோவியத்துடன் மிளிர நல்ல காகிதத்தில் நன்றாகப் பதித்து கிரௌன் 1-க்கு



16 நூற்றுநாற்பதுபக்கங்களுடன் ஐயரவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இச் சரிதத்தால் இந்நூலுக்குரிய தலைவரும் நூலாசிரியரும் பரம்பரையாக சிவபூஜா துரந்தரர்கள் என்பதும், சங்கீதப் பயிற்சியில் தேர்ந்தவர்களென்பதும் நன்கு புலனாகின்றது. 'கனம்' என்பது சங்கீதத்தில் ஒருவகை. அத்தகு சிறந்த கனமார்க்கப் பயிற்சிபெற்ற காரணத்தால் கனம் கிருஷ்ணையர் என்னும் பேருடன் சமஸ்தானங்களிலும் சங்கீத வுலகத்திலும் புகழுடன் நிலவினர். இவரது சங்கீதத்திறமையானது "கீர்த்தனங்களைப் பாடும்பொழுது உடல் சிறிதேனும் அசையாமல் நாதம் மட்டும் பலவித விசித்திர அமைப்போடு எழுவதை அறிந்தவர் இவரை ஒரு தெய்வப் பிறப்பாகவே கருதிப் போற்றினர். பாடும்பொழுது தலையில் எலுமிச்சம்பழ மொன்றை வைத்துக்கொண்டு அது கீழே விழாதவண்ணம் சங்கதிகள் முதலியவற்றோடு இவர் பாடிக் காட்டினரென்றும், அக்காலத்தில் தலை அசையவில்லை யென்றும்" கூறப்பெறுவதுகொண்டு இவரது சங்கீதத் திறனைத் தெளியலாம். இச்சரிதையும் கீர்த்தனங்களும் யாவரும்போற்றும் இயைபுடையனவாகலின்பலரும் படித்து நற்பயன்றுய்த்துஇன்புறலாம். விலை அணா எட்டு.

கோபால கிருஷ்ண பாரதியார் சரித்திரம்:— திருநாளைப் போவார் கீர்த்தனை தமிழுலகமெங்கும் சிவபக்தி திளைக்கப் பரவி யாவரும் உருகிப்பாடும் பெருமையுடையது. பிறநாட்டவரும் பிறபாஷையினரும் பிறமதத்தினருமான காரைக்காலில் கலெக்டராகவிருந்த விஸேஸூரை என்னும் ஒரு கனவான் இக்கீர்த்தனங்களைப் பாரதியார் பாடக்கேட்டு உளம் பூரித்து இச்சிறந்த கீர்த்தனங்களை அச்சிடுவித்துப் புத்தக வடிவாக்கி உலகுக்கு உபகரித்தாரென்பது கொண்டு இக் கீர்த்தனங்களின் நயத்தையும் ஆக்கியோரின் பக்திப் பெருக்கையும் அளந்தறியலாம். பாரதியார் சரித்திரமும் பாரதியார் பாடிய தனிக் கீர்த்தனங்களும், திருநீலகண்ட நாயனார், இயற்பகை நாயனார், சரித்திரக் கீர்த்தனங்களும், முகவுரை, கீர்த்தனங்களின் முதற் குறிப்பகராதியும் பாரதியார் அவர்களுடன் நேசப்பான்மை யுற்றிருந்த ஸ்ரீ தியாகையரவர்கள், ஸ்ரீ வேங்கடசுப்பையரவர்கள், ஸ்ரீ மகாவைத்தி நாதய்யரவர்கள், ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள், பாரதியார் பாடிய திருநாளைப் போவாரின் கீர்த்தனங்களைக் கொண்டு சத்கதா காலக்ஷேபம் செய்த கிருஷ்ணையர், இன்னும் மணிவாசகப் பெருமான் சிவகாமிவல்லி இவர்கள் மத்தியில் ஸ்ரீமந் நடராஜப் பெருமான் திருவுருவம், சிதம்பர தரிசனம் ஆகியவைகளின் நிழலோவியங்களும் அழகுற வமைத்து நல்ல எழுத்துக்களால் பதிப்பித்து கிளேஸ் கிரௌன் 1-க்கு16, எட்டுப் பாரங் கொண்டு விளங்கும் இப்புத்தகம் ஒவ்வொருவரும் படித்தின்புறுதற்கேற்றது. திருநாளைப்போவார்சரிதத்தைக்கீர்த்தனங்களாகப் பாடினவரைத் தமிழுலகமும் சைவஉலகமும் அறிந்துகொள்ளும்

படி அவர்களின் சரிதத்தையும், இதற்குமுன் அச்சிலில்லாத தனிக்கீர்த்தனங்களையும், மற்றும் இருநாயன்மார்களைப்பற்றிய கீர்த்தனங்களையும் சேர்த்து புத்தக வடிவில் வரச்செய்த நமது ஐயரவர்கள் பாரதியாருடன் பழகி அவரிடம் சங்கீதம் பயின்றவர்கள் "பழன மருங்கணையும்" என்றதொடக்கத்தை மேற்கொண்டு பாடிய வரலாறு; பாரதியாரின் பக்தி பெருக்கு; "கனக சபாபதி தரிசனம் ஒருநாள் கண்டால் கலிதீரும்" என்ற கீர்த்தனத்தைப் பாரதியார் பாடக் கேட்டவுடனே மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சிறப்புப்பாயிரம் கொடுத்தது ஆதிய சீர்மைகளெல்லாம் தெவிட்டா தினிக்கும் இயல்புடன் திகழும் இதனைப்பெற்றுப் படித்துப்பத்திபரவசராய்ப்பரசிவத்தின் திருவருளுக்குப்பாத்திராகலாம். விலை அணா 8.

திருவள்ளுவரும் திருக்குறளும்:— இது சென்னை, பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் திருவள்ளுவர் திருநாட்கொண்டாட்டத்தில் நமதுஐயரவர்களின் தலைமைப்பேருரை. இதனை சிவநேசன் ஆண்டுகூபக்கம்278முதல்முற்றும்வெளியிட்டுளோம். திருவள்ளுவர் வரலாற்றினையும் திருக்குறளின் சிறப்பினையும் தெரிந்து கோடற்கு மிகவும் உபயோகமாயுள்ள இப்புத்தகத்தைப்படித்துத் தமிழ்மறையின் அருமையையும் ஆசிரியரின் பெருமையையும் அறியலாம். விலை அணா மூன்று.

உயர்திரு உ. வே. சாமிநாதையரவர்களின் சதாபிஷேக வரலாறு.

இதனைப் பலஅன்பர்கள் விருப்பின்படி அவர்களின் இளைய சகோதரராகியஉயர்திரு வே.சுந்தரய்யரவர்கள்வெளியிட்டுள்ளார்கள். இது முகவுரை, ஐயரவர்களின் எண்பதாம் ஆண்டுவிழாக் கொண்டாட்ட நிர்வாகசபையின் அறிக்கை, பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள், அபிமானிகள் எழுதிய கட்டுரைகள், கடிதப்பகுதிகள், சதாபிஷேகக்கொண்டாட்ட நிகழ்ச்சிகள், கொண்டாட்டத்தைப்பற்றிய அபிப்பிராயங்கள், கொண்டாட்டத்திற்குப் பின் அபிமானிகளின் கட்டுரைகள், வாழ்த்துப்பாடல்கள், வாழ்த்துரை, பத்திரிகைகள், கடிதம் கட்டுரை முதலியவை எழுதிய 'அன்பர்கள்' என்னும் தலைப்புகளுடன் முகப்பில் ஐயரவர்களின் திருவுருத்திகழ, கிரௌன் 1-க்கு 8, 200-பக்கம் கொண்ட புத்தகமாகும். இதனைப் படிப்பதனால் பல பேரறிஞர்களின் மனப்பான்மையையும், ஐயரவர்களின் பெருமிதங்களையும், அவர்கள்பால் அன்பு பூண்டுள்ளவர்களையும், அவர்களின் பெருந்தகைமையையும், ஐயரவர்கள் தமிழுக்காற்றிய அரிய சேவையையும்கண்டு நன்றிபாராட்டித்தமிழன்புபோற்றி இன்புறலாம். நமதுஐயரவர்கட்குஎண்பதாம்ஆண்டுநிறைவுவிழாவில் அளிக்கப்பெற்ற உபாசாரப் பத்திரங்கள் ஐயரவர்களின் திருவுருவ நிழலோவியங்களுடன் மேற்கண்ட புத்தக வடிவில் 32 பக்கங்களுடன் தனிப்புத்தகமாக வெளியிட்டுள்ளார்கள். இதில்ஐயரவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் குறிப்பாக விளக்கப்பெற்றிருக்கிறது.

# அப்பர் படக்காட்சிக்கு ஆதரவு

தஞ்சை, சைவ சித்தாந்த இளைஞர் சங்கத்தின் வாராந்தரக் கூட்டம் 1936 செப்டம்பர் 19உ சனிக்கிழமை மாலை 5-மணிக்கு மாயாண்டி சுவாமி மடாலயத்தில் தேவார ஆசிரியர் முத்துக்குமாரசாமி பிள்ளை தலைமையில் கூடியபோது தி. சு. சம்பந்தசாமி என்பவர் பிரரேபிக்க அமைச்சர் S. சபாபதி பிள்ளை அவர்கள் ஆமோதிக்கப் பின்வரும் தீர்மானம் ஒருமித்து நிறைவேறியது.

"பல ஊர்களில் கூடிய ஜைனர்கள் கூட்டத்தில் அப்பர் படக்காட்சி பிடிப்பதைக் கண்டித்தும் திருவிளையாடற்புராணம், பெரிய புராணம் முதலியவைகளில் கூறுவதுபோன்ற சரிதங்கள் நடந்ததாக யாதொரு சான்றும் கிடைக்கவில்லை யென்று பேசியிருக்கிறார்கள். இதைக் காண மிக வியப்பாகவே யிருக்கிறது. சேக்கிழார் அப்பருடைய தேவாரப் பதிகங்களைச் சான்றாக வைத்துக்கொண்டே பெரிய புராணம் இயற்றியுள்ளார். தீய அமணர்களால் அப்பர் அடைந்த தண்டனைகளுக்கு அவராலேயே பாடப்பெற்ற அகச்சான்றுகள் தேவாரத்தில் அனேகம் உள. உதாரணமாக கல்லில் பூட்டிக்கடலில் பாய்ச்சின ஓர் சம்பவத்தை திருநீலக்குடி திருக்குறுந்தொகையில்,

"கல்லினோ டெனைப் பூட்டியமண் கையர்
ஒல்லைநீர்புக நூக்க வென் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி யரன்
நல்லநாமம் நவிற்றி உய்ந்தே னன்றே"

என்பதாகப் பாடியிருக்கிறார். இதைவிடச் சான்று வேறு யாது வேண்டும்? அப்படியிருக்க பெரிய புராணத்தில் கூறியது போன்ற சரிதத்திற்குத்தக்க சான்று இல்லை யென்று எப்படிச் சொல்லமுடியும்? ஆண்மையிருந்தால் அப்பர் பாடிய பதிகங்கள் பொய் என்று சொல்ல முன்வரலாம். இம்மாதிரி கண்டனங்களை யெல்லாம் பொருட்படுத்தாமல் விட்டுவிடுவோமேயானால் தேவாரமே பொய் என்ற மனப் பான்மை இளைஞர்கள் உள்ளத்தில் தோன்றக்கூடும். ஆதலால் இந்நெருக்கடியான சமயத்தில் பேராசிரியர்களும், தமிழ்ப்புலவர்களும்முன்வந்து சந்தேகத்தை நிவர்த்திசெய்யவேண்டுமாய் இச்சங்கம் வேண்டிக்கொள்ளுகின்றது. இத்தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ச் சங்கங்கள், சைவத்தையேவளர்ப்பதாகத்தோன்றிய சைவ சபைகள் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், முதலிய மடங்கள், சென்னை சைவ சித்தாந்த மகா சமாசம் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம் முதலிய சைவ ஸ்தாபனங்களும் அவைகளைப் பரிபாலிக்கும் மாபெருந் தலைவர்களும் இக்கண்டனங்களைப் பார்த்து வாளாவிருப்பதைக் கண்டு இச்சங்கம் மிக மிக வருந்துகின்றது. இனிமேலாவது சைவஸ்தாபனங்களும் தலைவர்களும் உறங்காது விழித்து எழுந்து தமிழ்நாடெங்கும் ஆதரவுக் கூட்டங்கள் நடத்தவேண்டுமென இச்சங்கம் கேட்டுக்கொள்கின்றது. வேல்பிக்சர் கம்பெனியாரையும் தணிக்கைப் போர்டாரையும் படத்தில் எப்பாகத்தையும் விட்டுவிடாமல் வெளிப்படுத்த வேண்டும் என்பதாக இச்சங்கம் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றது."

சங்கத் தலைவன் தி. சு. சம்பந்தசாமி.

உ

## விநாயக சதுர்த்தியாதிய விரத நிர்ணயம்.

விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சட்டி ஆகியவைகளை சௌரமான ஆவணி, புரட்டாதி ஐப்பசிமாதங்களில் முறையே கொள்ளவேண்டுமென்பதாக திருநெல்வேலி சைவ சித்தாந்த சங்கத்தார் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார்கள். அதில் சௌரமானமே உயர்ந்தது; பெரியது. எனவும் சாந்திரமானம் மிகத் தாழ்ந்தது; சிறியது. எனவும் சாந்திரமானத்தைக் கொள்ளலாகாதெனவும் கூறப்பெற்றுள்ளன. இவ்விரதங்களை சைவப் பஞ்சாங்கம் ஒன்றே சூரியமானத்திற்குறித்துளது. கொத்தமங்கலம் பிரமஸ்ரீ வே. நாராயண கனபாடிகள் ஆதரிக்கின்றனர். திருச்செந்தூர், திருமறைக்காடு ஆகிய இரண்டு திருத்தல தேவாலயங்களில் அனுட்டித்தனர்.

இவ்விரதங்களை சாந்திமான புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகைமாதங்களில் தான் முறையே கொள்ளவேண்டுமென்றும் இவ்வாண்டு ஆவணித் திங்களில் பாத்திரபதசுத்தம் முன் அமாவாசையிலிருந்து அதிமாதமென ஒதுக்கவும், பின் அமாவாசையிலிருந்து கொள்ளவும் வேண்டுமென்றும், இக்காரணத்தால் இவ்வாண்டில் விநாயக சதுர்த்தி யாதிய மேற்குறித்த மூன்று விரதங்களை சௌரமான புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில்தான் முடிக்கவேண்டுமென்றும் சைவசமாஜ ஆராய்ச்சிக் கழகத்தினரான, திரு, ம. சுவாமிநாத சிவாசாரியார் 'விரதங்களும் உத்ஸவங்களும்' என்ற தலைப்புடன் "சித்தாந்தம்" மலர் கூ, இதழ் ஒன்பதிலும், யாழ்ப்பாணம் கொக்குவில் 'சோதிடபரிபாலினி' ஆசிரியர், பிரமஸ்ரீ இ. சி. இரகுநாதய்யரவர்கள் "விரதாதி நிர்ணய விபரீதம்" என ஒருபுத்தகமும், யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் தேவஸ்தானம் வேதசிவாகம சித்தாந்த சங்கத்தார் "சௌர சாந்திரமாசமும் விரதங்களும்" என ஒரு புத்தகமும், யாழ்ப்பாணம், திருநெல்வேலி, சிவஸ்ரீ அ. மார்க்கண்டேயக் குருக்கள், "சைவப் பஞ்சாங்கத்தின் விரத நிர்ணயத் தடுமாற்றம்" என ஒரு துண்டுத்தாளும் வெளியிட்டுள்ளார்கள். சைவப்பஞ்சாங்கம் ஒன்றுதவிர மற்றைப்பஞ்சாங்கங்களெல்லாம் சாந்திரமானப்படியே குறித்துள்ளன. மேலே காட்டிய இரண்டு திருத்தலங்களைத்தவிர ஏனைய திருத்தலங்களிலெல்லாம் சாந்திரமானப்படியே அனுட்டித்தனர்; அனுட்டிக்கின்றனர்.

இருபத்தேழு நட்சத்திரங்கட்கும் நாயகனாகவும் இறைவன் சடாபாரத்தில்பொருந்தினவனாகவும்உள்ள சந்திரனை நிந்திப்பது தவறு. சிவபெருமானின் அட்டமூர்த்தங்களுள் சேர்ந்த இரண்டு நேத்திரங்களாகவுள்ள சூரிய சந்திரர்களுக்கு ஏற்றத் தாழ்ச்சிகள் கற்பித்தல் மிகையாகும். இரவி என்று குறிப்பதே சூரியமானத்திற்குப் பொருத்தமாயிருக்க, மதி, மாதம், திங்கள் என்னும் வழக்குகள் சாந்திரமானப் பெயர்களா யமைந்திருத்தலினாலும், சிறிய சந்திரனுக்குத்தொடர்புடைய திதிகள் பெரியசூரியமானத்திற் பொருந்தாதாகையாலும், இம்மூன்று விரங்களுள் நவராத்திரிபூஜை பெயராலேயே இரவி மறைந்து மதிவந்த பிறகு செய்யப்பெறுவதாகையாலும் திதியைப் பற்றிய விரதாதிகளெல்லாம்சாந்திரமானப்படியே அனுட்டிக்கத்தக்கது. ஒரு சாரார் சூரியன் பெரியது, சந்திரன் சிறியதென்று வாதித்தால் மற்றொருசாரார் பெரிய சூரியனுக்கு ஆறுவருடமும், சிறிய சந்திரனுக்குப்பத்து வருடமும் திசாகாலம்வகுப்பானேன் எனஎதிர்ப்பர். சந்திரன்



பன்னிருராசிகளிலும் சஞ்சரித்து சூரியனுடன் கூடுவதிலிருந்தே சாந்திரமாதப் பிறப்பு நேருவதால் சௌரசாந்திரமான மிரண்டும் கொள்ளத் தகுவனவே.

சூரியன் சொந்த வீடாகிய சிம்மராசியில் வரும் காலமே கொல்லம் ஆண்டுப் பிறப்பு. அது ஆவணி மாதம். அந்த மாதத்தில் அமாவாசைக்குப்பின் வரும் வளர்பிறைச் சதுர்த்தியில் விநாயக மகா சதுர்த்தி விரதமும், புரட்டாதிமகாளய அமாவாசை கிரமித்துவரும் பிரதமைமுதல் ஒன்பது தினங்கள் நவராத்திரியும், ஐப்பசிமாத அமாவாசைக்குப்பின் பிரதமை முதல் ஆறு தினங்கள் கந்தர் சட்டியும் கொளற்பாலன என்பதே ஏற்றபெற்றிபாம். ஒரு மாதத்தில் இரண்டு சாந்திரமானம் நேரின் முன்னதை அதிமாதமென ஒதுக்கிப் பின்னதைக் கொள்ளவேண்டியதே.

## வையக மதிக்கும் ஐயர் வரவு.

தேச முன்னேற்றத்திற்குச் சிறந்தது பாஷையே. பாஷையில் நாட்டமின்றித் தேசத் தொண்டாற்றுவதாய்ப் பிதற்றுவோர் மக்கட் பதடிகளே. உண்மையாக சுதேச பாஷையில் பற்றுடையவர்கள், அதன் வளர்ச்சிக்காக உழைக்கின்றவர்கள் எவர்களோ அவர்களே, சுதேசத்தொண்டாற்றுபவரும், சுதேச மக்களால் போற்றப்பெறுபவருமாவார்கள். நந்தமிழ்நாட்டில் நாட்டுப் பயிராகிய தமிழ் வளம்பெற உழைத்தவர்கள்; உழைக்கின்றவர்களில் முதன்மையாக விளங்குகின்றவர்கள் சென்னை, மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்களே. நம் தமிழ் நாட்டுக்குச் சிறந்த தொண்டாற்றுவதனாலும், கல்வி, அறிவு, ஒழுக்கங்களாகிய எல்லாவகையானும் மூத்தோராய் விளங்குதலாலும் இவர்களே சுதேசத் தொண்டாற்றும் தலைவர். இவர்களே வையக மதிக்கும் ஐயராவர். இவர்கள் தமது நன் மாணவருள் ஒருவரும் நற்குண நற்செய்கைகள் நிரம்பியவருமான வித்துவான் பிரமஸ்ரீ கி. வா. ஜெகந்நாதையரவர்களுடன் சோமசர் மகாதேவ முருகப்ப செட்டியாரவர்களின் அறுபதாண்டு நிறைவையொட்டி நடைபெற்ற ஞானசம்பந்த நற்சபை விழாவுக்கு வந்து தலைமை வகித்தும், ஆத்தன்குடி சநாதன தர்ம சபையில் தலைமை வகித்தும், கொப்பனாபட்டி கலைமகள் கல்லூரியைக் கண்ணுற்றும், இவ்வூருக்கு ஆவணி ௩௦உ எழுந்தருளி பிள்ளையார் கூடமென்னும், செங்கமல நாயகி திருவிழாக் கூடத்தின் முன்பாகக் கூடிய பேரவைக்கண் தலைமை வகித்தும், நல்லுரைகள் வழங்கினார்கள்; வித்துவான் பிரமஸ்ரீ ஜெகநாதையரவர்களையும் பிறரையும் கொண்டு வழங்கச் செய்தார்கள். ஐயரவர்களின் நல்வரவை, நல்லுரைகளைப் பலரும் ஆர்வத்துடன் பாராட்டி மகிழ்ந்தனர். திருப்புத்தூர், குன்றக்குடி, கோயிலூர், தேவகோட்டை, புதுக்கோட்டை முதலான ஊர்களுக்கும் சென்று ஆங்காங்கு உபசரிக்கப் பெற்று ஐயரவர்கள் தமது நன்மாணவருடன் தமதிருக்கைசேர்ந்துள்ளார்கள். தேசாபிமானிகளாக, பாஷாபிமானிகளாகத் திகழவேண்டிய ஒவ்வொருவரும் அவர்கள் வெளியிட்டுள்ள நூல்களைக் குறைந்தவிலை கொடுத்தாவது வாங்கிப்படித்துத் தமிழ் நலம் பேணுவதே ஐயரவர்கட்குச் செய்யும் கைமாறும் கடமையுமாகும். ஐயரவர்களுக்கு இவ்வூர் நகரத்தார் உவகை மொழிகள் வழங்கினர்.

## விவசாயிகளின் கடன் நிவாரணை.

### இலங்கை அரசாங்க சபையில் இரண்டு மசோதாக்கள் பிரேரிக்கப்படும்.

இலங்கை விவசாயிகளின் கடன் நிவாரணை விஷயமாக வங்கிக் கமிஷன் செய்துள்ளசிபார்சுகளை அமுலுக்குக்கொண்டுவருவதற்காக அரசாங்க சபையில் கூடியசீக்கிரம் இரண்டு மசோதாக்கள் கொண்டுவரப்படுமென்று தெரிகிறது

கடன்களைத் தீர்ப்பதற்காகவும் இவ்விஷயத்திற்காக ஒரு கடன் நிதி திரட்டுவதற்காகவும் உரிய மசோதாவை விவசாய நிர்வாகக் கமிட்டி கொண்டுவரும். ஏற்கனவே டிக்கிரியான அடமானங்கள் சம்பந்தமாக வட்டியைக் குறைப்பதற்கும் மற்ற நிவாரணை வேலைகள் செய்வதற்குமுரிய மசோதாவைத் தொழில்வர்த்தக நிர்வாகக்கமிட்டி கொண்டுவரும்.

இந்த அவசியமான சட்டங்களை மேற்கூறிய இரு இலாகாக்களும் தற்போது தயாரித்துக்கொண்டிருக்கின்றன. கடன்களைத் தீர்ப்பதற்காக ஒரு கடன் நிதி திரட்ட வேண்டியது நேரிடுமாதலால் இந்தச் சட்டங்கள் இவ்வருடம் முடிவுக்குள்ளாக அரசாங்க சபையில் கொண்டுவரப்பட வேண்டுமென்று கருதப்படுகிறது.

விவசாயிகளின் கடன் நிவாரணைக்காக புதிய அரசாங்க உதவிபெற்ற வங்கியிலாவது அல்லது தற்போதிருக்கும் அடமான வங்கியிலாவது ஒரு பிரத்தியேக இலாகா நிறுவப்பட வேண்டுமென வங்கிக் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. அரசாங்க உதவிபெற்ற வங்கி நிறுவப்படக் காலதாமத மேற்படுமென்பதாலும், அரசாங்க அடமான வங்கிக்குப் பூரா வேலையிருப்பதாலும் காணிக் கமிஷனர் இலாகாவுக்கடியில் இதற்காக ஒரு பிரத்தியேக இலாகா நிறுவப்படுமென்று தெரிகிறது.

வங்கிக் கமிஷனால் சிபார்சு செய்யப்பட்ட ஜில்லா சமரஸ போர்டுகளின் தீர்மானங்கள் சட்டப்படி கட்டுப்படுத்தக் கூடியனவாகும். இத் தீர்மானங்களை ஒரு அடமான விஷயத்தில் சம்பந்தப்பட்ட இரு திறத்தாரும் ஒரு தடவை ஒத்துக்கொள்வார்களாயின் இனிமேல் அதிலிருந்து மீற முடியாதபடி இச்சட்டத்தில் அம்சங்கள் அமைக்கப்படும்.

அரசாங்கத்தால் கொடுக்கப்படும் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காக வங்கிக் கமிஷன் யாதாஸ்தில் கூறப்பட்டிருக்கும் 20 வருடத் தவணையும் நீடிக்கக் கூடியதாகும்.

இந்த உள்நாட்டுத்திட்டங்களைத்தயாரிப்பதற்காக கடன்நிவாரணைக்கு மற்ற நாடுகளில், அனுசரிக்கப்பட்டுவரும் திட்டங்களும் பரிசோதிக்கப்பட்டன. சில நாடுகளில் உதாரணமாக பிரான்ஸ் தேசத்தில், 40 வருடத் தவணையும் விடப்பட்டிருக்கிறதென்று காணப்பட்டது.

கடன்கொடுக்கப்படுவதற்காக பாத்தியதைத் தஸ்தாவேஜிகளைச்சீக்கிரமாகப் பரிசோதனை செய்வதற்கும் இந்தச் சட்டத்தில் அம்சங்கள் அமைக்கப்படும்.

தென்னந் தோப்புகளின்மீது தற்போதிருக்கும் அடமானங்கள் கடன்கள் சம்பந்தமான வட்டி விகிதம் 6½ அல்லது 7 வட்டியாகக் குறைக்கப்படவேண்டுமென வங்கிக் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. கோர்ட்டு டிக்கிரிகளில் சட்ட பூர்வமாக அனுமதிக்கப்பட்டு இலங்கையில் வாங்கப்படும் வட்டி விகிதம் 9 வட்டி 6 வட்டியாகக் குறைக்கப்பட வேண்டுமென தொழில் வர்த்தக நிர்வாகக் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

சிலோன் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம், கொழும்பு.



அவருக்குப் பெருமைதானே? அசுரர்கள் அந்தப் பலத்தைத் துர்விநியோகம் பண்ணாமலிருந்தால் விஷ்ணு அவற்றை யழித்திருக்கவே மாட்டா ரென்க. அசுரர்கள் செய்தது சிவபூஜை. அதைக் கெடுத்தவர் விஷ்ணு. அவர் அதைத் தம்பொருட்டே கெடுத்திடல் வேண்டும். சிவபிரான் பொருட்டென்றால் யாங்ஙனம்?

5. ஆ:— சிவனுக்கு விஷ்ணு கவசத்தைப் பிரமனும் ஹரி பஞ்சரத்தை ஹரியும் உபதேசித்தனர். அம்மந்திரவலியாலன்றோ அவன் திரிபுர சம்ஹாரஞ் செய்தான்?

ச:— திரிபுரசம்ஹாரத்தின் பொருட்டுச் சிவசந்நிதியில் அம்பாகி ஜடத்துவமெய்திய திருமாலின் மந்திரவலியாற் சிவபிரான் முப்புரமெரித்தா ரென்பது விருதாகோஷம்.

6. ஆ:— விஷ்ணுவாகிய அம்பை அவ்வளவு சாமானியமாகச் சொல்லக்கூடாது.

ச:— 'பிறகு, ருத்திரர் வில்லில் நாணேறிட்டு அவ்விதமான பாணத்தைப் பூட்டிப்பாசுபதாஸ்திரத்தோடுசேர்த்துத் திரிபுரத்தை அழிக்கவேண்டுமென்று எண்ணினார்' என்ற கர்ணம் 27வது அத்தியாயப்படி விஷ்ணுவாகிய பாணம் தன்னளவில் வலியற்றதாய்ப் பாசுபதாஸ்திரத்தின் ஸாந்நித்தியம் பெற்றே திரிபுரத்தை யெரித்தது பெறப்படும். ஆகவே அவ்விஷ்ணு பாணத்தின் சாமானியத்துவம் பாரத சம்மதமாதல் காண்க.

7. ஆ:—'விஷ்ணுராத்மா பகவத:—பவஸ்யா மிததேஜஸ: | தஸ்மாத் தநுர்ஜ்யாஸம்ஸ்பர்சம் ஸஸேஹே மஹேச்வர:— என்றதில், அமிதமான தேஜஸ்ஸோடு கூடின பவனென்னும் பேருடைய சிவனுக்கு விஷ்ணு வானவர் அந்தராத்மாவா யிருந்த காரணத்தினாலே......' என்பதாற் சிவனுக்கு விஷ்ணு அந்தராத்மா வென்பது தெரியவில்லையா? ஆகையாலன்றோ அவனுக்கு மேருவையும் வளைக்குந் திறம் வந்தது?

ச:—வடமொழியில் ஆத்மாவென்றிருப்பதை அந்தராத்மா வென்றும், பகவனென்றிருப்பதை விட்டும் அவ்வாக்கியத்தைப் பூர்வபட்சம் தப்பாக மொழி பெயர்த்துளது. 'ஷாட்குண்ய பரிபூர்ணரும் அளவற்ற தேஜஸையுடையவருமான ஈசுவரருக்கு மஹா விஷ்ணுவானவர் ஆத்மா...........' என்பது தமிழ் வசனவியாஸ பாரத மொழிபெயர்ப்பு. இப்பெயர்ப்பும் பாரபட்சமாகவே யிருக்கிறது. மூலத்தில் 'மஹத்' என்ற அடை 'ஈச்வர:' என்றபதத்தோடு சேர்ந்தது. 'விஷ்ணு' பதத்துக்கு அம்மூலத்தில் ஒரு விசேஷண பதமுங் கிடையாது. இப்பெயர்ப்பு அம் 'மஹத்' சப்தத்தை 'ஈச்

வர:' என்பதினின்றும் பிரித்து 'விஷ்ணு:' என்பதோடு சேர்த்த மஹா விஷ்ணு வென்றுரைக்கியது சிறிதும் நியாயமாகாது. ம. வீ. இராமாநுஜாசாரியாரின் அத்தமிழ் வசன வியாஸ பாரதத்தைப் பற்றி இன்னும் இரண்டொரு விஷயங்கள் இங்கு காட்டவேண்டுவது அவசியமாகும். அப்பெரியார் வியாஸ பாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்ட செயல் செயற்கரியதேயாகும். ஆயினும் அப்பெயர்ப்புச் சில விடங்களில் நமக்கு நம்பிக்கையைக் கெடுத்து மூலத்துக்கே திரும்பவும் நம்மைத் தாக்குகிறது. மேலே காட்டப்பட்டதொன்று. இன்னும் இரண்டோரிடங்களையே இங்குக் காட்டுதும். ஆதி பர்வத்தில் முதலத்தியாயத்தில் 'கிருஷ்ணனும் வேதமும் பிராமணர்களும் வேர்கள்' என்ற பெயர்ப்புக் காணப்படுகிறது. அதற்குமூலம் 'மூலம் க்ருஷ்ணோ ப்ரஹ்மச ப்ராஹ்மணச்ச' என்பது. 'ப்ரஹ்மம்' என்ற பதத்தைவேதமென்று பெயர்த்திருக்கிறது அது. அந்த'ப்ரஹ்மம்' அந்தவிடத்திற்சிவபிரானையேகுறிக்கிறதென்று ஸ்ரீமத் அப்பய தீக்ஷிதேந்திரர் முதலிய பெரியோர்களெல்லாம் விசாரணை முகத்தால் தீர்மானித்திருப்பது வித்வ ஜனங்களுக்கெல்லாந் தெரியும். பெயர்ப்பாசிரியர் அந்தப் பதத்தைச் சிவபிரானென்று பெயர்க்க விரும்பாவிட்டாலும் பிரமம் என்றேனும் தம் பெயர்ப்பிற் போட்டுவிட்டிருக்கலாம். ஆனல் அவர் அதனை வேதமெனப் பெயர்த்து வைத்ததை நாம் என்னென்போம்? விஷ்ணுவினுடைய சக்கரம் சிவபிரானாற் கொடுக்கப்பட்டதென்னும் விஷயம் ஸௌப்திக பர்வத்திலு முண்டென்பர் சைவர். அவ்விஷயம் அப்பர்வத்துத் தமிழ்ப் பெயர்ப்பின் 56வது பக்கத்தில் உடுக்குறியைப் பொட்டியிருக்கவேண்டும். ஆனல் அங்கு 'பயங்கரமான சக்கரம்' என்ற பெயர்ப்பே காணப்படுகிறது. அவ்விடத்தில் வேறுபாடுமுமுண்டென அடிக்குறிப்பாற் றெரிகிறது. அந்தப் பாடம் எதுவோ? இன்னதென்று சுருக்கியாவது அடியிற் காட்டியிருக்கலாம். பயனற்ற விஷயங்களையும் அப்படிக் காட்டும் வழக்கம் அவருக்கில்லாமலில்லை. நிற்கப், பூர்வபட்சம் எடுத்தாண்ட அக் கர்ணபர்வத்து 26வது அத்தியாய வசனம் சிவபிரானை அளவில்லாத தேஜஸையுடைய பகவானென்றும் மஹேச்வரனென்றும் பல விசேஷண பதங்களால் மதித்து விஷ்ணுவை ஒருவிசேஷணத்தாலும் மதியாமையால் அவ்விஷ்ணுவை எந்த அர்த்தத்தில் ஆத்மாவென்று சொல்லியிருக்குமென்றுராய்வது வாதக்களுக்கு ஆநந்தமாகவேயிருக்கும். 'கிருஷ்ணருடைய ஆத்மாவான அர்ஜுனன் மஹாத்மாவான அவரைக் குறித்து......' என்பது வனம் 49-வது பக்கத்திற் கண்டது. ஆத்மா வென்பதற்குச் சரீர மென்றும் உயிரென்றும் பொருளுண்டு இந்த வாக்கியத்தில் அர்ஜுனன் சரீரமும் கிருஷ்ணன் உயிரும் ஆவர். இத்தாற்பரியம் அம்மஹத் விசேஷணம் அவ்வாத்மப் பிரயோகங்களுக்கு முறையே இன்மையுண்மைகளாற்



பெறப்படும். அப்படியே "பாரதத்தில் 'அளவில் பேரொளிப் பகவனைமுருக்கிரற் கச்சுத னன்மா' வாமெனச் சிவனுக்கு விண்டு ஆன்மா வென்றது அபேத மென்னும் பொருள்பட உபசரித்துக் கூறியது. சரீர மென்னும் பொருட்டெனினும் அமையும். இவ்வாறன்றி, ஆண்டு ஆன்மா வென்றது அந்தரியாமி யென்னும் பொருட்டு எனக் கொள்ளின், 'அளவில் பேரொளிப் பகவன்' என்று உயர்த்திக் கூறியதோடு முரணுமாறறிக" என்ற ஸ்ரீ பாஷ்யத்தால் அவ்விடத்தில் விஷ்ணுவின் நிலை ஸ்பஷ்டமாயிற்று. இவரா சிவபிரானுக்கு மேருவை வளைக்க வலிகொடுக்க வல்லார்?

---

## 10. தக்ஷயாகே ஜயத்வாத்.

### தக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலின்.

பொருள்:— தக்ஷனுடைய யாகத்தை நாசஞ் செய்து அப்பால் அவனுக்கு நலஞ் செய்தலானும் என்பது.

பிரமாவின் பிள்ளை தக்ஷன். உமாதேவியார் அவனுக்கு மகளாராய் வளர்ந்தனர். அக்காலத்தில் அவருக்குப் பெயர் தாக்ஷாயணி. அவரைப் பரமசிவன் மணந்தார். ஒருநாள் தக்ஷன் கயிலைக்குச் சென்றான். மகளாரும் மருகரும் அவனை வரவேற்கவில்லை. அவனுக்குக் கோபம் வந்தது. அவன் தன்னிருப்பிடந் திரும்பினான். அவனால் யாகமொன்று நடத்தப்பட்டது. சர்வயாகங்களுக்கும் பதியாகிய சிவபிரான் அதில் ஒதுக்கப்பட்டனர். அவர் ஸ்தானத்தில் வீற்றிருந்தவர் விஷ்ணு. தேவர் முனிவர் பிராமணர் ஆகிய எல்லாரும் அந்த யாகத்துக்கு வந்திருந்தனர். தந்தை செய்த யாகத்தைப் பார்க்க வந்த தாக்ஷாயணியார் மட்டும் தக்ஷனால் அவமதிக்கப்பட்டுத் திரும்பினர். ததீசி மகரிஷி அங்கு வந்து அப்பெருஞ் சிவத்துரோக சபையில் சிவஸர்வோத்தமத்தை யெடுத்து வெகுவாகப் பிரசங்கித்துத் தக்ஷனையும் மற்றவரையும் எச்சரித்தார். ஒருவருங் கேட்கவில்லை. அவர் அவ்வெல்லாரையுஞ் சபித்து அவ்விடம் விட்டகன்றனர். சிவபிரானுக்கு அனைத்துந் தெரிந்தன. அவர் கோபித்தார். நெற்றிக்கண் திறந்தது. வீரபத்திரர் வெளிப்பட்டார். சிவபிரான் அவரைப் பார்த்து, 'மைந்த! நீ இக்கணமே தக்கனுடைய யாகசாலைக்குச் செல். எமக்குரிய ஹவிர்ப்பாகத்தை அவனிடங்கேள். தந்தால் வாங்கிவா. மறுத்தால் அந்த யாகத்தை நாசஞ் செய்' என்று கட்டளையிட்டார். அக்கட்டளை வீரபத்திரருக்குச் சிரோபூஷணமாயிற்று. அவர் உடனே அவன் யாகசாலையிற் பிரவேசித்தார். தக்ஷன் ஹவிர்ப்பாகங் கொடுக்க மறுத்தான். வீரபத்திர மூர்த்தி கரை கடந்த கோபத்தினரானர். அவர் சமீபத்

திலிருந்த விஷ்ணுவைக் கதையா லடித்துத் தள்ளினார். பிரமனைக் குட்டினார். வாணி முதலியோரை மூக்கு முதலியவற்றை யரிந்தார். சந்திரனைத் தேய்த்தார். சூரியனைப் பல்லையுடைத்துக் கண்ணைப் பிடுங்கினார். எமனைக் கழுத்தை யறுத்தார். இந்திரனை வெட்டினார். அக்கினியைக் கையையும் நாவையுந் துண்டித்தார். மானுருக் கொண்டோடிய யாகத்தை யெய்தார். தக்ஷனைத் தலையைத் திருகினார். பிறறைப் பிறசெய்தார். இன்னணம் அந்த யாகம் நாசமாக்கப்பட்டது. எஞ்சிய தேவர்கள் வீரபத்திரரை வணங்கிச் சிவஸ்துதி செய்தார்கள். வீரபத்திரர் ஓய்ந்தார். சிவபிரான் வெளிப்பட்டு இறந்தவர்களை யெல்லாம் எழுப்பி 'இனி எமக்குத் துரோகமான காரியங்களைச் செய்யாதீர். செய்பவரைச் சார்ந்தும் நில்லாதீர்' என்று எச்சரித்து அனுப்பிவிட்டு வீரபத்திருடன் அந்தர்த்தானமானார். இக்கதை கந்த புராணத்துள்ளது.

'பூஷாப்ராச்யததோருணத் தஸ்மாத்பூஷாப்ரபிஷ்டபா கோந்த கோஹிதம் தேவா அப்ருவந் | தேவாவை யஜ்ஞாத் ருத்ரமந்தராயந்த்ஸ யஜ்ஞமவித்யத்' (அவர்கள் பூஷன் உண்ணுமாறு அதனைக் கொடுத்தார்கள்; உருத்திரர் அவன் பற்களை உடைத்தார்; தேவர்கள் சிவபிரானை யஞ்ஞத்தினின்று விலக்கச்சிவபிரான் யஞ்ஞத்தை அழித்தார்) என்ற எசுர்வேத தைத்திரீய சங்கிதையும், 'தத்பகாய தக்ஷிணத: ஆஸீநாய பர்யாஜஹ்ரு: | தத்பகோவீக்ஷாஞ் சக்ரே தஸ்யாக்ஷிணீ நிர்ததாஹ' (வலப்பக்கத்தில் இருக்கும் பகனுக்கு அதனைக் கொடுத்தார்கள்; அவன் அதனைப் பார்த்தான்; அவர் அவன் கண்களைத் தகித்தார்) என்ற சதபதப் பிராஹ்மணமும், 'யோ தக்ஷயஜ்ஞே ஸுரஸங்காந் விஜித்ய விஷ்ணும் பபந்தோரக பாசேந வீர: தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' (எந்த வீரர் தக்ஷயாகத்திலே தேவகூட்டங்களைச்செயித்து விஷ்ணுவை நாகபாசத்தினாற் கட்டினாரோ, அந்த உருத்திரர்க்கு நமஸ்காரம் ஆகுக) என்ற சரபமும் அக்கதைக்கு மூலவசனங்கள்.

இனி அக்கதை பற்றிய ஆக்ஷேப சமாதானங்கள் வருமாறு:—

1. ஆ:— புராணங்கள் பதினெட்டு. அவற்றுள் மூன்று ஸாத்விகம். ஆறு ராஜஸம். ஒன்பது தாமஸம். விஷ்ணு புராணங்கள் முதல் வகை. சிவபுராணங்கள் கடைவகை. ஏனைத் தேவர் புராணங்கள் இடைவகை. ஸாத்விக புராணங்கள் தக்ஷயாகத்தில் விஷ்ணுவும் பிரமாவும் வரவில்லை யென்னும். ஆனால் அவ்விருவரும் வந்தனரென்றும் மற்றைத் தேவர்கள்போல் தண்டிக்கப்பட்டனரென்றும் தாமஸ புராணங்கள் சொல்லும். தாமஸ புராணங்கள் தள்ளத் தக்கன. கொள்ளத்தக்கவை ஸாத்விக புராணங்களே. ஆகலின் விஷ்ணு பிரமர்கள் தக்ஷயாகத்திலில்லை யென்பதே சரி.



ச:— சிவாகமங்களை மோகன நூலென்பது போன்ற பித்துரையே சிவபுராணங்களைத் தாமஸ நூலென்பதும், வேதம் சிவாகமங்களை வந்தித்ததுபோல் 'கிம் தத்வம் ப்ரஹ்மவாதிநாம் புராணேஷ்வஷ்டாதசஸு ஸ்ம்ருதிஷ்வஷ்டாத சஸ்வபி' (பிரமவாதிகள் பதினெட்டுப் புராணங்களிலும் பதினெட்டு ஸ்மிருதிகளிலும் அறிதற்குரிய தத்வம் என்ன?) என்ற ராமரஹஸ்யத்தாற் சிவபுராணங்களையும் வந்தித்துளது. புராணங்கள் பதினெட்டாவன:— சைவம், பாகவதம், பவிஷ்யம், மார்க்கண்டேயம், லிங்கம், ஸ்காந்தம், வராஹம், வாமனம், மத்ஸ்யம், கூர்மம், ப்ரம்மாண்டம், ப்ரஹ்மம், பத்மம், காருடம், நாரதீயம், வைஷ்ணவம், ஆக்நேயம், ப்ரம்மகைவர்த்தம் என்பன. அவற்றுள் முதற்பதினொன்றும் சிவபுராணங்கள். அடுத்த இரண்டும் பிரம புராணங்கள். அடுத்த மூன்றும் விஷ்ணு புராணங்கள். ஆக்நேயம் அக்னிபுராணம். ப்ரம்மகைவர்த்தம் ஸௌர்ய புராணம். சிவபுராணங்கள் ஸாத்விகம். பிரம புராணங்கள் ராஜஸம். விஷ்ணு புராணங்கள் தாமஸம். கடைசியிரண்டும் திரிகுண யுக்தம். பாகவதமாவது தேவீபாகவதம். சிலர் அதனை விலக்கிக் கிருஷ்ண பாகவதத்தைக் கோடலுமுண்டு. அப்போது சிவபுராணங்கள் பத்தாகி விஷ்ணு புராணங்கள் நான்காகும். அதனால் பூர்வபட்சத்தின் மூன்று ஆறு ஒன்பது என்ற கணக்குத் தப்பாய் முடியும். தேவீபாகவதத்தைக் கொண்டால் மூன்றென்பது மட்டும் பொருந்தும்.

வக்தா விஷயம் சுரோதா என்னும் மூன்றனுள் எதுபற்றிச் சிவபுராணங்கள் தாமஸமாகும்? வக்தா வியாஸர். விஷயம் சிவபிரான். சுரோதா ஸூதர். 'குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள் மிகைநாடி மிக்ககொளல்' என்றபடி மிகையான தாமஸபுராணங்களைச் சொன்ன வியாஸர் மிகையான தாமஸியாகி முழுத்தாமஸியென் றொதுக்கப்படுவர். படவே, 'கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங் கொள்ளா ரறிவுடை யார்' என்றபடி அவர் சொன்னசாத்விகராஜஸ புராணங்களும் மதிப்பழியும். ஆனாற் பூர்வபட்சத்துக்குத் தன் புராணங்களை அவ்வாறு விட்டிட இஷ்டமிராது. அப்படியானால் அது சிவபுராணங்களையே சாத்விகமெனக் கோடல்வேண்டும். அப்போதுதான் மிகையானசாத்விக புராணங்களைச் சொன்ன வியாஸர் மிகையான சாத்விகியாகி முழுச்சாத்விகியென் றங்கீகரிக்கப்படுவர். படவே, அவர் சொன்ன தாமஸ ராஜஸ புராணங்களுஞ் சோபான முறையிலோ பூர்வோத்தரமுறையிலோ மதிப்புறும். 'தமோமாயாத் மகோ ருத்ர: ஸாத்விக மாயாத் மகோ விஷ்ணு ராஜஸமாயாத் மகோ ப்ரஹ்மா' என்ற பாசுபத ப்ரஹ்மத்தால் உருத்திரர் தாமஸியும் விஷ்ணு சாத்விகியும் பிரமா ராஜஸியும், 'ஸாத்விகீ ருத்ரே பக்தே ப்ரஹ்மணி ராஜஸீ | தாமஸீ தைத்ய பக்ஷேஷு மாயாத்ரேதாஹ்யுதாஹ்ருதா |' என்ற க்ருஷ்ணத்தால் உருத்திரர்

சாத்விகியும் பிரமா ராஜஸியும் விஷ்ணு தாமஸியும் ஆவர். பூர்வ பட்சத்துக்கு இம்முறையை நிவிர்த்திசெய்து கொள்ளத் தெரியாது. ஆகலின் அது தனக்குப் பிரதிகூலம்போற்றோன்றுஞ் சுருதியைத் தள்ளி அநுகூலம் போற்றோன்றுஞ் சுருதியைக்கொண்டு கூத்தாடும். அச்செயல் பாஷண்டம். பொருள் கோள்முறையில் அம்முறையைத் தவிர்த்து எல்லாச் சுருதிகளையும் வந்திப்பதே வைதிகர். அந்த முறையில் ஸூதஸம்ஹிதை அந்த வாக்கியங்களுக்கு 'ரஜோகுணேநஸம் சந்தோ ப்ரஹ்மாதிஷ்டாய தம் குணம் ஸ்ரஷ்டாபவதி ஸர்வஸ்ய ஜகத: பண்டிதோத்தமா: குணேந தமஸாச் சந்தோ விஷ்ணுஸ் ஸத்வகுணம்புதா: அதிஷ்டாய பவேத் ஸர்வ ஜகத: பாலக: ப்ரபு: ததாஸத்வகுணச் சந்தோ ருத்ரோ விப்ராஸ்தமோ குணம் அதிஷ்டாய பவேத்தக்தாஜகதஸ்ஸத்யவாதிந:' (ராஜஸ குணத்தால் மூடப்பட்ட பிரமா அந்தக்குணத்தையே அதிஷ்டித்து ஸர்வஜகத்துக்குஞ் சிருஷ்டி கர்த்தாவானார். தாமஸ குணத்தால் மூடப்பட்ட விஷ்ணு சத்துவகுணத்தை அதிஷ்டித்து ஸர்வ ஜகத்துக்கும் ரக்ஷக கர்த்தாவானார். ஸத்வகுணத்தால் மூடப்பட்டவுருத்திரர் தாமஸ குணத்தை அதிஷ்டித்து ஸர்வஜகத்துக்கும் ஸம்ஹாரகர்த்தாவானார்) என்று வியாக்கியானஞ் செய்தது. அதனால் மும்மூர்த்திகளுள் ஒவ்வொருவருக்கும் முக்குணங்களுள் ஒன்று சகஜமும் மற்றொன்று அதிஷ்டானமுமா மென்பதும், பிரமாவுக்கு இரண்டும் ராஜஸம், விஷ்ணுவுக்குச் சகஜம் தாமஸம் அதிஷ்டானம் சத்வம், ருத்திரனுக்குச் சகஜம் ஸத்வம் அதிஷ்டானம் தாமஸ மென்பதும்பெறப்படும். படவே, அவ்விரண்டு சுருதிகளுள் முன்னது அதிஷ்டானம் பற்றியும் பின்னது சகஜம் பற்றியும் எழுந்தனவாகும். ஆகவே சகஜ தாமஸியாகிய விஷ்ணுவையே தாமஸவிஷய மெனல் வேண்டும். ஸஹஜஸாத்விகியாகிய வுருத்திரர் தாமஸ விஷயமாதல் யாண்டுமில்லை. முன் வியாஸருக்குச் சொன்ன விவகாரமே இங்கு ஸூதமஹரிஷிக்குமாம். ஆகவே ஸாத்விக வக்தாவாகிய வியாஸர் ஸாத்விக விஷயமாகிய பரசிவமாஹாத்மியத்தை ஸாத்விக சுரோதாவாகிய ஸூதருக்கு லோகக்ஷேமத்தை யுத்தேசித்துச் சிவபுராணங்களிற் பிரசங்கித்தாரென்றே துணிவர் நல்லோர். திரிகுண ரஹிதரான சதுர்த்த சிவபிரானின் அதியற்புத மகிமாவர்ணனங்களை ஸாத்விக ஸஹிதராகிய திரிதீய வுருத்திரர் மேலேற்றிச் சொல்வது புராணங்களின் சாம்பிரதாய மென்பதை யிங்கு மறவற்க.

விஷ்ணு பத்தவதார மெடுத்தார். ஒவ்வொரு அவதாரத்தின் முழுச் சரிதையையும் விஷ்ணு புராணங்களிற் காணமுடியாது. விஷ்ணுவின் உத்கர்ஷம் எதுவரையிலுண்டோ அதுவரையிலுள்ள சரிதந்தான் அப்புராணங்களிற் காணப்படும். அவரது அபகர்ஷங்களும் அடங்கிய சரிதை ஏனைத் தேவர் புராணங்களிற் சிறிதும் சிவ



புராணங்களில் முழுதுமாக விருக்கும். பின்வருவது ஓரெடுத்துக் காட்டு. விஷ்ணு நரசிங்கமாகி இரணியனைக் கொன்றார். விஷ்ணு புராணங்களில் அந்தக் கௌரவம் வரையிற்றானுண்டு. அந்நரசிங்கத்தைச் சிவபிரான் சரபமூர்த்தியாகி வதஞ்செய்தார். விஷ்ணுவின் இந்த அகௌரவத்தைச் சிவபுராணங்களிற்றான் பார்க்கலாம். ஆகவே நரசிங்காவதாரக் கதையை முழுவதுமறிதல் சிவபுராணங்களைப் படித்தன்றி முடியாதென்பதறிக. இதனால் விஷ்ணு புராணங்கள் பூர்வமும் சிவபுராணங்கள் உத்தரமுமாகின்றன. அற்ப பரிபாகிகட்கே விஷ்ணு புராணங்கள் பூர்ணம்போற் றோன்றும். பூர்வபட்சம் இதர புராணங்களிலுள்ள விஷ்ணுவபகர்ஷங்களைக் கண்டிக்க விஷ்ணு புராணங்களுக்கு ஆற்றலில்லாமையை யறிந்தே அவ்விதர புராணங்களுக்குச் சிலவுத்தரங்களைத் தனக்கநுகூலமாகக் கற்பித்து வைத்துக்கொண்டது. அக்கற்பனைகளே பாத்மோத்தரம் காந்தோத்தரம் கூர்மோத்தரம் முதலியனவாம். சிவபுராணங்களிற் காணப்படும் விஷ்ணுவபகர்ஷங்களை விஷ்ணு புராணங்களாற் கண்டிக்கவேண்டும். பூர்வ பட்சத்துக்கு அதுவே அடுக்கும். அங்ஙனமின்றி அது அப்போலி யுத்தரங்களாற் கண்டிக்கின் விஷ்ணு புராணங்களுக்கு அவ்வலி யெங்கேயென்ற சங்கை யெழும். அன்றியும் அவ்வுத்தரங்களெல்லாம் விஷ்ணுபரத்துவத்தையே சொல்வனவாக அவற்றுடங்குமியல்புடைய பூர்வங்களைக்கொண்டு அவ்விதர புராணங்களை ராஜஸ தாமஸங்களென்று நிந்திப்பது குற்றமென்பதும் பதினெட்டு புராணங்களுமே சாத்விகமென்று அங்கீகரிப்பதே பொருத்த மென்பதும் ஸ்திரமாகும். பூர்வபட்சத்துக்கு அப்போதும் சங்கடம். சைவர்களுக்கும் விஷ்ணூத்தரம் காருடோத்தரம் பாகவதோத்தரம் முதலிய எத்தனையோ வுத்தரங்களைப் பிறர் கண்டு கொள்ளாதபடி கற்பித்துக் கொள்ளச் சக்தியுண்டு. அவர்கள் புருஷோத்தமர்கள்; ஆரிய திராவிடாதி பாஷாந்தரங்களில் ஸச்சாஸ்திர ஸம்பத்தை அபரிமிதமாகவுடையவர்கள். ஆகலின் அவ்வஞ்சச் செயல் அவர்கட்கு வரஹேதுவில்லை. தம்மளவில் உத்தரஸ்தானத்தில் மிளிர்கின்ற பத்து அல்லது பதினொரு சிவபுராணங்களின் பலமே அவர்கள் செய்யும் திக்விஜயத்துக்குப் போதும்.

சாந்தோக்யாதிகளில் 'இதிஹாஸ புராணம் பஞ்சமம் வேதானாம்' என்று இதிகாசம் முன்னும் புராணம் பின்னும் வருவதால் புராணங்களிலும் இதிகாசமே ஏற்றமுடைத்தென்றும் அவ்விதிகாசம் பாரதமே யென்றுங் கூறித், தன் புராணங்களின் கௌரவத்தை வலியுறுக்க வலியற்று மெல்ல நழுவுதலும் பூர்வபட்சத்துக்குண்டு.

இப்படிப் பலவிதத்திலும் அலக்கண்படுவன விஷ்ணு புராணங்கள். தக்ஷயாகத்தில் அரிபிரமர் வந்திருந்ததை அப் பூர்வபாகஞ்

சொல்லாவிட்டால் உத்தரபாகமாகிய சிவபுராணங்கள் சொன்னதை அங்கீகாரமென்றல் நியாயமாகாது. பாரதமும் சாந்தி 290வது அத்தியாயத்தில் 'கங்காத் துவாரத்தில் மங்களகரமான இடத்தில் தக்ஷன் யாகம் செய்தான். அப்பொழுது......எல்லோரும்...... தக்ஷனென்கிற ஸ்ருஷ்டி கர்த்தனை ஸ்தோத்திரம் செய்தார்கள். உடனே, தேவர்கள்......இந்திரனுடன் வந்தார்கள். ஊஷ்மபர்களும்.........பிரம்மாவுடன் வந்தார்கள்' என்றதாற் பிரமா வந்ததும், "தக்ஷன், 'யாகத்தின் தலைவருக்காக ஸ்வர்ண பாத்திரத்தில் வைக்கப்பட்டதும் விதிப்படி மந்திரத்தினுல் பரிசுத்தமுள்ளதுமான இந்த ஹவிஸை, நிகரற்றவிஷ்ணுவினுடைய பாகமாகச்சேர்ப்பிக்கின்றேன்'......என்று சொன்னுன்" என்றதால் விஷ்ணு வந்ததும் வெட்ட வெளி. யாரும் யாகசாலைக்கு வராமற் பாகத்தை ஏற்க முடியாதென்பதை ஓர்ந்துணர்க. ஆகவே அவ்யாகசாலையில் அரி பிரமர் வந்திருந்தனரென்பதும் வீரபத்திரால் மற்றைத் தேவர்கள் போற் றண்டிக்கப்பட்டனரென்பதும் சத்தியமே. அச்சிவ புராணப் பிரஸ்தாபங்களை மேல் மூலவசனம் ஆதரிப்பதுங் காண்க.

2. ஆ:— சிவன் யாகபலனை நேரிற் பெறுமாற் போமாறு தக்ஷன் அவனைச் சபித்தான்.

ச:— 'ருத்ரருடைய பராக்கிரமத்தைக் கண்டு தேவர்களும் ரிஷிகளும் பயந்தனர். பிறகு, தேவசிரேஷ்டர்கள் சிவனைப் பிரார்த்தித்தனர்......மகேச்வரர் கோபம் நீங்கினுர். பிறகு, தேவர்கள் யாகத்தில் சிவனுக்குச் சிறந்த பாகத்தை ஏற்படுத்தினர். அரசே! பயத்தினுல் தேவர்கள் அவரைச் சரண மடைந்தனர்' என்றது அநுசாஸனம் 265வது அத்தியாயம். 'அந்த மகேச்வரர் ......... அம்புகளைத் தேவர்களை லக்ஷ்யம் வைத்து மறுபடியும் ஸந்தானம் செய்தார். அதைக் கண்டு எல்லாத் தேவதைகளும் மகேச்வரரை நமஸ்காரம் செய்து அவருக்கு ச்ரேஷ்டமான யஜ்ஞபாகத்தைக் கல்பித்தார்கள். அரசரே! தேவர்கள் பயத்தால் சரணமடைந்தார்கள்' என்றது துரோணம் 203-வது அத்தியாயம். 'தேவர்கள் வில்லை இழந்தவரான தேவசிரேஷ்டரை யஜ்ஞத்துடன் கூடச் சரண மடைந்தார்கள். பிரபுவும் அருள் புரிந்தார்...தேவர்கள் இவருக்கு எல்லா ஹவிஸுகளையும் பாகமாக ஏற்படுத்தினுர்கள்' என்றது ஸௌப்திகம் 18-வது அத்தியாயம். இவற்றுல் தேவர்கள் சிவபிரானை நமஸ்கரித்து அவருக்கு நடுங்கி ஹவிஸைத் தந்தார்களென்பதும், அதுவும் சிறந்த ஹவிஸென்பதும் சாந்தி 290வது அத்தியாயம் சிவபிரானை 'யாகத்தில் எல்லாருக்கும் முதலில் பூஜிக்கின்றவருமான பிரபு' என்றதால் அவர் ஹவிஸை முதலிற் பெற வுரியவரென்பதும் புலனுகின்றன. ஆகவே அவர் அதைநேரிற்பெறுமல் போவதற்கு நேர்ந்த தடையென்ன? நிற்க, "வீரபத்திருடைய வார்த்தையைக்

186955

# செய்தித்திரட்டு.

கோவிலூர்:— வேதாந்தமடாலயத்தில் ஆவணி ௨௭ௗ வாசிட்டபாடசமாப்தியும் உயர்திரு, மகாதேவஞானதேசிகரவர்கட்குப் பாதபூஜையும் செய்யப்பெற்றன.

**உயர்திரு, ஞானியார் சுவாமியவர்கள்:-** திரிசிரபுரச்சைவ சித்தாந்தசபையின் ஐம்பதாவதாண்டு நிறைவாகிய பொன் விழா ஆனிமீ ௭, ௮, ௧௨ௗகளில் திரிசிரபுரம் மலைக்கோவில் நூற்றுக்கால் மண்டபத்தில் நடைபெற்றதற்குத் தலைவராக எழுந்தருளிய திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயகர்த்தர், உயர்திரு, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமியவர்கள், திரிசிரபுரத்திலும் அதைச் சார்ந்துள்ள பலவூர்களிலும் நல்லன்பர்களின் அழைப்புக்கிணங்கிப் பலபிரசங்கங்கள் புரிந்து புரட்டாதி ௬ௗ புறப்பட்டு திருப்பராய்த்துறை யாதிய திருத்தலங்களைத் தரிசித்து ௧௮ௗ பழநியம்பதி சேர்ந்து, ௧௧ௗ கார்த்திகை நான்முதல் ஆண்டவரைத் தரிசித்து, ௨௪ௗ அபிடேகாராதனைகள்செய்து நல்லன்பர் பலருக்கும் பழநியாண்டவரின் அருள்வடிவத் திருநீறும், ஆசியும் வழங்கியுள்ளார்கள். இம்முறை திருத்தலயாத்திரையில் நூற்றுக்கணக்கான பிரசங்கங்கள் புரிந்துள்ளார்கள். சைவ மெய்யன்பர்களும், வைணவ அடியார்களும் அரிய பெரிய பொருள்களை யறிந்து உளம் பூரித்துள்ளார்கள்.

**கழக விழாக்கள்:—** சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் புரட்டாதி ௬ௗ தமிழ்க்கலைச்சொல்லாக்க மகாநாடு சென்னைமாகாணத்தமிழ்ச்சங்கத்தாரால் கூட்டப்பெற்றது. உயர்திரு, சர், C. P. இராமசாமி ஐயரவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்தனர். சுவாமி விபுலானந்தர் தலைமை வகித்தார்கள். ௫௨ௗ சென்னை மாகாணத் தமிழர்மூன்றுவது மாகாநாடும், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவும் நடைபெற்றது. உயர்திரு, திவான்பகதூர் K. தெய்வசிகாமணி முதலியார் தலைமை வகித்தார்கள். ௧௧ௗ கொழும்பு, தனவைசிய இளைஞர் சங்கத்தின் மூன்றும் ஆண்டு விழா, புரோபசர், C. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையிலும் ௨௭ௗ நாச்சியார்புரம் சிவாஜி சங்கத்தின் முதலாவதாண்டு விழா, அண்ணமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர், உயர்திரு, S. சோமசுந்தரபாரதியார் தலைமையிலும், ஐப்பசி ௧௧ௗ தஞ்சை இராசராசேச்சரத்தில் ஸ்ரீ இராஜராஜன் சமய சங்கம், சைவத்திருவாளர், S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையிலும் நடைபெற்றன. எல்லாம் நல்ல முறையுடன் இனிது நிறைவேறின.

**தேசியக் கிளர்ச்சி:—** ஆவணி ௨௭ௗ உ. சிறுவயலில் பாரதிதினக் கொண்டாட்டமும், பலவான்குடியில் புரட்டாதி ௧௦ௗ காங்கிரஸ் பொதுக்கூட்டமும் ௨௦ௗ காந்தி ஜயந்தியும் ௨௯ௗ திருப்புத்தூர், குன்றக்குடி, காரைக்குடிமுதலான ஊர்களில் ஜவஹர்லால்விஜயமும் ஐப்பசி ௪, ௬ௗகளில் கும்பியோவில் மஹாத்மா காந்தி உடற்பயிற்சிசாலையின் முதல் ஆண்டுவிழா, உலகன்பட்டி, திருவாளர், பழ. சிவ. சிவராமன் செட்டியாரவர்கள் தலைமையிலும் நடைபெற்றன.

**மகா கும்பாபிஷேகம்:—** தியாகராஜ சுவாமி நல்லூரினின்று திருவாரூருக்கு எழுந்தருளிவரும் மார்க்கத்திலுள்ள திருமணக்கால் என்னும் திருத்தலத்தில் கணேச, ஸ்கந்த, சண்டேசசகித ஸ்ரீ சவுந்தர நாயகி சமேத அகத்தீசுவரருக்கு தேவகோட்டை திருவாளர், ராம. அரு. அரு. ராம. அருணுசலச் செட்டியாரவர்களால் புராதன ஆலயத்தைப் புதுக்கி இவ்வாண்டு ஐப்பசி ௧௨ௗ அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் ஆகம முறைப்படி சிறப்பாகச் செய்யப்பெற்றது.

# சிவநேசன்.

**கண்டார்சிபுரம்:—** புரட்டாதி சஉ விநாயக சதுர்த்திவிழா, கண்கொடுத்த விநாயகர், வரசித்தி விநாயகர் ஆலயங்களில் கொண்டாடப்பெற்றது. சஉ வரசித்தி விநாயகர் மூஷிகத்திலும், ருஉ கண்கொடுத்த விநாயகர் விமானத்திலும் திருப்பவனி கொண்டருளினர். கண் கொடுத்த விநாயகருக்கு திரு, அ. முத்தையபிள்ளையவர்கள் கூஉ விசேட அபிடேகலங்கார நிவேதன ஆராதனைகள் புரிந்து தாமரை மலர் நூற்றெட்டுத் தங்கரதத்தால் கொண்டு அர்ச்சித்தனர்; நூற்றெட்டு வகை நிவேதனம் செய்தனர். பிள்ளையவர்கள் பெருமான் திருவருளால் நிறைவுடன் இனிது வாழ்க. பெற்றோர் சங்கம் திருவாளர், நாட்டாண்மை ச. குப்புசாமி முதலியார் தலைமையில் நடைபெற்றது.

**மதுரை:—** ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் கார்த்திகைமீ சகூஉ திருக்கார்த்திகையன்று இலட்சதீப மகோத்ஸவமும், அதன்பின் சாந்தி மகாபிடேகமும் வழக்கம்போல் நடைபெறும். தீபப்பணம் அனுப்புவோர் மதுரை அம்மன் சந்நிதி அறுபத்துமூவர் குருபூஜை மடம், இலட்சதீப சுப. ராம. தெ. சுப்பிரமணியன் செட்டியார் என்ற விலாசத்திற்கு அனுப்புவார்களாக.

**விநாயக மகா சதுர்த்தி:—** குன்றக்குடியில் தோகையடி விநாயகருக்கு புரட்டாதி சஉ மகாபிடேகாலங்காராதிகளும் புட்பச் சப்பரத்தில் வெள்ளி மூஷிக வாகனத் திருப்பவனியும் திரு, சா. மல்லிகார்ச்சுனமையரால் சிறப்பாகச் செய்யப்பெற்று நிறைவேறியது.

தனவணிகர்களின் ஒன்பதுநகரசிவாலயங்களுள் இளையாற்றக்குடியில்ஒக்கூரார் பிள்ளையார் கோயிலிலும் பிள்ளையார்பட்டியில் கற்பக விநாயகருக்கும் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று புரட்டாதி சஉ நிறைவேறியது.

**தருமபூஷணம் முத்தையா செட்டியார்:—** பெரிய தருமப் பிரபுவாக சிவபுண்ணியசீலராக விளங்கிய இராமச்சந்திரபுரம் தீ. நா. முத்தையா செட்டியார் ஆவணி உசஉ உமைபாள்புரம் சிவாலயத்தில் விசேட அபிடேகாதிகள் நடாத்தி அங்கப்பிரதக்ஷணம் வந்து ஆவி துறந்து அரன் திருவடி நிழல் சேர்ந்தார்கள்.

**செங்குந்தர்மகாநாடு:—** அம்பாசமுத்திரத்தில் புரட்டாதி கஉ, சகூஉகளில் நடைபெற்றுச் சிறப்பாக நிறைவேறியது.

**பள்ளத்தூர்:—** ஐப்பசி சஉஉ பயோனீர் பாங்கின் கிளையொன்று உவந்த மாளிகையில் திறக்கப்பெற்று நடைபெறுகிறது.

திருவாளர், ராவ்பகதூர் உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியாரவர்கள் ஹைஸ்கூலில் அவர்கள் உள்ளூர் பஞ்சாயத் துப்போர்ட்டில் பதினைந்தாண்டுகள் தலைவராயிருந்து அரிய தொண்டாற்றியதற்காக நகரவாசிகள் பாராட்டு விருந்தும், இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் கனம் K. ராமுண்ணி மேனன் அவர்கள் தலைமையில் ஒரு உபசாரக் கூட்டமும் ஐப்பசி சஅஉயிலும், ஷை அருணாசலச் செட்டியாரவர்களால் ஆனரபிள், சர். சூர்யா, வேங்கடரெட்டி நாயுடுகாரு தலைமையில், ஆனரபிள் குமாரராஜா கனம் கல்வி மந்திரி மு. அ. முத்தைய செட்டியாரவர்களுக்குப் பாராட்டு விருந்து ஐப்பசி உ0உயிலும் நடைபெறும்.

**பதவிகள்:—** கனம் செட்டிநாடுராஜா அவர்களின் திருமகனாராகிய, குமாரராஜா முத்தைய செட்டியாரவர்கள் சென்னை மாகாண அரசியலில் கல்வி மந்திரியாக நியமனம் பெற்றுள்ளார்கள். பாராட்டு விருந்துகள் பல நடைபெறுகின்றன. தனவணிகநகரத்தார்களால் ஐப்பசி ருஉ காரைக்குடியில் பாராட்டு விருந்து பிரபலமாக நடைபெறும். சென்னைமா நகர் கார்ப்போரேஷனில் வர்த்தக சங்கத் தொகுதிக்காக திருவாளர், மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் அவர்களும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்காக கோட்டையூர் ராவ்பகதூர், திருவாளர், க. வீ. அள. ராம. இராமநாதச்செட்டியார் அவர்களும்நியமனம் பெற்றுள்ளார்கள்.

---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம, கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றிவெளியிடப்பெற்றது.